விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி 03 வியாழக்கிழமை (16.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 087

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

-இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

# தமிழர்கள் நீதியை பெற சர்வதேச பொறிமுறை

## அவசியம் என ஐக்கிய நாடுகள் சபையில் கஜேந்திரகுமார் நேற்று வலியுறுத்து



(ஜெனிவா)

இலங்கை மீதான போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறையினூடாக மட்டுமே தமிழர்களுக்கான நீதியை நிலைநாட்ட முடியும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஐ.நாவில் வலியுறுத்தியுள்ளார்.

04ஆம் பக்கம் பார்க்க....

## கலப்பு நீதிமன்றத்துக்கு இடமில்லை; நாங்கள் நினைத்ததையே செய்வோம்

### கால அவகாசம் எம்மை கட்டுப்படுத்தாது அரசு அறிவிப்பு



(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை செய்ய சர்வதேச மற்றும் கலப்பு நீதிமன்றங்களுக்கு இடமளிக்கமாட்டோம் என அரசாங்கம் மீண்டும் தெரிவித்துள்ளது.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் கருத்து தெரிவிக்கும் போதே மின்சக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தகு வள பிரதியமைச்சர் அஜித் பீ பெரேரா இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த பிரதியமைச்சர்,

இலங்கைக்கு எந்தவொரு சந்தர்ப்பத் திலும் சர்வதேச நீதிபதிகள்

24ஆம் பக்கம் பார்க்க....

## முற்றுப்புள்ளி அல்ல; முடியாத துயரம் அது

### ஈரம் கசியும் ஈழத் திரைப்படம்



24ஆம் பக்கம் பார்க்க....

## கனடா வர்த்தக குழுவினர் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு



24ஆம் பக்கம் பார்க்க....

புருசோத்தமன் எழுதும் தமிழரின் தலைவிதி எப்படியாகும்? கட்டுரை உள்ளே...

### வாள்வெட்டுச் சம்பவம்

## சந்தேகத்தின் பேரில் 5 மாணவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)


வாள்வெட்டுச் சம்பவம் ஒன்றுடன தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில், யாழ்.நகரிலுள்ள பிரபல பாடசாலையை சேர்ந்த 5 மாணவர்கள் யாழ்.பொலிஸாரால கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கைதுச் சம்பவம் நேற்றைய தினம் யாழ்.நகரில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக தெரிய

24ஆம் பக்கம் பார்க்க....

## பேருந்தில் கடத்தப்பட்ட 2 கிலோ கஞ்சா மீட்பு

### இருவர் கைது



24ஆம் பக்கம் பார்க்க....

## உயிரிழந்த இளைஞரின் உடலில் 6 வெளிக்காயம்; 16 உட்காயம் நீரில் மூழ்கி மரணித்திருக்கலாம்

### விசேட சட்ட வைத்திய அதிகாரி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் தடுப்புக்காவலில இருந்த போது உயிரிழந்த இளைஞனின் உடலில் 6 வெளிகாயமும் 16 உட்காயங்களும் காணப்பட்ட போதும் அவை மரணத்தை ஏற்படுத்தக் கூடிய காயங்களாக இருக்கவில்லை. ஆனால் அவர் நீரில் மூழ்கி உயிரிழந்தமைக்கான சான்றுகள் காணப்படுவதாக விசேட சட்ட வைத்திய அதிகாரி மன்றில் சாட்சியம் அளித்துள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி சுன்னாகம் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டு தடுப்பு காவலில் இருந்த இளைஞர் ஒருவர் விசாரணையின் போது

04ஆம் பக்கம் பார்க்க....

## நாடு கடத்தப்பட்ட 25 அகதிகள் நேற்றுக் கைது

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட 25 இலங்கை அகதிகள் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக நுழைந்து அவுஸ்ரேலியாவில் புகலிடம் கோரிய 25 இலங்கை அகதிகள் நேற்று இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## கண்ணீர் அஞ்சலி

யா/ வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலய அதிபர் திரு. J.யூட்மரியரட்ணம் அவர்களின் அன்புத் தாயார்


### திருமதி பிலுப்பாச்சி ஜேம்ஸ்

அவர்களது மறைவால் துயரடைந்துள்ள குடும்பத்தினர், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல ஆண்டவரை இறைஞ்சுகின்றோம்.

**கோட்டக்கல்வி அலுவலரும், அதிபர்களும், தெல்லிப்பழை கல்விக் கோட்டம்.**

(8328)


# 4 கைக்குண்டுகள் மீட்பு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கீச்சான்பள்ளம் கிராமத்தில், நான்கு கைக்குண்டுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

கீச்சான்பள்ளம் பிரதேசத்திலுள்ள காணியில் துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்த போது குறித்த கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த விடயம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்திற்கு சென்றுள்ள பொலிஸார் 4 கைக்குண்டுகளை மீட்டுள்ளனர்.

இந்நிலையில் நான்கு கைக்குண்டுகளும் பொலித்தீன் பைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், இவ்விடயம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)


## சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் [வ/து] கிளைக்குழுக்களை தெரிவு செய்தல் 19.03.2017 ஞாயிற்றுக்கிழமை

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் 19.03.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கீழ் குறிப்பிட்ட விபரப்படி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அறிவித்தலுக்கமைய நடைபெறவுள்ளது என்பதனை அறியத் தருகின்றேன்.

| தொடர் இல. | கிளை இல. | கிளைப் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01 | 50 | சங்கானை | தலைமைக் காரியாலயம் |
| 02 | 51 | நிற்சாமம் | சரஸ்வதி சன சமூக நிலையம், நிற்சாமம் |
| 03 | 52 | சித்தன்கேணி | கலைவாணி சன சமூக நிலையம், சித்தன்கேணி |
| 04 | 53 | காலையடி | சிறிராம் சன சமூக நிலையம், சுழிபுரம் |
| 05 | 54 | குடாக்கனை | அம்பாள் சன சமூக நிலையம், சுழிபுரம் |
| 06 | 55 | காளுவன் | தமிழ்த்தாய் சன சமூக நிலையம், திக்கரை |
| 07 | 56 | தொல்புரம் | கலைவாணி சன சமூக நிலையம், தொல்புரம் |
| 08 | 57 | பொன்னாலை | சிறி கண்ணன் சன சமூக நிலையம், பொன்னாலை |
| 09 | 58 | வட்டு.கிழக்கு | கலைவாணி சன சமூக நிலையம், துணவி |
| 10 | 59 | வட்டு. மேற்கு | ஐக்கிய இளைஞர் சன சமூக நிலையம், மூளாய் |
| 11 | 60 | அராலி. வடக்கு | பாரதி சன சமூக நிலையம், அராலி வடக்கு |
| 12 | 61 | அராலி மேற்கு | அம்பாள் கடற்றொழிலாளர் கூ.சங்கம், அராலி மத்தி |

மேற்படி கிளைப் பொதுச்சபை கூட்டங்களுக்கான அறிவித்தல்கள் அதன் அங்கத்தவர்களுக்கு தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. முகவரி மாற்றம் அல்லது வேறு காரணங்களால் அறிவித்தல் கிடைக்காதவர்கள் இவ் அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்றுக்கொண்டு கூட்டங்களுக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**15.03.2017**
**பிரதான வீதி,**
**சங்கானை.**

(8324)

**திரு.வ.முத்துராசா,**
**கௌரவ செயலாளர்,**
**பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்.**



## தையல் இயந்திரங்கள் தேவை

தையல் பயிற்சி வழங்குவதற்கு இயங்கும் நிலையிலுள்ள மனித வலு தையல் இயந்திரங்கள் (STAN MECHINE) தேவை. விற்பனைக்கு வைத்திருப்போர் தொடர்பு கொள்க.

(C-7820)

**077 914 3171**



## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

### அம்பலவாணர் சிவலோகநாதன்

திதி : அபரபக்க சதுர்த்தி (16.03.2017)

தோற்றம் : 27.11.1948

மறைவு : 27.03.2016

எங்கள் உயிர் அப்பாவுக்கு...
எங்களை அடையாளம் காட்டிவிட்டு
— எங்கே போனீர்கள் அப்பா
எங்கள் முகம் பார்க்காமல்
— போய்விட்டீர்களே
எங்கள் பாவத்தையோ வேதனையோ —
சொல்ல முடியவில்லை
எங்களை பார்க்கவோ நினைக்கவோ
இல்லையோ அப்பா
நாங்கள் என்ன பாவம் செய்தோம்!
நீங்கள் தானப்பா எங்களை தூர
இடம்விட்டு சென்றுள்ளீர்கள்!
இன்று உங்களைப் பார்க்க முடியாத
பாவியாகி விட்டோம்!
இன்று எங்களால் உங்கள் இழப்பை
தாங்கவே முடியவில்லை அப்பா
எங்களை பார்க்காமலே
போய்விட்டீர்களே அப்பா. அப்பா அப்பா
என்று அழுது அழுது எங்கள் வாழ்நாள்
போகுதப்பா கண்ணீரோடு மறுஜென்மம்
ஒன்று எங்களுக்கு இருந்தால்
எங்கள் அப்பாவுக்கு பிள்ளைகளாக
பிறக்கும் வரம் வேண்டும்.

சூராவத்தை,
சுன்னாகம்.

(8327)

இங்ஙனம் : குடும்பத்தினர்.



## சேவைநயப்பும், மணிவிழா வாழ்த்தும்



செல்வி

### கனகமணி வீரவாகு

(ஆசிரியை)

**அவர்கள் அகவை அறுபது கண்டு பணி ஓய்வு பெறுகின்றார்.**

காலம் கொடுத்த தந்த நல்லாசான் இவர்
சேவை முதிர்விலும் ஓயாத வேகமுடன்
முப்பதாண்டு கடந்தும் முனைப்புடன் பணி செய்தார்
மணிவிழாக் காணும் இவர் பணி ஓய்வு சிறக்க
வாழ்த்துகின்றோம்

கல்வி
ஆரம்பக்கல்வி : யா/கெற்பேலி அ.த.க.பாடசாலை
இடைநிலைக் கல்வி : யா/கச்சாய் அ.த.க.பாடசாலை
உயர்கல்வி : யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

பணிக்குறிப்பு
01) 16.01.1981 - 15.03.1990 தொண்டராசிரியர் கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க. பாடசாலை
02) 16.03.1990 இல் முதல் நியமனம் பெற்று 03.01.2011 வரை கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க. பாடசாலை
03) 04.01.2011 - 11.09.2012 வரை கிளி/பளை மத்திய கல்லூரி
04) 12.09.2012 - 15.03.2017 வரை கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க. பாடசாலை

(8325)

வாழ்த்துவோர் :

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள்.
புலம்பெயர் வாழ் மாணவ உறவுகள், நலன்விரும்பிகள்.

# மட்டக்களப்பில் கொடூரம்

# 4 வயதுச் சிறுவன் அடித்துக்கொலை

## வளர்ப்புத் தாய் கைது

(ஏறாவூர்)

மட்டக்களப்பு காத்தான்குடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குடா, மாதர் வீதியிலுள்ள வீடொன்றில் நான்கு வயதுச் சிறுவன் ஒருவன் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் அச்சிறுவனின் வளர்ப்புத் தாயை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வளர்ப்புத் தாயே சிறுவனை ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளார்.

எனினும், சிறுவன் வைத்தியசாலையில் அனு மதிக்கப்படும் முன்னதாகவே உயிரிழந்திருந்ததாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பில் காத்தான்குடிப் பொலிஸாருக்கு வைத்தியசாலை அதிகாரிகள் தகவல் வழங்கினர்.

இதனை அடுத்து, சிறுவனை வைத்தியசாலையில் அனுமதித்த அவனது வளர்ப்புத் தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிறுவனின் தலை மற்றும் முகத்தில் அடி காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது தெரிய வந்துள்ளது.

சம்பவம் இடம்பெற்ற வீட்டிற்குச் சென்று விசாரணை நடத்திய காத்தான்குடிப் பொலிஸாரும் மட்டக்களப்பு குற்றத் தடயவியல் பிரிவுப் பொலிஸாரும் அங்கிருந்து தடிகள் சிலவற்றை பொலிஸார் மீட்டுள்ளதுடன் மேலதிக விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். (இ-5)

## புதிய கட்சிகளுக்கான நேர்முகத்தேர்வு ஆரம்பம்

(கொழும்பு)

புதிய கட்சிகளுக்கான நேர்முகத்தேர்வு 28 ஆம் திகதியுடன் நிறைவடையும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இந்த நேர்முகத்தேர்வு நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பமானது என்றும் அவர் தெரிவித்தார் இந்தசுமூக தேர்வானது இவ்வாரம் முழுவதும் இடம்பெறும். நேர்முகத்தேர்வு நிறை வடைந்ததும், தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அக்கட்சிகள் பதியப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய கட்சிகளைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் இறுதி திகதி பெப்ரவரி மாதம் 28ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

அக்காலப்பகுதியில் 85 விண்ணப்பங்கள் கிடைத்தன என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## முன்னாள் மத்தியவங்கி ஆளுநரிடம் 7 மணித்தியாலங்கள் விசாரணை




(கொழும்பு)

மத்தியவங்கி பிணை முறிகள் தொடர்பில் முன்னாள் மத்தியவங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனிடம் மூன்றாவது நாளாக நேற்று முன்தினம் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டது.

தனது சட்டத்தரணிகளுடன் ஆணைக்குழு முன் ஆஜரான முன்னாள் ஆளுநரிடம் சுமார் ஏழு மணி நேரம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மத்தியவங்கி பிணை முறிகள் விற்பனையில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் ஆராய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை ஸ்தாபித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாரிய மோசடி தொடர்பான விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

மகிந்த அரசாங்கத்தின் ஆட்சியின் போது இடம்பெற்ற 10 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான மோசடிகள் தொடர்பான, 60 விசாரணை அறிக்கைகள், சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல் மோசடி தொடர்பில் கடந்த ஒரு வருடத்திற்கு அதிக காலம் நிதி மோசடி விசாரணை பிரிவினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதில் பத்தாயிரம் கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியிலான விசாரணை அறிக்கையில், நிறைவு செய்யப்பட்ட 60 ஆவணங்கள் சட்டமா அதிபரின் ஆலோசனை கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மகிந்த ஆட்சி காலத்தில் கோடிக்கணக்கான பெறுமதி யுடைய அரசாங்க சொத்துக்களை தவறாக பயன்படுத்திய, பாரிய அளவு ஊழல் மோசடிகள் தொடர்பான அறிக்கைகள் இதற்குள் உள்ளடக்கப்படுகின்றன.

அவற்றிற்குள் கடந்த காலங்களில் ஜனாதிபதி செயலகத்தின் வாகனங்கள், பணம் மற்றும் சொத்துக்களை தவறாக பயன்படுத்தியதற்கான அறிக்கை, ஜனாதிபதி செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட மேலும் பல மோசடிக்கான விசாரணை அறிக்கை, முன்னாள் அரசியல்வாதிகள், அமைச்சின் செயலாளர், பணிப்பாளர் சபை அதிகாரிகள் உட்பட பல்வேறு பதவி வகித்த அதிகாரிகள், அவர்களின் உறவினர்களினால் அரசாங்க சொத்துக்களை மோசடியான முறையில் பயன்படுத்தியமைக்கான பல விசாரணைகள் இதற்குள் உள்ளடங்கப்படுகின்றது.

இந்த விசாரணை மேற்கொள்ளும் போது நிதி மோசடி விசாரணை பிரிவு அதிகாரிகள் அந்த விசாரணைக்கான முறைப்பாடுகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களை உறுதி செய்து கொள்வதற்காக அதற்கான நிறுவனங்களுக்கு சென்று விசாரணைகளுக்கான தகவல் பெற்றுக் கொள்ளும் போது பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. விசாரணைகளின் போது நிறுவன அதிகாரிகளால் தகவல்களை மறைத்து வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையே இதற்கு காரணமாகும்.

நிதி மோசடி விசாரணை பிரிவு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பித்த விசாரணை அறிக்கைகளுக்கு, சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கும் வரை காத்திருக்கின்ற நிலையில் அந்த சட்டமா அதிபர் ஆலோசனை விரைவில் கிடைக்குமாயின் அதற்கான நடவடிக்கை களை நிறைவு செய்ய முடியும் என குறிப்பிடப்படுகின்றது. (இ-7)

## ஆயுள் கைதிகள் உணவுத் தவிர்ப்பு

(கொழும்பு)

தமது தண்டனையை குறைக்குமாறு கோரி வெலிக்கடை சிறைச்சாலையில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகள் சிலர் நேற்று முன்தினம் முதல் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

50 பேருக்கும் அதிகமான கைதிகள் காலைச் சாப்பாட்டையும், பகல் சாப்பாட்டையும் எடுக்கவில்லையென சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

இந்த கைதிகள் தங்களது நாளாந்த பணிகளிலும் ஈடுபடவில்லையெனவும் அவர் கூறியுள்ளார். (இ-7)

## போக்குவரத்துத்துறை எந்தவகையிலும் தனியார் மயப்படுத்தப்படமாட்டாது

### அமைச்சர் நிமால் உறுதி

(கொழும்பு)

போக்குவரத்து துறையை தனியார் மயப்படுத்தவோ விற்பனை செய்யவோ அரசாங்கம் ஒருபோதும் நடவடிக்கை எடுக்காது என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ரயில்வே திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



தொழிற்சங்கமும் பல்வேறு குழுக்களும் தமது நிலையைத் தக்க வைத்துக் கொள்வதற்காக முன்னெடுக்கப்படும் உண்மைக்குப் புறம்பான செய்திகளில் பொதுமக்கள் ஏமாந்து விடக்கூடாது என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

பிரதான கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்து வலுவான அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு பொதுமக்கள் ஆணை வழங்கினர் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதற்கான இந்த ஆணை வழங்கப்பட வில்லையென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## பசில் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான இரண்டு கோடியே 90 இலட்சம் ரூபா செலவில் மகிந்த ராஜபக்ஷவின் படத்துடன் 50 இலட்சம் நாட்காட்டிகள் அச்சிடப்பட்டமை உட்பட 5 குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ள வழக்கின் முதல் நபரான பசில் ராஜபக்ஷ பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் சந்தேக நபரை விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சந்தேக நபருக்கு எதிரான குற்றப் பத்திரிகை நேற்றுக் கையளிக்கப்பட்டதுடன், வழக்கு விசாரணைக்கான திகதி மே மாதம் 24 ஆம் திகதி நிர்ணயிக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டது.

இந்த வழக்கில் மற்றைய குற்றவாளியாக திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் கித்சிறி ரணவக்க நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவருக்கு இதற்கு முன்னர் பிணை வழங்கப்பட்டது. (இ-7)

# கால அவகாசம் வழங்குவதை வடக்கு சபை விரும்பவில்லை !

## உறுப்பினர் சிவாஜிலிங்கம் கருத்து

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை பேரவையில் இலங்கைக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்குவதை வடக்கு மாகாண சபையும் விரும்பவில்லை என உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை மீது சர்வதேச பொறிமுறை ஒன்றை உருவாக்கக் கோரும் வடக்கு மாகாண சபையின் தீர்மானத்தை ஜெனிவாவிற்கு நேரில் சென்று கையளிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று பிற்பகல் நான்கு மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை பேரவையில் கடந்த 2015 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு அமுல்படுத்த விரும்பாத நிலையில், சர்வதேச பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தக் கோரும் பிரேரணை ஒன்று வடக்கு மாகாண சபையில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்டிருந்தது.


இந்த பிரேரணை என்னால் கொண்டுவரப்பட்ட நிலையில் இரு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதற்கு எதிப்பு தெரிவித்த நிலையிலும், எதிக்கட்சி தலைவர் நடுநிலைமை வகித்த நிலையிலும், பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியிலும் தான் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த பிரேரணை மறைமுகமாக இலங்கை அரசாங்கத்திற்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்குவதனை ஏற்றுக்கொள்வதாக சிலரால் கூறப்படுகின்றது.

எனினும் வடக்கு மாகாண சபையும் இலங்கைக்கு கால அவகாசம் வழங்குவதனை விரும்பவில்லை. அந்த எண்ணத்திலும் இந்த தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. வடக்கு மாகாண சபை கடந்த காலங்களில் தமிழர்கள் மீது நடத்தப்பட்டது இனப்படுகொலையே என்ற தீர்மானத்தை பல்வேறு அழுத்தங்களையும் மீறி நிறைவேற்றி அதனை ஐக்கிய நாடுகள் சபைக்கும் அனுப்பியிருந்தது. இவ்வாறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்களை நிறைவேற்றிய வடக்கு மாகாண சபை, தன்னுடைய மக்களுக்கு எதிரான தீர்மானங்களை ஒருபோதும் நிறைவேற்றாது.

இந்த நிலையில் தான் வடக்கு மாகாண சபை பொறுப்புக்கூறல் பொறிமுறை ஒன்றை சர்வதேச ரீதியாக உருவாக்கக் கோரி ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளரை கோரும் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டு, கையளிக்கப்படவுள்ளது. இதனை நாளைய தினம் (இன்று) ஐ.நா மனிதவுரிமை ஆணையாளருக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கவுள்ளோம்.

இது தவிர நாளைய தினம் (இன்று) குறித்த தீர்மானத்தை கையளிப்பதற்காக ஜெனிவாவிற்கு நானும் பயணமாகவுள்ளேன் என உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (செ-4)

# பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் இலங்கை மெதுவான ஆரம்பம்



இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான 2வதும் இறுதியுமான டெஸ்ட கிரிக்கெட் போட்டியின் முதலாம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

கொழும்பில் இடம்பெற்று வரும் இப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய நேற்றைய நாள் ஆட்டம் நிறைவடையும் போது தமது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 238 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக தினேஸ் சந்திமால் 86 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்காமல் உள்ளார், தனஜ்சய டீ சில்வா மற்றும் நிறோஷன் டிக்குவெல ஆகிய இருவரும் 34 ஓட்டங்களை பெற்றனர்.

போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# புலிகளுக்கான நிதி சேகரிப்பு தீவிரவாதச் செயற்பாடே !

## ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் தீர்ப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக நிதி சேகரித்த நால்வர், தமது நடவடிக்கையை தீவிரவாதச் செயற்பாடு என்று வகைப்படுத்தக் கூடாது என்று ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் தொடுத்திருந்த வழக்கு நிராகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மோதல்களின் போது ஆயுதப்படைகளின் செயற்பாடுகளை தீவிரவாதம் என்று கருத முடியும் என ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் அறிவித்துள்ளது.

லக்சம்பேர்க்கை தளமாக கொண்ட ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் விடுதலைப் புலிகள் தொடர்பான வழக்கு ஒன்றிலேயே இந்த தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்தில் விடுதலைப் புலிகளுக்காக நிதி சேகரித்தார்கள் என்று குற்றம்சாட்டப்பட்ட நால்வர், டச்சு நீதிமன்றத்தினால் தமது நிதி முடக்கப்பட்டதை எதிர்த்து இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தனர்.

மனிதாபிமான பணிகளுக்காகவே தாம் நிதி சேகரித்ததாகவும், தீவிரவாத செயற்பாடுகளுக்காக அல்ல என்றும் அவர்கள் வாதிட்டிருந்தனர்.

அத்துடன் இலங்கையில் நடந்த மோதல்களில் விடுதலைப் புலிகள் அரசு அல்லாத ஆயுதப்படையாகவே பங்கேற்றதாகவும், எந்த அனைத்துலக பிரகடனங்களையும் மீறவில்லை என்றும் தெரிவித்திருந்தனர்.

மேலும் அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்களின் படியே தாம் நிதி சேகரிப்பில் ஈடுபட்டதாகவும், எந்தவொரு ஐரோப்பிய ஒன்றிய அல்லது அனைத்துலக தீவிரவாத எதிர்ப்புச் சட்டங்களின் கீழும் இது உட்படவில்லை என்றும் அவர்கள் தமது வாதத்தில் தெரிவித்திருந்தனர்.

இந்த வழக்கில் தீர்ப்பளித்துள்ள ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம், மோதல்களின் போது ஆயுதப்படைகளின் செயற்பாடுகளை தீவிரவாதம் என்று கருத முடியும் என குறிப்பிட்டு தீர்பை அறிவித்துள்ளது. (செ-11)

## 6 வெளிக்காயம்; ...

உயிரிழந்தமை தொடர்பான வழக்குடன் தொடர்புடைய அரச சாட்சிகளின் வாக்குமூலங்கள் நேற்றைய தினம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் யாழ்.மேல் நீதிமன்றில் பதிவுசெய்யப்பட்டது.

குறித்த சாட்சிய பதிவுகளின் போது விசேட சட்ட வைத்திய அதிகாரி கலாநிதி ரமேஸ் அழகியவன்ன சாட்சியமளிக்கையில், தடுப்புக்காவலில் இருந்த போது 2011.11.26 அன்று உயிரிழந்ததாக கூறப்படும் ஸ்ரீஸ்கந்தராசா சுமணன் என்பவருடைய பிரேத பரிசோதனை கிளிநொச்சி நீதவானின் கட்டளைக்கமைவாக 2011.11.28 அன்று பொலநறுவை போதனா வைத்திய சாலையில் மேற்கொண்டேன், குறித்த சடலத்தை முதலில் பார்க்கும் போது கறுப்பு நிற பொலித்தீன் உறையில் மூடப்பட்டிருந்தது. அத்துடன் ஈரத்தன்மையாகவும் இருந்தது. சடலத்தில் கடும் பச்சை நிற ரீசேட், கறுப்பு நிற ரவுசர் அணிந்து காணப்பட்டது. வலது மணிக்கட்டில் ஒரேஞ் நிற நூல் கட்டப்பட்டது. ரவுசரில் சேறு படிந்து காணப்பட்டது.

சடலத்தின் வெளிப்புறத்தில் 6 காயங்கள் காணப்பட்டன. அவை அனைத்தும் உராய்வுக்காயங்களாக இருந்தன. அதாவது இடது முழங்கைக்கு கீழ் உள்ள பகுதி, இடது மணிக்கட்டின் கீழ் பகுதி, இடது முதுகின் தோள்ப்பட்டை, வலது கையின் முழங்கைக்கு கீழ் உள்ள பகுதி, வலது மணிக்கட்டின் மேல் பகுதியில் குறித்த காயம் காணப்பட்டது. மணிக்கட்டில் கைவிலங்கு போடப்பட்டமைக்கு ஏற்றதுபோலான உராய்வு காயமும் காணப்பட்டது.

உள்ளகப்பரிசோதனை மேற்கொண்ட போது 16 காயங்களை அவதானிக்க முடிந்தது. அவை அனைத்தும் மொட்டையான ஆயுதத்தால் தாக்கப்பட்டது போன்ற கண்டல் காயங்கள், இடுப்பு, பிண்டம், முதுகு, இடது முழங்கையின் மேல், கீழ் பகுதி, மணிக்கட்டின் வெளிப்பகுதி, வலது இடது காலின் கீழ்ப்பகுதி, பாதத்தின் மேற்குதி, முழங்காலுக்கு கீழ் பகுதி, போன்றவற்றில் அண்ணளவாக 2 சென்ரி மீற்றர் தொடக்கம் 6 சென்ரி மீற்றர் வரையான கண்டல் காயங்களாக இருந்தது. இவை முன்புறமாக குனிந்து நிற்கும் போதும், கீழே பின்பக்கமாக விழும்போதும், ஓடிப் போகும் போது தாக்கப்பட்டமையால் ஏற்பட்ட காயங்களாக இருக்கலாம். ஆனால் மரணத்தை ஏற்படுத்தக் கூடிய காயங்களாக இவை இருக்கவில்லை.

கண்ணின் உட்புறத்தில் இரத்தம் உறைந்தும் சிறு இரத்த கசிவும் காணப்பட்டது. உடல் விறைத்த நிலையில் காணப்பட்டது. சுவாசப்பைகள் விரிவடைந்தும் இரைப்பை ஆயிரம் மில்லிலீற்றர் நீரில் நிரப்பப்பட்டும் காணப்பட்டது. கழுத்து தலை, மூளை பகுதிகளில் பாதிப்புக்கள் காணப்படவில்லை.

இரத்த மாதிரியை அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பி பரிசோதிக்கப்பட்டது. அதில் நச்சுத்தன்மைகள் எவையும் இல்லை என அறிக்கை கிடைத்தது. நீரில் மூழ்கியதாக கூறப்படும் இடத்தின் நீரையும் சடலத்தில் கால் எலும்பும் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி பணிமனைக்கு அனுப்பி வைத்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. நீரில் மூழ்கி உயிரிழந்தமைக்கு சந்தர்ப்பம் உள்ளது. அதற்கான சாத்தியம் இல்லை எனவும் கூற முடியாது என சாட்சியமளித்தார்.

22 ஆம் சாட்சியான சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சிறு குற்ற பிரிவில் கடமையாற்றிய உப பொலிஸ் பரிசோதகர் ஜெயரட்ண சில்வா சாட்சியமளிக்கையில்

2011.11.26 அன்று மாவீரர் தினம் ஆகையால் வெளியே ரோந்து நடவடிக்கையில் இருந்தேன். சந்தேக நபர்களை முற்படுத்த வேண்டும் வாகனத்தை கொண்டு வருமாறு பொலிஸ் நிலையத்தில் இருந்து அழைப்புவந்தது. அதன் படி 4 சந்தேக நபர்களை தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு சென்று பரிசோதனை செய்த பின்னர் மல்லாகம் நீதவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்தினேன்.

2011.11.27 ஆம் திகதி மேலதிக விசாரணை அறிக்கை ஒன்றை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தேன். அதில் 2011.11.22 அன்று வீடு புகுந்து கொள்ளையடித்த சம்பவம் தொடர்பில் 5 பேர் கைது செய்யப்பட்டு 4 சந்தேக நபர்கள் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர். மேலும் ஒரு சந்தேக நபரான சுமணனின் வாக்கு மூலத்தையடுத்து, தான் கொள்ளையடித்த ஆபரணங்கள் கிளிநொச்சி வட்டக்கச்சிப் குதியில் மறைத்து வைத்திருப்பதாக அறிந்து பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் 4 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேகநபரை அழைத்துக்கொண்டு கிளிநொச்சிக்கு புறப்பட்டனர்.

2011.11.26 ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் குறித்த சந்தேகநபர் பொலிஸ் காவலில் இருந்து தப்பி காட்டுப்பகுதிக்குள் சென்றுள்ளார். அவரை தேடிய பொலிஸார் 3 மணியளவில் குறித்த சந்தேக நபர் குளத்தின் அருகே சடலமாக இருப்பதை அவதானித்துள்ளனர். அவரை கிளிநொச்சி வைத்திய சாலைக்கு எடுத்து செல்லப்பட்ட போது மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பிரேத பரிசோதனை மேற்கொள்ள கிளிநொச்சி நீதவானுக்கு அறிவித்தல் பிறப்பிக்குமாறு மல்லாகம் நீதவானுக்கு அறிக்கை சமர்ப்பித்தேன் என சாட்சியமளித்தார்.

27 ஆம் சாட்சியான குற்றப்புலனாய்வு திணைக்கள பிரதான பொலிஸ் பரிசோதகர் சானக சில்வா மற்றும் 31 ஆவது சாட்சியான குற்றப்புலனாய்வு திணைக்கள பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா ஆகியோர் குறித்த விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பாக மன்றில் சாட்சியமளித்தனர். இதனையடுத்து வழக்கு தொடுநர் தரப்பு சாட்சிய பதிவுகள் அனைத்தும் முடிவுற்றதாக பிரதி மன்றாதிபதி குமாரரட்ணம் மன்றில் தெரிவித்திருந்தார்.

அரச சாட்சியங்கள் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் 1 தொடக்கம் 8 வரையான எதிரிகளுக்கு எதிராக முதல் தோற்றளவில் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளமையால் எதிரி தரப்பு விளக்கத்தை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி நடத்துவதற்கு நீதிபதி உத்தரவிட்டார். அது வரை எதிரிகளை விளக்கமறியலில் வைக்கவும் மன்றுகட்டளை பிறப்பித்துள்ளது. (செ-9)

## தமிழர்கள் நீதியை ...

ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐநா மனித உரிமை பேரவையின் 34 ம் அமர்வில் பங்கேற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று அங்கு உரையாற்றியிருந்தார், அவரது உரையின் தமிழ் வடிவம் வருமாறு,

ஐநா. மனித உரிமை பேரவையில் 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30/1 இலக்க தீர்மானமானது நிறைவேற்றப்பட்டவேளை, அத்தீர்மானமானது குற்றவியல் விசாரணையொன்றை கோரியிருந்த போதிலும், இலங்கை மீதான ஐநா அலுவலக விசாரணை அறிக்கையில் (இலங்கை தொடர்பில்) குறிப்பிடப்பட்டிருந்த முக்கியமான குறைபாடுகள் குறித்து ஆழமான கவனத்தை அந்த தீர்மானம் செலுத்தியிருக்கவில்லை என நாம் அதாவது நிறைவேற்றப்பட்டபோதே எச்சரித்திருந்தோம்.

நடைமுறை அர்த்தத்தில் வெறுமனே ஒரு உள்ளகப் பொறிமுறையாகவே இருக்கப்போகின்ற செயன்முறை, நம்பகத்தன்மையானது எனும் வெளித்தோற்றப்பாட்டைக் காட்டுவதற்காக மட்டும், "வெளிநாட்டு" ஈடுபாட்டை, அந்த 30/1 தீர்மானம் கோரிநின்றது என்பதையும் நாம் அப்போதே வெளிப்படுத்தியிருந்தோம்.

அத்தோடு, நீதியை வழங்குவதற்கான அரசியல் விருப்பானது, இலங்கை அரசாங்கத்துக்கு அறவே இல்லை என்பதையும் நாம் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டிவந்துள்ளோம்.

இந்நிலையில், 2015 மனித உரிமைப்பேரவை தீர்மானத்தில் கூறப்பட்டிருந்த ஆகக்குறைந்த கடப்பாடுகளிலிருந்தும் கூட, இலங்கை அரசாங்கமானது, உத்தியோகபூர்வமாகவே, விலகிநிற்கின்றது.

இவ்வாறு, ஐநா மனித உரிமை பேரவைத்தீர்மானத்தின் கடப்பாடுகளிலிருந்து இலங்கையை, விலகியிருக்கச்செய்யும் முயற்சிகள், இலங்கை அரசாங்கத்தின் அதிகாரப்படி நிலையில் உச்சத்தில் இருக்கின்ற ஜனாதிபதியினதும் பிரதம மந்திரியினதும் தலைமையிலேயே முன்னெடுக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஐநா தீர்மானத்தின் கடப்பாடுகளை வாய்மொழிமூலமாக நிராகரிப்பது மாத்திரமன்றி, அவற்றில் சொல்லப்பட்ட ஒன்றைத்தானும், இதுவரை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்பதே இங்கு மிக முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய விடயமாகும்.

இவ்வாறாக, ஐநா தீர்மானத்தை மிகத்தெளிவாக நிராகரித்து, அது தம்மை கட்டுப்படுத்தவே மாட்டாது என ஒரு அரசாங்கம் கூறும் போது, அந்த அரசாங்கத்துக்கு, மேலதிக கால அவகாசம் கொடுப்பதென்பது, பாதிக்கப்பட்ட மக்களின் பார்வையில், ஐநா மனித உரிமை பேரவையின்மீதான நம்பகத்தன்மையை மிகவும் பாதிப்புக்குள்ளாக்கும்.

இந்நிலையில், இலங்கையை சர்வதேச நீதிமன்றத்திற்கு பரிந்துரைப்பது அல்லது ஒரு விசேட தீர்ப்பாயம் ஒன்றை அமைத்து விசாரிப்பது போன்ற பக்கசார்பற்ற சர்வதேச நீதிவிசாரணைப்பொறிமுறை ஒன்றினூடாக மட்டுமே பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதியை நிலைநாட்டமுடியும் என நாம் மீளவும் வலியுறுத்திக்கூற விரும்புகிறோம் என கஜேந்திரகுமார் தனது உரையில் குறிப்பிட்டார். (செ-11)



வடமாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கரவெட்டி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்ட மனைப்பொருளியல் கண்காட்சி அண்மையில் மூத்த விநாயகர் கோவில் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் கண்காட்சியை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் உதவிப்பிரதேச செயலர் எஸ்.ராஜீவ் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினர் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: மகாலிங்கம்)




## இராசி பலன்

16.03.2017
(பங்குனி 03, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 1.05 மணிவரை
சுவாதி பின்னிரவு 12.26 மணிவரை
சுபநேரம் 7.50-9.20 மணிவரை
இராகுகாலம் 1.50-3.20 மணிவரை
சங்ஹடகர சதுர்த்தி விரதம்,
அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத.சுக் | செவ் | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்திரட்டாதி, ரேவதி | | • |
| | | | ராகு |
| | சனி | சந் | குரு |

**மேடம்** விருந்தினர் வருகையுண்டு, திருமண முயற்சிகள் வெற்றி தரும், ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை விலக்கும் சூழ்நிலை ஏற்படலாம்.

**இடபம்** உடல்நலம் சீராகும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் நன்மையுண்டு.

**மிதுனம்** சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்** நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கையானை வழிபட வேண்டிய நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், தொழில் மேன்மையுண்டு, தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**கன்னி** வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், வார்த்தைகளில் நிதானம் தேவை.

**துலாம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** காரியங்களில் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், உறவினர் வருகையுண்டு.

**தனுசு** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள் தொழில் சிறப்புகள் ஏற்பட லாம், உறவினர்களின் வருகை யால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் நன்மையுண்டு, புதிய முயற்சிகள் எளிதில் கைகூடும், போசன நன்மையுண்டு.

**கும்பம்** மகிழ்ச்சி அதிகரிக்க கண பதியை வழிபட வேண்டிய நாள், உயரதிகாரிகளின் ஆத ரவைப் பெறுவீர்கள், தடைப் பட்ட காரியங்களில் முன்னேற் றம் ஏற்படலாம்.

**மீனம்** குடும்பத்தினரிடையே கோப மாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற் படலாம், உஷ்ண சம்பந்த மான ரோக பயமுண்டு, பிர யாண பயமுண்டு.

# அதிகரித்துவரும் டெங்கு நோய் தாக்கத்தினை குறைப்பதற்கான விசேட வேலைத்திட்டம் யாழில்

(யாழ்ப்பாணம்)

அதிகரித்துவரும் டெங்கு நோயின் தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்று எதிர்வரும் 16.03.2017 முதல் 24.03.2017 வரை யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதிக நுளம்பு பெருக ஏதுவான இடங்களான அதிகளவாக வீசப்படும் பிளாஸ்ரிக் பொருட்களும் பொலித்தீன்களும் இனங்காணப் பட்டுள்ளன.

ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் இந்த விழிப்புணர்வுச் செயற்பாடு நடைபெறும். இச் செயற்பாடானது.

ஓர் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனை குறைப்புத் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலமாக ஆரம்பிக்கப்படும், இவ் ஊர்வலம் செல்லும் பாதையில் நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக உள்ள பொருட்கள் சேகரிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும். இவ் ஊர்வலம் செல்லும் பாதையில் விசேடமாக பிளாஸ்ரிக் பொருட்கள் சேகரிப்பதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டிருக்கும். இவ் ஊர்வலத்தின் போது நுளம்புப் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான விசேடமான தகவல்களும், பிளாஸ்ரிக் பொருட்களின் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் தொடர்பான தகவல்களும் வழங்கப்படும், இந்த பிரதேச பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் விசேட சிரமதானப்பணிகள் என்பன இடம்பெறும்.


இந்த திட்டமானது ஒருங்கிணைந்த பல்துறை சார் பங்களிப்புடன் இடம்பெறவுள்ளது.

இச் செயற்பாடானது ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் நடைபெறும் போது அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்புக்கள் வேண்டப்படுவதுடன் குறிப்பாக பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்களினதும் ஒத்துழைப்பு வேண்டப்படுகின்றது.

இதுபோன்ற பொதுமக்கள் மத்தியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திய விழிப்புணர்வு செயற்பாடு கடந்த மாதம் யாழ். மாநகரசபை பிரதேசத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது அதிகரித்துவரும் டெங்கு நோயினைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

நிகழ்ச்சித்திட்ட விபரம் திகதி - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை-இம் மாதம் 16 ஆம் திகதி சண்டிலிப்பாய், 17ஆம் திகதி தெல்லிப்பழை, 17ஆம் திகதி கோப்பாய், 18ஆம் திகதி சங்கானை, 21ஆம் திகதி உடுவில், 22ஆம் திகதி கரவெட்டி, 23ஆம் திகதி சாவகச்சேரி, 23ஆம் திகதி நல்லூர், 24ஆம் திகதி பருத்தித்துறை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது (இ-4)




# வீட்டுத்திட்டம் பெற்றுத்தருவதாகக்கூறி மோசடியில் ஈடுபடுவோரிடம் ஏமாறாதீர்கள் நல்லூர் பிரதேச செயலர் தெரிவிப்பு

நல்லூர் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பொது மக்களுக்கு இனம்தெரியாத நபர்களினால் தனிப்பட்ட நபர்களினுடைய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பினை ஏற்படுத்தி வங்கிக் கணக்கு இலக்கங்களை வழங்கி குறிப்பிட்ட பணத்தினை வைப்புச் செய்தால் வீட்டுத் திட்டத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும் என பொதுமக்களை ஏமாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்கிறார்கள் எனவும் பொதுமக்கள் எவரும் ஏமாற வேண்டாம் எனவும் அவ்வாறான அழைப்புக்கள் வரும் போது அவ்விடயம் தொடர்பாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு நல்லூர் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்துள்ளார். (இ

# நல்லூர் பிரதேச செயலகத்திற்கு தேசிய உற்பத்தித் திறன் விருது

2015 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித்திறன் விருது போட்டித் தொடர் அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் வழிகாட்டலின் கீழ் உள்ள தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு விருதுக்காக விண்ணப்பித்த நிறுவனங்கள் கள விஜயத்திற்குட்படுத்தப்பட்டு விருதுகள் பரிந்துரைக்கப்பட்டன.

மேற்படி விருதுகள் அரச பிரிவு, பாடசாலைப் பிரிவு, உற்பத்தி மற்றும் சேவைகள் பிரிவு என வகைப்படுத்தப்பட்டு முதலாம் இடம், இரண்டாம் இடம், மூன்றாம் இடம், விசேட திறமை, திறமை என விருதுகள் வழங்கப்படுகின்றன.

நல்லூர் பிரதேச செயலகம் தேசிய உற்பத்தித் திறன் விருது போட்டித் தொடர் 2015 இல் அரச துறைப் பிரிவில் கலந்து கொண்டு தேசிய உற்பத்தித் திறன் விருது - விசேட திறமைக்கான் பரிந்துரையினைப் பெற்றுள்ளது.

2014 போட்டித் தொடரிலும் விசேட திறமைக்கான பரிந்துரை கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற வட மாகாணத்திற்கான தேசிய உற்பத்தித் திறன் விருது வழங்கும் நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி கலந்து கொண்டு விசேட திறமைக்கான விருதினையும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார். (இ


# காரியாலயத் திறப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா சுகந்திரக்கட்சியின் யாழ்.மாவட்ட கோப்பாய் தொகுதிக் காரியாலய திறப்பு விழா இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் திறந்து வைக்கப்படவுள்ளது. குறித்த திறப்பு விழா நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

# சங்கடஹர சதுர்த்தி

யாழ்.வண்.வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சங்கடஹர சதுர்த்தி விரதம் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் ஆரம்பமாகி மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை இடம்பெற்று விநாயகப் பெருமான் வீதி வலமும் இடம்பெறும். (இ



தையிட்டி வடக்கு ஊறணி புனித அந்தோனியார் ஆலயத் திறப்பு விழா கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் பங்குத் தந்தை அருட்திரு அல்போன்ஸ் சசிகரன் மற்றும் ஊறணி பங்குத் தந்தை அருட்திரு ஜெயக்குமார் அடிகளார் ஆகியோர் நாடாவெட்டி திறந்து வைத்ததன் பின் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (படங்கள்:- தெல்லிப்பழை செய்தியாளர்)


# காந்தீயம் பெப்ரவரி இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வெளியீடான காந்தீயம் பத்திரிகையின் பெப்ரவரி மாத இதழ் வெளிவந்துள்ளது.

அண்மையில் மறைந்த திருகோணமலையைச் சேர்ந்த காந்தீயப் பற்றாளரும் சமூக சேவையாளருமான காந்தீய ஆசிரியர் பொ.கந்தையா அவர்களின் காந்தீயப்பணியைக் கௌரவிக்கும் முகமாக அன்னாரின் நினைவுச்சிறப்பிதழாக காந்தீயம் மலர்ந்துள்ளது. இவ்விதழில் க.செல்வக்குமாரன் எழுதிய ''கைராட்டையை அகிம்சை யின் சாதனமாக பயன்படுத்தி சுதந்திர பயண இலக்கினை அடைந்தவர் மகாத்மா காந்தி'' என்ற கட்டுரை, கவிஞர் மணி மன்றன் எழுதிய ''அகிம்சையின் தந்தை அண்ணல் காந்தி'' என்ற தலைப்பிலான கவிதை, ''காந்தீயச் சிந்தனை'' என்ற தலைப்புடன் ஆசிரியர் தலையங்கம், ''அணைந்தது காந்தீயச் சுடர்'' - காந்தி மாஸ்டருக்கு அஞ்சலி, செய்திகள் உட்பட பல விடயங்கள் அடங்கியுள்ளன.

இவ்விதழின் இலவசப் பிரதி ஒன்றைப் பெற விரும்புவோர் தமது சுய முகவரி எழுதப்பட்ட ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட தபாலுறை ஒன்றை ஆசிரியர் காந்தீயம், இல. 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ள முடியுமென்று அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பொதுச் செயலாளரும் காந்தீயம் ஆசிரியருமான எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவித்துள்ளார். (இ



நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு கடந்த 8 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது. பிரதேச செயலர் சி.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சிரேஷ்ட ஆசிரியர் நாகலிங்கம் கமலாவதி கலந்து கொண்டார்.



யாழ்.கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது.

04

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

தமிழர் தரப்பில் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளை- ஆயுதப் போராட்ட அமைப்பாக இருந்து பின்னாளில் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து அரசியல் கட்சிகளாக தங்களை ஆக்கிக் கொண்டவர்களை ஒன்றுசேர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தார்.

புலிகளின் இராணுவ பலத்தோடு அரசியல் பலமும் ஏற்பட வேண்டுமாயின் இத்தகையதோர் அமைப்பு தேவையென அன்று உணரப்பட்டது. கூட்டமைப்பு என்ற கூட்டை உருவாக்கும் போது அதில் அங்கத்துவம் பெற்றிருந்தவர்கள் புலிகளுக்கு நல்லவர்களாக தங்களைக் காட்டிக் கொண்டாலும் புலிகளின் மறைவுக்குப் பின் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் தனது சுயரூபத்தை முதலில் வெளிப்படுத்தினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது விடுதலைப்புலிகளால் ஆரம்பிக்கப்படவில்லை என்ற அவரின் மறுப்புத்தான் எடுத்த முதலாவது அவதாரம்.

விடுதலைப்புலிகளோடு சேர்ந்து நின்று அவர்களின் ஆலோசனைப்படி பொதுத்தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றப் பதவிகளைப் பெற்றவர்கள் வன்னியில் ஏற்பட்ட பெருஞ்சமரின்போது புலிகளைக் காப்பாற்ற இம்மியும் முயற்சித்தாரில்லை.

அதிலும் குறிப்பாக இரா.சம்பந்தரின் நோக்கமெல்லாம் விடுதலைப் புலிகளை மீள விடக்கூடாது என்பதாகவே இருந்தது.

தனக்கு மரண தண்டனை விதித்தவர்கள் இனி வாழக்கூடாது என்ற நினைப்பு சம்பந்தரிடம் இருந்ததேயன்றி விடுதலைப்புலிகள் இல்லாத தமிழரின் நிலைமை- எதிர்காலம் எப்படியாக இருக்கும் என்பதை அவர் கிஞ்சித்தும் நினைத்திலர்.

இங்குதான் இராமாயணத்து மந்தரையின் தொடர்பு தெரிகிறது. ஆம், இராமருக்குப் பட்டாபிஷேகம் நடைபெற ஆயத்தமான போது அதைத்தடுத்து நிறுத்தி இராமனைக் காடேக மந்தரை சூழ்ச்சி செய்கிறாள். இங்கோ புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஒரு இக்கட்டான சூழ்நிலைக்குள், மிக ஆபத்தான கட்டத்திற்குள், உலக நாடுகளின் சதி வலைக்குள் சிக்குண்டு இருந்தவேளை போரை நிறுத்த முயற்சிப்பது போல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை காட்டிக்கொண்டு சதி செய்தது.

என்ன செய்வது ஒரு பெரும் போர்த்தலைவன் அந்தரப்பட்டு நிற்கிறான். அவரின் உடனடித் தேவை யுத்த நிறுத்தம். போரின் தற்காலிக நிறுத்தம் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் உயிரைப் பாதுகாக்கும். விடுதலைப் புலிகளின் போராளிகளுக்கு மூச்சுவிட இடம்கொடுக்கும். இதற்காக கூட்டமைப்பின் தலைமையிடம் இருந்து ஏதேனும் தகவல்கள் வரும் என்ற நம்பிக்கையோடு சமர் நடந்து கொண்டிருக்கிறது.

எனினும் கதிரவன் கீழ்த்திசையில் எழுந்து மேற்றிசையில் மறைந்து போவதைத் தவிர வேறு எதுவும் நடக்கவில்லை.

போரை நிறுத்துவதில் கூட்டமைப்பின் தலைமை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை இறுதிக்கட்டத்திலேயே பிரபாகரனால் உணர்ந்திருக்க முடியும்.

விடுதலைப்புலிகள் தமக்கு மரண தண்டனை விதித்தவர்கள் என்பதால் அவர்கள் மீது சம்பந்தருக்கு தீராத ஆத்திரம் ஏற்பட்டது எனலாம்.

அவ்வாறாயின் மாவை. சேனாதிராசாவேனும் சம்பந்தரை உசுப்பேற்றி ஐயா, பெரியய்யா யுத்தத்தை நிறுத்த ஏதேனும் வியூகம் அமையுங்கள். இந்தியாவோடு கதையுங்கள். அமெரிக்காவிடம் கேளுங்கள். எங்கள் உறவுகள் கொல்லப்படுகின்றனர். இந்த நேரத்தில் போரைத் தடுக்காமல் விட்டால், எங்கள் இனம் அழிந்து விடும் என்றெல்லாம் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் மாவை சேனாதிராசா அதைச் செய்யாதது ஏன்? என்ற கேள்வி எழும்.

இங்குதான் புலிகள் மீதான மாவையின் கோபம் மெலெழுகிறது. விடுதலைப்புலிகளின் காலத்தில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் மாவை. சேனாதிராசாவுக்குக் கிடைத்த வாக்குகள் அவருக்கு எம்.பி. பதவியைக் கொடுக்கப் போதுமானதாக இருக்கவில்லை. இஃது மாவை. சேனாதிராசாவுக்கு மிகுந்த மனக்கவலையை ஏற்படுத்தியிருந்தது.

எனினும் அப்போது யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த வாயுபுத்திரனிடம் இதுபற்றி மாவை முறையிட ஒரு மாதிரியாக மாற்றங்கள் செய்து புகைப்பரிசோதனையின் போது தரப்படும் **பாஸ்** என்ற பத்திரம் போல, பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைக்கச் செய்யப்பட்டது. இச்செயல் அப்போது மாவை சேனாதிராசாவுக்குத் திருப்தியைக் கொடுத்ததாயினும் தனக்குக் குறைந்த வாக்குகள் கிடைப்பதற்கு விடுதலைப்புலிகளே காரணம் என்றும் புலிகள் தமக்கு வேண்டியவர்களுக்கு வாக்குகளைப் போடச் செய்து தனக்கு அநீதி இழைத்து விட்டனர் என்றும் எதிர்காலத்தில் இவர்கள் மிகவும் மோசமாக நடக்கக்கூடும் என்ற ஐயத்தாலும் விடுதலைப்புலிகள் மீது மாவை. சேனாதிராசாவுக்கு மிகுந்த கோபம் இருந்தது உண்மைதான்.


எனினும் இது பற்றி அவர் எந்த வகையிலும் வெளிப்படுத்தாமல் இருந்தது மிகப்பெரிய இராஜ தந்திரம்.

எது எவ்வாறாயினும் வன்னியில் நடந்த இறுதி யுத்தத்தின்போது வன் னியில் நடந்த அழிவுகள் தொடர் பில் மாவை. சேனாதிராசாவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தொலைபேசிமூலமாக கண்ணீர் விட்டு அழுது தமது கவலையைப் பதிவு செய்து கொண்டதான தகவல்கள் மட்டுமே மிஞ்சியுள்ளன.

இஃது ஒரு கழிவிரக்கமாக இருந்தாலும் கடந்த தேர்தலின் போது மாவை. சேனாதிராசாவின் தேர்தல் பிரசாரத்திற்கு இச்சம்பவம் பெறுமதி சேர்த்தது என்பது மட்டும் உண்மை.

அவர் அப்படிச் செய்தார், இவர் இப்படிச் செய்தார் என்று நாம் கூறுவதெல்லாம் அரசியலைப் பொறுத்தவரை சதித்திட்டங்களாகவும் இராஜதந்திர நடவடிக்கைகளாகவும் இருக்கலாம்.

ஆனால் இதெல்லாம் தெய்வீகத்தின் அடிப்படையில் நின்று பார்க்கும்போது எல்லாமும் கன்மவினையின் பாற்பட்டது என்று சொல்வதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.



ஆம், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் சம்பந்தரை நம்பியது, சம்பந்தரின் கதையைக் கேட்டு ஆனந்தசங்கரியை வெறுத்தது, பின்னாளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளியேறியது இவற்றையெல்லாம் பார்க்கும்போது எங்கள் தலைவிதி நல்லதாக இல்லை என்பதை மட்டும் உணரமுடியும்.

(வளரும்)

**அன்பு வாசகர்களே!**
**இக்கட்டுரை தொடர்பில் உங்களின் கருத்துக்களை இவ்விடத்தில் பதிவு செய்து கொள்ள முடியும்.**

-புருசோத்தமன்-

## புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(மல்லாவி )

மன்னார் மாவட்டத்தில் இருந்து நடப்பாண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள 150 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இறம்பைக்குளம் ஈஷி பூரண சுவிஷேச சபையின் ஆயர் பி.எம்.இராஜசிங்கம் தலைமையில் அண்மையில் நானாட்டான் கலாசார மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந் நிகழ்வு, மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட நானாட்டான், அரிப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களில் உள்ள மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதான பேச்சாளர் ஜே.அலன் நீல், பிரதான ஆயர், ஐக்கிய அமெரிக்கா எலியாவின் அப்பம் மிஷன், பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் பாலியக்கார, நானாட்டான், அரிப்பு பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இறுதியில் வன்னி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பொலிஸ் நிலையங்களின் தேவை கருதி கணனிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (2-15)

## முல்லையில் போராட்டம் தீர்வின்றித் தொடர்கின்றது






(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளினால் முன்னெடுக்கப்படும் தொடர் போராட்டம் நேற்று 8 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப் பட்டது.

இத் தொடர் போராட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக வீதியின் அருகாமையில் கொட்டகைகள் அமைக்கப்பட்டு இரவு பகலாக நடைபெற்று வருகின்றது.

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் என பலரும் வருகை தந்து இந்தப் போராட்டத்திற்கு வலுச் சேர்த்தனர். (2-281-15)

வன்னி வலம்

## காணி உரிமையாளரின் உறவினர் பன்னங்கண்டி மக்களை சந்தித்தார்

### சிறந்த தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதிமொழி



பன்னங்கண்டி கிராமத்திற்கு விஜயம் செய்த வைத்தியர் மாலதி மக்களுடன் உரையாடி அவர் களின் வீடுகளுக்குச் சென்று நிலைமைகளை நேரில் கண்டு கொண்டதோடு தான் தனது சிறிய தந்தையான பசுபதியுடனும் ஏனைய உறவினர்களுடனும் கலந்தலோசித்து ஒரு சில நாட்களுக்குள் நல்ல தீர்வை பெற்றுத் தருவதாகவும் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

(பரந்தன்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட் பட்ட பன்னங்கண்டி மக்களின் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் முடிவுக்கு வரும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் தெரிய வருவதாவது,

காணி அனுமதிப்பத்திரம், வீட்டுத்திட்டம் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோரி நேற்றுடன் 12 நாட்களாக தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த மக்களை காணி உரிமையாளரான சிவா பசுபதியின் சகோதரனின் மகளான திருமதி வைத்தியர் மாலதிவரன் பன்னங்கண்டி கிராமத்திற்கு நேரில் சென்று மக்களை சந்தித்து அவர்களின் நிலைமைகளை அறிந்து கொண்டுள்ளார்.

இருப்பினும் பன்னங்கண்டி மக்கள் போராட்டத்தை கைவிடாது தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். (2-312-15)

## விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களின் நலன்கருதி மைதானம் துப்புரவு

### உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் இணைந்து செய்தனர்



(குருமன்காடு)

வவுனியா நகரசபை மைதானத்தில் முட்செடி , தொட்டாச்சினுங்கிச் செடி ஆகியன காணப்பட்டதையடுத்து வலயமட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு ஆபத்து ஏற்படாவண்ணம் மைதானத்தை துப்புரவு செய்யும் பணியில் உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோர் நேற்று முன்தினம் ஈடுபட்டிருந்தனர்.

வவுனியா நகரசபையின் பொறுப்பற்ற செயற்பாடே மைதானம் சீரழிந்து செல்வதற்கு காரணம் என விளையாட்டு வீரர்கள் பலரும் குற்றம் சாட்டியிருந்தனர்.

வவுனியாவில் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வலய மட்ட விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் நகரசபை மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் பின் தங்கிய பல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் உட்பட சுமார் 2 ஆயிரம், 3 ஆயிரம் வரையிலான மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நிலையில் விளையாட்டு நிகழ்வுகளுக்காக மைதானத்திற்கு சென்ற போது அங்கு சிறிய முட்செடிகள், தொட்டாச்சினுங்கி செடி ஆகிய செடிகள் மைதானத்தின் விளையாட்டுச் சுவடுகளின் குறிப்பிட்ட சில பகுதிகளில் பரவலாக காணப்பட்டுள்ளது.

இது விளையாட்டில் ஈடுபடும் மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என கருதிய உடற்கல்வி ஆசிரியரகள் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் தாமே மண் வெட்டிகளைப்பெற்று அவற்றை வெட்டி அகற்றி மைதானத்தை சுத்தம் செய்தனர். இதன் பின்னரே விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

ஒரு நாளுக்கு வாடகை ஆயிரத்து 750 ரூபாயும், சுத்தமாக்குவதற்கு என இரண்டாயிரம் ரூபாயும் நகர சபை யால் அறவிடப்படுகின்றது. ஆனால் அதற்கு ஏற்ற வகையில் மைதானம் சீராக இல்லை என பலரும் குற்றம் சாட்டியுள்ளனர். (2-250)

## 24 ஆவது நாள்

## பொதுத் தேர்தலில் வாக்குகளைப் பெற்ற அரசியல்வாதிகள் மௌனித்து இருப்பது ஏன்?

### கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கேள்வி



(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் விடுதலையையும் வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கடந்த மாதம் 20 ஆம் திகதி காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்பு 24 ஆவது நாளாகவும் நேற்று தொடர்ந்தது.

அம் மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவர்கள் கொல்லப் பட்டிருக்கலாம்; அல்லது வேறு நாட்டிற்கு அடைக்கலம் பெற்றுச் சென்றிருக்கலாம் என்ற கருத்தை முன் வைத்து இருக்கின்றார்.

இப்படியானகருத்தைஅவர் முன்வைத்திருப்பதனால்வெளி நாடுகளுக்கு அடைக்கலம் தேடிச்சென்றவர்களின் பெயர் பட்டியலை அவர் வெளியிட வேண்டும்.

இல்லாவிடின் பொறுப்பற்ற விதத்தில் பதில் கூறுவதை நிறுத்த வேண்டும். இன்று காணாமல் போனவர்களின் உறவினர்களின் அவலம் வடக்கில் படு மோசமாகவுள்ளது.

நல்லாட்சி ஏற்படுத்தித் தருகின்றோம். ஜனநாயக ரீதியான செயற்பாடுகளை உருவாக்கித் தருகின்றோம். இராணுவத்திடமிருந்து நிலங்களை மீட்டுத் தருகின்றோம். காணாமல் போனவர்களை கண்டறிந்து தருகின்றோம் என பல விடயங்களை கூறி பொதுத் தேர்தலிலே வாக்குகளை பெற்றுக் கொண்ட தமிழ் அரசியல்வாதிகள் இன்று மௌனித்து போயுள்ளார்கள்.எனவே சம்பந்தப்பட்டவர்கள் மனச்சாட்சியைத் தொட்டுப் பார்த்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு ஏதாவது ஒரு நியாயத்தை பெற்றுக் கொடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றனர். (2-15-312)

‘எமது காணியை கையகப்படுத்தியுள்ள இராணுவமே வெளியேறு’

15 ஆவது நாள்

# எமது பூர்வீக நிலத்தில் குடியேறினால் மட்டுமே போராட்டத்தை கைவிடுவோம்





(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு பூர்வீக கிராமத்தை விடுவிக்கக்கோரி மக்கள் முல்லைத்தீவு இராணுவ படைக்கட்டளைத் தலைமையகத்திற்கு முன்பாக முன்னெடுத்துவரும் மண் மீட்பு போராட்டம் நேற்று 15 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டம் மழை, வெயில் பாராது இரவு பகலாக தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

தாம் பல்வேறு கவனயீர்ப்புப் போராட்டங்களை நடத்தியுள்ள போதிலும் எது விதமான தீர்வும் முன்வைக்கப்படவில்லை.

. இந் நிலையில் தமது சொந்தக் காணிக்குள் குடியேறினால் மட்டுமே போராட்டத்தை கைவிடுவோம் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை போராட்டத்தை குழப்பும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருவதாகவும் அம் மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

தமது கட்டளைத் தலைமையகத்திற்கு முன்பாக அமர்ந்திருப்பதால் தமது அமைதிக்கு இடையூறு எனக் கூறி பொலிஸாரையும் இணைத்துக் கொண்டு வழக்குப் பதிவு செய்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார். (2-281-15)




## காணாமல் போனோரின் கதி என்ன?

# உறவுகளை மீட்பதற்கான போராட்டம் தொடர்கின்றது

### 20 ஆவது நாளாக நேற்றும் வவுனியாவில்





(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர் தொடர்பில் தீர்வு கிடைக்க வேண்டுமென வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவரின் உறவுகளால் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இப் போராட்டம் வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக ஏ-9 வீதியின் அருகில் நேற்று 20 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சியாக தாம் அரசினால் ஏமாற்றப்பட்டு வருகின்றோம். காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு முடிவு சொல்ல வேண்டும்.

இதேவேளை உறவுகளினால் முன்னெடுக்கப்பட்டுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் அரசியல் கைதிகளுக்கு நீதி வழங்குமாறு கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக்கு தபாலட்டைகளை அனுப்பி வைக்கும் முகமாக பொது மக்களிடம் இதுவரை சேகரிக்கப்பட்ட கடிதங்களில் இருந்து தினசரி ஆயிரம் கடிதங்களை அனுப்பும் போராட்டத்தையும் அவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

கொட்டும் மழையை பொருட்படுத்தாது மன வைராக்கியத்துடன் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (2-250)

# நொச்சிக்குளம் மக்களைச் சந்தித்து அடிப்படை பிரச்சினைகளை ஆராய்ந்தார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர்



வவுனியா வடக்கு அனந்தர் புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள நொச்சிக்குளம் மீள்குடியேற்ற கிராம மக்களை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் அண்மையில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது அங்கு மீள் குடியேறியுள்ள குடும்பங்கள் எதிர்நோக்கும் அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது மக்கள் பின்வரும் விடயங்களை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

கிராம அபிவிருத்தி சங்கம், கமக்காரர் அமைப்பு, மாதர் சங்கம் என்பனவற்றின் உருவாக்கம், நொச்சிக்குளம் முத்துமாரி வித்தியாலய பாடசாலைக்கான அடிப்படை வசதிகளை பெறல், மலசல கூடம், குடிநீர் வசதி, உள்ளக வீதிகள் புனரமைப்பு என்பன தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது அமைச்சர் பிரதேச சபை செயலாளருடன் கலந்துரையாடி ஒரு வாரத்திற்குள் முக்கியமான வீதியாகிய பழையவாடி - நொச்சிக்குளம் வீதி திருத்தம் செய்ய உறுதியளிக்கப்பட்டது.


முன்பள்ளி மற்றும் பாடசாலையில் ஆசிரியர் இன்மை, அத்துடன் பகுதிநேர ஆசிரியருக்கான கொடுப்பனவு, வீட்டுத்திட்டம் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர் படிப்படியாக மக்களின் குறைகள் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்தார்.

இந்தக் கூட்டத்தில் சுகாதார அமைச்சருடன் முன்னாள் வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர் பூபாலசிங்கம், அமைச்சரின் இணைப்பாளர் பா.சிந்துஜன், நொச்சிக்குளம் பாடசாலை அதிபர் ஆகியோர் உட்பட கிராம மக்களும் கலந்து கொண்டிருந்தனர். (2)

# உறவுகளின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி வவுனியாவில் பேரணி



வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதற்காக பேரணியொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வின் பின்னர் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் சீடோ அறிக்கையகத்திற்கான பெண்கள் ஒன்றியம் என்பன இணைந்து குறித்த பேரணியை ஏற்பாடு செய்திருந்தன.

அரசியல் கைதிகளின் விடுதலை, அவசரகாலச் சட்டத்தை உடனே இரத்துச் செய், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு பதில் கூற வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோர் தமது நியாயமான போராட்டத்திற்கு நேரில் வந்து வாக்குறுதி அளிக்கும் வரையில் தமது போராட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அவர்கள் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக்கூறி பண மோசடியில் ஈடுபட்ட பெண் 14 நாட்கள் விளக்க மறியலில்

(குருமன்காடு)

வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்புவதாகத் தெரிவித்து பலரிடம் பண மோசடி செய்த பெண் ஒருவரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மூனாமடு பகுதியைச் சேர்ந்த மோகன் சாந்தினி ஹரணி (வயது-39) என்ற பெண்ணொருவர் வெளிநாட்டிற்கு அனுப்புவதாகத் தெரிவித்து 40 இலட்சத்திற்கு அதிகமான பணத்தை பலரிடமும் பெற்றுள்ளார்.

அதில் சிலர் தமது பணத்தைத்திருப்பிக் கேட்டுள்ளனர். எனினும் ஒருவருக்கு காசோலை மூலம் சிறு தொகைப்பணத்தை வழங்கியுள்ளார்.

குறித்த நபர் வங்கி சென்றபோது வங்கியில் பணம் இல்லை என்பது தெரிய வந்துள்ளது. இதையடுத்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்து நேற்று முன்தினம் காலை பொலிஸாரால் குறித்த பெண்மணி கைதானார்.

விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் மாலை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-250)

# முது கலைஞர்கள் கௌரவிப்பும் இளைய கலைஞர்கள் ஊக்குவிப்பும்



வட்டுவாகல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் முது கலைஞர்கள் கௌரவிப்பும் இளைய கலைஞர்கள் ஊக்குவிப்பு நிகழ்வும் வன்னி மேம்பாட்டு பேரவை மற்றும் பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் புன்னகை அமைப்பு மற்றும் குமாரசாமி கேதீஸ்வரனின் நினைவாக சன்னதி பாக்கியநாதனின் நிதிப்பங்களிப்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் கந்தையா சிவநேசன், பிரதேச செயலாளர் குணபாலன், வன்னி மேம்பாட்டு பேரவைத் தலைவர் தவராசா, புன்னகை அமைப்பின் தலைவர், கரைதுறைப்பற்று கலாசார பேரவை தலைவர் கமலகாந்தன், இராஜலட்சுமி மற்றும் உறுப்பினர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், கிராமசேவையாளர், வட்டுவாகல் சப்தகன்னியர் ஆலய பூசகர் மற்றும் கலைஞர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (2)

# பாடசாலைகளில் ஒழுக்க விழுமியங்களை பேணுதலும் நடைமுறைப்படுத்துதலும்





கல்வித் தரிசனம்

சமகால சமூகச் சூழலில் இடம்பெற்று வரும் விரும்பத்தகாத செயற்பாடுகள் எல்லோரது மனங்களையும் துன்பப்பட வைத்துள்ளன. நடமாடக் கூடிய அமைதியான சூழல் இல்லாமல் போனது ஏன்? என்பது பற்றி சிந்திக்கத் தோன்றுகிறது. வன்முறைகள், துஷ்பிரயோகங்கள், அடிதடிகள், வாள் வெட்டுக்கள், வழிப்பறிகள், ஏமாற்று வித்தைகள், மோசடிகள் என சமூக விரோத செயற்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றன.

இவைபற்றிய சிந்தனைகள், செயற்பாடுகள் பற்றி பெரிதும் அக்கறை கொள்வதாக எதுவும் தெரியவில்லை. பத்திரிகைகளில் செய்திகளைப் பார்ப்பதோடு எல்லோரும் அடங்கி விடுகிறார்கள். சமூகப் பொறுப்புள்ளவர்கள், சமூகத்தைப்பற்றி கவலைப்படுகிற வர்கள் ஒன்றிணைந்து சமூகத்திற்கு அறிவூட்டக் கூடிய வேலைத்திட்டங்களில் ஈடுபட வேண்டிய அவசர தேவை இன்று ஏற்பட்டுள்ளது.

இத்தகைய சூழலில் பாடசாலைகளில் ஒழுக்க விழுமியங்களை பேணுதலும் பாதுகாத்தலும் தொடர்பாக சிந்திக்க வேண்டியுள்ளது. ஏனெனில் எதிர்கால சமூகத் தலைவர்கள் அங்கு உள்ளார்கள். அவர்களை நெறிப்படுத்த வேண்டியதும் பாதுகாக்க வேண்டியதும் இன்று அனைவரது பொறுப்பாகும்.

ஒழுக்கம் என்றால் என்ன? ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனதும் நடத்தை, பழக்க வழக்கங்கள், உளவியல்சார் நடத்தைக் கோலங்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியது ஒழுக்கம் எனலாம்.

ஒழுக்கம் என்பது ஒரு தனிநபர் தன் நடத்தைக் கோலங்களை தனது சொந்த இலட்சியங்களையும் குறிக்கோள்களையும் அடையும் பொருட்டு தன்னைச் சுற்றியுள்ள சமுதாயத்தின் தேவைகள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றை நிறைவு செய்யும் வகையில் தானாகவே ஒழுங்குபடுத்திக் கொள்ளும் செயற்பாடுகளைக் குறிக்கும். ஒருவர் தன்னை அக ரீதியாகவும் புற ரீதியாகவும் சுயகட்டுப்பாட்டுடன் செயற்படுபவதைக் குறிக்கும்.

சமூகத்தோடு இசைந்து பொருந்தி வாழ்வதற்கான நடத்தையைப் பெற ஒழுக்கம் உதவுகிறது. நல்லொழுக் கங்களை பேணுவதன் மூலமே வாழ்க்கையில் பெறுமானம் உள்ளவனாக மனிதன் மாறுகிறான். இதனையே "வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்" என தமிழ் மறை குறிப்பிடுகின்றது. சமூகத்தோடு இசைந்து பொருந்தி வாழ்வதற்கான நடத்தையைப் பெற ஒழுக்கம் உதவுகின்றது.

பாடசாலைகளில் ஒழுக்கத்தை பேணுவது தொடர்பாக கல்வி அமைச்சு இதுவரை பல சுற்றுநிருபங்களை வெளியிட்டுள்ளது. மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகள் வழங்குவது தொடர்பாக 21.08.1961-1961/26, பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பாதுகாப்பது 30.03.2001-2001/11, பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பாதுகாத்தல் 11.05.2005-2005/17, பாடசாலையில் ஒழுக்கம் பேணுதல் 29.04.2016-12/2016 இச் சுற்றுநிருபங்களின் கிடைப்பனவு, நடைமுறைப் படுத்துதல், வழிகாட்டல்களைப் பின்பற்றுதல், உரிய கட்டமைப்புகளை உருவாக்குதல், பொறுப்புக்களை வழங்குதல், கண்காணிப்பு செய்தல், அறிக்கைகள் பேணுதல், நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் போன்ற செயலாற்றுகை விடயங்கள் நடைமுறையில் எவ்வாறு உள்ளதென்பது ஆய்வுக் குரிய விடயமாகவுள்ளது. இதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

எதிர்காலத்துக்குரிய சிறந்த பிரஜைகளை உருவாக்கும் பாடசாலைகள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கல்வி கற்கும் மாணவர்களுக்கு அறிவு, திறன்கள் என்பதனை வழங்குவது மட்டுமன்றி சமூக ஒழுக்க விழுமியங்களுடன் வாழ்வதற்குத் தேவையான சிந்தனைகள், ஒழுக்க விழுமியங்களை விருத்தி செய்வதற்கும் தேவையான செயற்றிட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும்.

தமது சமூகத்திற்கு உரித்தான பண்பாட்டுச் சிறப்புக்களை எதிர்கால சந்ததியினருக்கு உரிமைச் சொத்தாக வழங்குவதும் சிறந்த ஒரு நேர்ப்பாங்கான சூழலைப் பேணுவதற்குத் தற்கால மாணவ சந்ததியை எதிர்கால உலகத்திற்கு பொருத்தமான வகையில் தயார்படுத்துவதே ஒரு சமூக நிறுவனம் என்ற வகையில் பாடசாலைகளுக்கு பொறுப்பளிக்கப்படும் முக்கிய பணி ஆகும்.

மாணவர்கள்சமூகத்தினுள் ஒழுக்கத்தைப் பேணும் வகையில் சமூகத்தில் மற்றவர்களின் உணர்வு களை, எதிர்பார்ப்புகளை உரிமைகளை, சுதந்திரங்களைப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்ப வாழ்வதற்கு பொருத்தமான வகையில் கருத்துக்கள் மற்றும் நற்பண்புகளில் பயின்றவர்களாக உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை பாடசாலையின் தமது வருடாந்த செயற்றிட் டங்களில் உள்ளடக்க வேண்டியது அவசர தேவையாகும்.

தற்கால சூழல் சிக்கல் நிறைந்ததாக மாறியுள்ளது. பின்வரும் அம்சங்களை நாம் அவதானிக்கலாம்.

1. சிக்கலான புதிய சமூக கட்டமைப்பு.

2. 30 வருட யுத்த கால வடுக்களின் தாக்க விளைவுகள்.

3. புலம்பெயர்வு, அகதி முகாம் வாழ்க்கை, சொந்தக் கிராமங்களை இழந்த நிலைமைகள், புதிய குடும்ப உறவுக் கட்டமைப்புக்கள்.

4. உவப்பற்ற நடத்தைக் கோலங்கள்.

5.புதிய தொழில் நுட்பங்கள், தொழில்நுட்பக் கருவிகள் இவற்றின் பயன்பாடு.

6. உலகமயமாதலின் பாதகமான விளைவுகள்.

7.போதைப்பொருள்பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம்.

8.உடல் ரீதியான துன்புறுத்தல்கள்.

இத்தகைய பொருத்தமற்ற சூழலில் மாணவர் களை பாடசாலைகள் பாதுகாக்க வேண்டும். இன்று மாண வர்களின் பாதுகாப்பு முக்கிய பிரச்சினையாக உரு வெடுத்துள்ளது. இதனால் பாடசாலையில் ஒழுக்கம் தொடர்பாக அதிக கவனம் செலுத்துதல் வேண்டும்.

பாடசாலை ஒழுக்கம்

1. குறித்த பாடசாலை மற்றும் பாடசாலைக் கலாசாரத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தை ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப ஒழுகுதல்.

2. கல்வி, கல்விசாரா பணிக்கு பெற்றோர்கள் ஆகியோரின் நடத்தைகளை முன்னெடுப்பதற்கு அமுல்படுத்தப்பட்டுள்ள பாடசாலையின் சட்டக் கோவைக்கு இணங்கி ஒழுகுதல்.

3. ஒழுக்க விதிமுறைகள் தொடர்பாக போதிய விளக்கமளித்தல், ஏற்றுக் கொண்டமைக்கான உத்தரவாதத்தைப் பெறுதல்.

4.ஒழுக்க விதிகளை நடை முறைப்படுத்துதலும் கண்காணித்தலும்.

பாடசாலையில் ஒழுக்கம் பேணுகையில் தாக்கம் செலுத்தக்கூடிய விடயங்கள்

1. பாடசாலையினுள் பிள்ளைகளுடன் நேர்ப்பாங்கான, சிறந்த ஆரோக்கியமான உறவுகள் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

(உ+ம்) சில பாடசாலை அதிபர்கள், சில ஆசிரியர்கள் தமது மாணவர்களை மகன், மகள் என அழைக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க ஒரு முன்மாதிரியாகும்.

2. மாணவர்கள் மத்தியில் தமது பொறுப்புகள் பற்றிய உணர்வுகளை கிரமமாக வளர்த்தல், மாணவர்களுக்கு தமது கடமைகள், பொறுப்புகள், உரிமைகள் தொடர்பான அறிவூட்டல் செயற்றிட்டங்களை நடை முறைப்படுத்தல்.

3. மாணவர்களில் சுய ஒழுக்கத்தை உருவாக்குவதற்கு பின்பற்றுவதற்கும் ஏற்ற பொறிமுறைகளை ஆசிரியர்கள் முயல வேண்டும்.

4. ஆசிரியர்களுக்கு தனிப்பட்ட சிக்கல்கள் காணப்படுகின்றன. மாண வர்களுக்கும் அவர்களுக்குரித்தான தனிப்பட்ட சிக்கல்கள் காணப்படுகின்றன.

இவற்றினை தனித் தனியே அடையாளம் காணுதல் வேண்டும். சிக்கல்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப் பொருத்தமான செயல் முறைகளை தயார் செய்ய வேண்டும்.இதற்குரிய ஆற்றல்களை, அறிவை ஆசிரியர்களில் வளர்ப்பதன் மூலம் மாணவர்களின் ஒழுக்கத்தைப் பேணுவதற்கான இயலுமையை மேம்படுத்த முடியும்.

5. பாடசாலைகளில் மாணவர்களுக்கு பொருத்தமான உவப்பான கற்றல் சூழலை கட்டியெழுப்புதல் வேண்டும்.

6. பாடசாலைகள் கல்வி இலக்குகளுடன் தமக்குப் பொருத்தமான வகையில் மாணவர்களின் ஆற்றல் விருத்திக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

7. மாணவர்கள் மத்தியில் சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த வாய்ப்புக்களை வழங்க வேண்டும்.

சமகாலத்தில் ஒழுக்கத்தைப் பேணுவதற்காக பாடசாலைகளில் பல விதமான நடைமுறைகளை பின்பற்றப்படுகின்றன. இது பாடசாலைக்கு பாடசாலை, ஆளுக்காள் வேறுபடு கின்றன. எழுந்தமான வகையில் பல பொருத்தமற்ற நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுகின்றன.

அவை வேறு வடிவங்கள் பெற்று விரும்பத்தக்கதாக விளைவுகளை உருவாக்கியதை அவதானிக்க முடியும்.

உடல் ரீதியான தண்டனை வழங்கல்

பாடசாலைகளில் எதிர்பார்க்கப்படும் நடத்தை களுக்கு பொருத்தமற்ற நடத்தைகளை வெளிப்படுத்தும் மாணவர்களது நடத்தைகளை கட்டுப்படுத்துவ தற்கு அல்லது தடுப்பதற்கு உடலுக்கு வேதனை தரும் வகையில் வழங்கும் தண்டனை உடல் ரீதியான தண்டனை எனப்படும்.

தற்காலத்தில் வைத் தியர்கள் , உளமருத் துவ நிபுணர்கள், மனித செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், சிறுவர் உரிமை தொடர்பான அமைப்புக்கள் உடல் ரீதியான தண்டனை வழங்கல் பிள்ளைகளுக்கு உடல் ரீதியாக துன்புறுத்தலை ஏற்படுத்தும் வகையில் வழங்கப்படும் தண்டனையென தெரிவுபடுத்துகின்றனர்.

இது நேர் விளைவுகளை விட எதிர் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை எனவும் குறிப்பிடுகின்றனர்.

கற்றல்நடவடிக்கைகளைப் பாதித்தல், அதிபர்- ஆசிரியர்களை வெறுத்தல், பாடசாலை செல்வதை தவிர்த்தல், சமூகத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுதல், கடுமையான மனநிலைப் பாதிப்பு ஆகிய நிலைகள் ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆனால் இன்னமும் எமது பாடசாலைகளில் இக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாதவர்களும் மரபுரீதியாக தாம் பெற்ற தண்டனைகளையும் நியாயப்படுத்துப வர்களும் தொடர்ந்து உடலியல் ரீதியான தண்டனை வழங்கப்படுவதை அவதானிக்க முடிகிறது.

ஒழுக்கத்திற்கு பொறுப்பானவர்கள் கையில் தடியுடன் சுற்றித்திரிவதையும் அவதானிக்க முடிகிறது. இது சில வேளைகளில் குறுகிய காலத்துள் அடக்கு முறை அமைதியை ஏற்படுத்தினாலும் நீண்ட காலத்தில் எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும்.

உடல் ரீதியான தண்டனைகள், மனமுறிவினை ஏற்படுத்தும் சொற்கள், மானிட கௌரவத்திற்கு பொரு த்தமில்லாத அணுகுமுறைகள் எதிர் விளைவுகளையே உருவாக்கும்.

களவு/தாக்குதல்கள் போன்ற சமூகத்திற்கு எதிரான பழக்கங்கள் ஏற்படல்.

துஷ்பிரயோகத்திற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்தல்.

மாணவரிடையே ஆத்திரம் அடையும் பழக் கங்கள் அதிகரித்தல்.

மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் இடையேயான தொடர்புகள் துண்டிக்கப்படுதல், எதிரிகளாக நோக்குதல்.

வன்முறை எண்ணங்கள் துளிர் விடுதல்.

திருப்தியற்ற மானிட உணர்வுகள் பிள்ளைகளிடம் ஏற்படல்.

நேர்முகமான சிந்தனைகள் கட்டியெழுப்பப்படும் போது பாதகமான நிலையில் வன்புறுத்தல் ஏற்படல்.

மாணவர்களில் ஆக்கிரமிப்பு எண்ணங்கள், குழப்படியான நடத் தைப் பண்புகள் உருவாதல். எதிர் மறையான சமூக மற்றும் உள கலக்க நிலைக்கு மாணவர்கள் தள்ளப்படுதல்.

பொதுச் சொத்துக்களை அழிக்கும் நபராக உருவாகுதல்.

மாணவர்களில் தோல்வி மனப்பாங்கு உருவாவதன் காரணமாக சமூகத்திற்கு எதிரான கருத்துக்களை கொண்டவர்கள் உருவாக வாய்ப்புக் காணப்படுகிறது.

இலங்கையில் கைச்சாத்திடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ள 1989ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் தொடர்பிலான சமவாயத்தின் 28(2) பிரிவு பாடசாலைகளில் ஒழுக்க நிர்வாகத்தை மேற்கொள்கையில்பிள்ளைகளின்மானிட கௌரவத்திற்கு இணங்க மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

எதிர்காலநலன்கருதிஅனைத்துத் தரப்பினரும் தங்களுடைய பிரச்சினையை முதன்மைப்படுத்தாது எமது பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி இவ்விடத்தில் ஆரோக்கியமாக சிந்தித்து செயற்பட வேண்டிய தேவை உள்ளது. இதனை அனைவரும் உணர்ந்து பணியாற்றுவது காலத்தின் தேவையாகும்.

பொன்னம்பலம்
அருணகிரிநாதன்
ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்.

# மீனவர் சுட்டுக்கொல்லப்பட்டதைக் கண்டித்து உண்ணாவிரதப் போராட்டம் தொடர்கிறது

## பேச்சுவார்த்தை தோல்வி

(சென்னை)

மீனவர் பிரிட்ஜோ சுட்டுக் கொல்லப்பட்டதை கண்டித்து நாகையில் மீனவர்களின் சார்பில் 4 ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.

நேற்று முன்தினம் மாலை மீன் வளத்துறை மற்றும் நிதித்துறை அமைச்சர் ஜெயக்குமார், ஜவுளி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஓ.எஸ். மணியன், மாவட்ட ஆட்சியாளர் பழனிச்சாமி, எம்.எல்ஏக்கள் பவுன்ராஜ் (அ.தி.மு.க), தமீமுன் அன்சாரி (ஜனநாயக மனிதநேய கட்சி) ஆகியோர் உண்ணாவிரத பந்தலுக்கு சென்றனர்.


அப்போது அமைச்சர் ஜெயக்குமாரை பெண்கள் முற்றுகையிட்டு, விசைப் படகுகளை மீட்க மத்திய மாநில அரசுகள் அக்கறை காட்டவில்லை. விசைப்படகுகள் மீட்கப்படும் வரை நாங்கள் போராட்டத்தை விலக்கி கொள்ளும் பேச்சுக்கே இடமில்லை என்று கூறினர்.

இதனால் பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. அதேநேரத்தில், எம்.எல்.ஏ தமீமுன் அன்சாரிக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அவர் உடனே அங்கிருந்து வெளியே செல்ல வேண்டும் என்று கூறினர். அவர் உடனே அங்கிருந்து வெளியே செல்ல வேண்டும் என்று கூறினர். உடனே அமைச்சர் ஜெயக்குமார் தலையிட்டு, அவர் எங்களுடன் வந்திருக்கிறார்.

அவரை போகச் சொல்லாதீர்கள் என்று சமாதானப் படுத்தினார். பின்னர் ஜெயக்குமார் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஆனால் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படவில்லை. தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை போராட்டம் தொடரும் என்று தெரிவித்தனர். (இ-12)




# சைற்றம் பிரச்சினைக்கு ஜாதிக ஹெல உறுமய 3 தீர்வு யோசனைகள்

(கொழும்பு)

சைற்றம் வைத்திய கல்லூரி தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைக்கு அரசாங்க பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய கட்சி மூன்று தீர்வுகளை அரசாங்கத்துக்கு முன்மொழிநதுள்ளது.

சைற்றம் வைத்தி கல்லூரியை உடனடியாக நீக்கி விடுதல், தற்பொழுது அக் கல்லூரியில் இணைத்துக் கொண்டுள்ள மாணவர்களுக்கு, வைத்தியர்களாக் வருவதற்கு தேவையான ஏற்பாடுகளை வகுப்பதற்கு விசேட சபையொன்றை நிறுவுதல், நீக்கப்படும் மாணவர்களுக்கு நட்ட ஈட்டை வழங்குதல் போன்ற மூன்று அம்சங்களுமே அவையாகும்.

ஜாதிக ஹெல உறுமயவின் பிரதி செயலாளர் அனுருத்த பிரதீப் நேற்று முன்தினம் இதனை அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளார்.

இந்த தீர்மானங்களுடன் சேர்ந்ததாக, இந்த சைற்றத்தை மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடமாக்க நடவடிக்கை எடுக்கலாம் எனவும் அப்பிரேரணையில் அவர் மேலும் கூறியுள்ளார். (இ-7)

# சைற்றம் குறித்து தீர்மானம் எடுக்க அரசாங்கத்துக்கு 2வார அவகாசம்

சைற்றம் நிறுவனத்துக்கு எதிராக தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கும் மருத்துவக் கல்வி தொடர்பிலான குறைந்த பட்ச தகைமைகளை வர்த்தமானியின் மூலம் சட்டமாக்குவதற்கும் அரசாங்கத்துக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இருவார கால அவகாசம் வழங்கியுள்ளது.

சங்கத்தின் செயலாளர் டாக்டர் நவீன் த சொய்ஷா இதனை நேற்று முன்தினம் அறிவித்தார்.

இந்த இருவார காலப் பகுதியில் அரசாங்கம் தீர்வைப் பெற்றுத்தராவிடின் நாடு தழுவிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும், அனைத்து தொழிற் சங்கங்களையும் இதில் இணைத்துக் கொள்ளவுள்ளதாகவும் அச்சங்கம் அறிவித்துள்ளது. (இ-7)

# விடுதலைப்புலிகளுக்கு நிதி மறுஆய்வு மனுத்தள்ளுபடி

நெதர்லாந்து நாட்டில் வசித்து வரும் 4 பேர் மீது விடுதலைப்புலிகளுக்கு நிதி திரட்டியதாக குற்றம் சாட்டப் பட்டது. அவர்களது சொத்துகள் முடக்கப்பட்டன.

இதை எதிர்த்து அவர்கள் பெல்ஜியம் நாட்டின் தலைநகர் பிரசல்ஸ் நகரில் உள்ள ஐரோப்பிய யூனியனின் உயர் நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனுத் தாக்கல் செய்தனர்.

அதில், விடுதலைப்புலிகள் இயக்கம் உள்நாட்டு யுத்தத்தில் ஆயுதம் தாங்கி போராடியது என்றும், அதன் செயற்பாடுகளுக்கு 'பயங்கரவாதம்' என்ற முத்திரை குத்தக்கூடாது என்றும், சர்வதேச மனிதாபிமான சட்ட அடிப்படையில் அதை அணுக வேண்டும் என்றும் அவர்கள் வாதிட்டனர்.

இந்நிலையில், இந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அவர்களின் வாதத்தை ஏற்க மறுத்த நீதிபதிகள், வழக்கை தள்ளுபடி செய்தனர். (இ-7)

# நேர்மையானவர்களை பிரதிநிதிகளாக மக்கள் தெரிவு செய்ய வேண்டும்

## பொது அமைப்புக்கள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தேர்தல்களில் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் போது உண்மையானவர்களையும் நேர்மையானவர்களையும் மக்கள் தெரிவு செய்ய வேண்டுமென தெரிவித்துள்ள பவ்ரல், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம், தேசோதயம், கரித்தாஸ் கியூடெக் ஆகிய அமைப் புக்கள், தேர்தலுக்கு முன் ஒன்றை பேசுபவர்களையும் தேர்தலுக்கு பின் ஒன்றை பேசுபவர்களையும் மக்கள் நிராகரிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளன.

உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கொழும்பிலிருந்து நாட்டின் அனைத்து மாவட்டங்களி லும் பேரணி இடம் பெறவுள்ளது. இந்தப் பேரணி எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கும் வரவுள்ளதோடு அன்றைய தினம் பிற்பகல் 2 மணியள வில் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் மாநாடு ஒன்றும் நடைபெறவுள்ளது. இதில் அரசியல் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பவ்ரல் அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் எஸ்.சிறிதரன்,சர்வோதயத்தின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.யுகவேந்திரா, யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் பிரதிநிதி க.கலாராஜ், தேசோதயத்தின் மாவட்ட தலைவர் லயன் கலாநிதி என்.தணேந்திரன், கரித்தாஸ் கியூடெக் நிறுவ னத்தின் இணைப்பாளர் ஆர். திலகரட்ணம் ஆகியோர் இணைந்து யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் பத்திரிகையாளர் சந்திப்பொன்றை நடத்தி யிருந்தனர். இதன் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இலங்கை அரசியலில் வேட்பாளர்களுக்கு வேட்பு மனுக்களை வழங்கும் போது தகுதி அற்றவர்கள், மோசடிக்காரர்கள், துர் நடத்தையில் ஈடுபடுவோர், தரகுப் பணமும் கையூட்டும் பெறுவோர் தேர்தல்களில் களமிறங்கும் போக்கு நாளுக்கு நாள் அதிகரித்த ஒரு சூழ்நிலையில் 2015 மார்ச் 12 அமைப்பு உருவாக்கம் பெற்றது.

மேற்கூறிய நிலைமைகளால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் காரணமாக வாக்காளர்கள் தேர்தல்களிலிருந்து அந்நியப்பட்டிருத்தலும் ஊழல் பேர்வழிகளுக்கு நாட்டை ஆளும் வாய்ப்புக் கிடைத்தலும் ஒரே சமயத்தில் நிகழ்வதால் நாட்டுக்கும் நாட்டின் எதிர்காலத்திற்கும் ஏற்படும் பாதகமான நிலைமைகளை தவிர்த்தல் எமது நோக்கமாகும்.

இந்த நோக்கங்களுடன் நாடு பூராகவும் பயணம் செய்த மார்ச் 12 இயக்கம் வாக்காளர்களை விழிப் புணர்வு செய்தல் மற்றும் பொது மக்களை அணிதிரட்டல் போன்ற பணிகளில் ஈடுபட்டதுடன், அரசியல் கட்சிகள் வேட்பு மனுக்களை வழங்கும் போது கவனத்தையும் வரவேற்பையும் பெற்றுக் கொண்டது.

இந்த நியதிகளை பூரணமாக பின்பற்றுமாறு அரசியல் கட்சிகளுக்கு அழுத்தம் கொடுக்க முடியாத போதிலும் ஓரளவுக்கு சாதகமான நிலையை ஏற்படுத்த முடிந்தது.

தற்போது நாம் உள்ளூராட்சி தேர்தலை எதிர் கொள்ள இருக்கின்றோம். அதில் களமிறங்கும் வேட்பாளர்கள் நாளை தமது பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள் எமது தினசரி வாழ்வில் பாரிய செல்வாக்குச் செலுத்துகின்றனர்.

இவ்வாறான மக்கள் பிரதிநிதியை தெரிவு செய்வதற்கு அல்லது தெரிவு செய்யாதிருப்பதற்கான வாய்ப்பு எமக்கே கிடைக்கின்றது. எவ்வாறாயினும் ஒருவருக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டி யிடுவதற்கான வாய்ப்பினை வழங்கும் பொறுப்பு அரசியல் கட்சிகளுக்கே உண்டு.

அந்த பொறுப் பினை அரசியல் கட்சிகள் சரிவர நிறைவேற்ற தவறும் போது அதனால் ஏற்படும் விளைவுகளை நாமே எதிர் கொள்ள வேண்டும் என அவர்கள் மேலும் சுட்டிக் காட்டியிருந்தனர். (இ-4)

# யாழ்ப்பாண பாடசாலைகளில் திருவள்ளுவர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 19ஆம் திகதி யாழ்மாவட்டத்தில் உள்ள அனைத்து அறநெறிப் பாடசாலைகளிலும் திருவள்ளுவர் குருபூசை தினம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கொண்டாடப்படவுள்ள இக் குருபூசை தினத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பயிற்சி பெற்றுள்ள சுமார் 30 ஆன்மீகப் பிரச்சாரகர்கள் இவ் குருபூசை தினத்தில் இணைக்கப்படவுள்ளனர் என அறிவிக்கப் பட்டுள்ளது. (இ

**தவறிவிட்டது**

ராஜகோபால் கிருஷ்ணகுமார் ஆகிய எனது இன்சூரன்ஸ், ரக்ஸ், லைசென்ஸ் ஆகிய மூன்றும் (பொலித்தீன் பையுடன்) நெல்லியடிப்பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து எனது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

076 912 9117

**வேலையாட்கள் தேவை**

புடைவை வியாபார ஸ்தாபனத்திற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை.

நியாயமான ஊதியம் வழங்கப்படும்

K.S.T.Tex
127/18, யூப்பில் பஜார்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(8306) 0212229470




1991-2016

**செய்மதி தொலைக்காட்சி சேவை**


(direct to home)

டிஷ் ஆன்டெனா மூலம் (digital sd/hd) தரத்தில் இடையூறு அற்ற முறையில் குறைந்த கட்டணத்தில் (ரூபாய் 400/- தொடக்கம்) உங்கள் விருப்பம் போல் டிவி சனல்களை கண்டுகளிக்கக்கூடிய FULL செட் 1 வருட உத்தரவாதத்துடன்

SATS - TECH ENGINEERS
298, K.K.S ROAD, JAFFNA.
PHONE:- 021 222 8812/071 098 6224
(C-7798)
Rs. 3000/-*

# சித்திரவதைக்கூடமாக சிரியா மாறிவிட்டது

## ஐ.நா.ஆணையாளர் ஆழ்ந்த கவலை



**(டமாஸ்கஸ்)**

**சித்திரவதைக் கூடமாக மாறியுள்ள சிரியா சிறைகளில் பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன், அவர்களை விடுவிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.**

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 34ஆவது கூட்டத்தொடரில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

சிரியா முழுவதும் சித்திரவதைக்குட்பட்ட பகுதிகளாகவும், முற்றிலும் காட்டுமிராண்டித்தனமாகவும் அநீதி இழைக்கப்படும் இடமாகவும் திகிலூட்டுவதாகவும் மாறியிருப்பதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

சிரிய மக்கள் அமைதி மற்றும் சமாதானத்தை பெறுவதற்கு உண்மை கண்டறியப்பட்டு பொறுப்புக் கூறல் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதுடன் அவர்களுக்கான இழப்பீடும் வழங்கப்பட வேண்டுமென ஐ.நா. ஆணையாளர் இதன்போது கூறியுள்ளார்.

மேலும் தடுப்புக் காவலே சிரியாவில் முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்றதெனவும் இவற்றினை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்மானிக்க முடியாதென்றும் குறிப்பிட்டுள்ள ஐ.நா. ஆணையாளர்,

பாதிக்கப்பட்ட சிரிய குடும்பங்களுக்கு ஆதரவளிக்க வேண்டியது அனைவரதும் பொறுப்பு என்றும் தெரிவித்துள்ளார். (இ-12)

## பணியாளர்கள் முக்காடு அணிவதை சட்டப்படி தடை செய்ய முடியும்



### ஐரோப்பிய ஒன்றியம் தீர்ப்பு

ஐரோப்பிய நிறுவனங்கள் தமது பணியாளர்கள் முக்காடு அணிவதைத் தடை செய்ய முடியும் என்று ஐரோப்பிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.


இஸ்லாமியப் பெண்கள் அணியும் முக்காடு உட்பட அனைத்து மத அரசியல் குறியீட்டு அணிகளையும் தடை செய்யலாம் என அத் தீர்ப்பு தெரிவித்துள்ளது.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இத்தீர்ப்பில், ஒரு நிறுவனம், முக்காடு உள்ளிட்ட இத்தகைய அணிகளைத் தடை செய்வதை எவ்வகையிலும் பாகுபாட்டு நடவடிக்கையாக கொள்ளமுடியாது எனச் சுட்டிக் காட்டியுள்ளது.

**G4S** என்ற பர்துகாப்புச் சேவை நிறுவனம், முக்காடு அணிவதை வலியுறுத்திய தமது இஸ்லாமிய பணியாளரை இடை நிறுத்தியதற்கு எதிரான வழக்கிலேயே இத் தீர்ப்பு நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பை விமர்சித்துள்ள சர்வதேச மனிதவுரிமைகள் அமைப்பு, இது பாகுபாட்டை மேலும் அதிகரிக்கும் எனத் தெரிவித்துள்ளது. (இ-12)

## சர்வதேசத்தின் கண்களில் இலங்கை மண்ணைத்தூவ முயற்சிக்கிறது-வைகோ



இலங்கையில் இடம் பெற்ற இறுதி யுத்தத்தில் நிகழ்ந்த போர்க்குற்றங்களில் இருந்து தப்பித்துக்கொள்ளும் நோக்கத்தில், சர்வதேச சமூகத்தின் கண்களில் மண்ணைத் தூவி ஏமாற்றும் விதத்தில் இலங்கை செயற்பட்டு வருகிறது. இதனை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைனுக்கு வைகோ அனுப்பி வைத்துள்ள மின்னஞ்சலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"2015ஆம் ஆண்டு ஜெனிவாவில்நடைபெற்ற 28 ஆவது ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி இலங்கை அரசு ஏற்றுக் கொண்ட எதனையும் இது வரை நிறைவேற்றவில்லை. இந்நிலையில், இலங்கை மீண்டும் கால அவகாசம் கோரியுள்ளது.


ஆனால் இதுவரை காலமும் போதுமான கால அவகாசமும், சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்ட நிலையில், இனிமேலும் கால அவகாசம் வழங்கப்படக்கூடாது. அவ்வாறு மீண்டும் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்படுமாயின், அது தமிழர்களின் பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தும்.


இனப்படுகொலைக்கு ஆளான ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்பும், நீதியும் கிடைக்க ஐ.நா.பொதுச் சபை பிரேரணையை பாதுகாப்புச் சபைக்கு கொண்டுசெல்ல உரிய பரிந்துரையை செய்ய வேண்டும்.

தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொலைக் குற்றங்கள் குறித்து சுதந்திரமான அகில உலக விசாரணை நடைபெற வேண்டும் என்பதே தமிழர்களின் நியாயமான கோரிக்கை ஆகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-12)

## மழை வேண்டி சோமாலியாவில் பிரார்த்தனை

### பிரதமர் பங்கேற்பு





(மொகாடிஷு)

சோமாலியா கடுமையான வரட்சி பேரழிவுக்கு உள்ளாக்கியிருக்கும் நிலையில், மழை பெய்ய கடவுளை வேண்டி நடத்தப்பட்டுள்ள தேசிய பிரார்த்தனையில் அந்நாட்டின் பிரதமர் அலி ஹசான் கெய்ரா பங்கேற்றுள்ளார்.

தலைநகர் மொகாடிஷுவில் நடைபெற்ற இந்தப் பிரார்த்தனை நிகழ்வில் உரையாற்றும்போது, சோமாலிய மக்களிடம் இருந்து வரட்சி சுமையை நீக்கிவிட வேண்டும் என்று கடவுளிடம் கேட்டுக்கொண்டார்.

சோமாலியா பஞ்சத்தின் விளிம்பில் இருப்பதாக ஐக்கிய நாடுகள் அவை எச்சரித்திருக்கிறது.

இந்த வரட்சியை தேசிய பேரழிவாக அறிவித்திருக்கும் ஜனாதிபதி முகமது அப்துல்லாஹி ஃபர்மாஜோ, சர்வதேச உதவியையும் கோரியுள்ளார்.

சோமாலியாவும், மேற்கு ஆபிரிக்க சாஹேல் பகுதி வரை பஞ்சத்தால் அல்லலுற்ற 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கு பிறகு, ஆபிரிக்காவில் முதல் முறையாக தென்சூடானில் தற்போது பஞ்சம் ஏற்பட்டுள்ளது. (இ-12)

# பஞ்சத்தால் 2 கோடிப் பேர் பாதிப்பு

ஆபிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் பஞ்சத்தை எதிர்கொள்ளும் இரண்டு கோடிப் பேரை காப்பதற்கான காலம் கடந்துகொண்டிருப்பதாக உதவி நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

நைஜீரியா, தென்சூடான், ஏமன் மற்றும் சோமாலியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி கடந்த அறுபது வருடங்களில் இல்லாத அளவுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக ஐ.நா.தெரிவித்துள்ளது.

சோமாலிய மோதல்களும் ஊழலும் அங்கு இரு வருடமாக காணப்படும் வரட்சியை மோசமாக்கியுள்ளன.

மூன்று கோடி மக்களை தண்ணீர், உணவு கிடைக்காத மற்றும் இலகுவில் தொற்றுநோய்களுக்கு உள்ளாகும் நிலைக்கு இவை ஆளாக்கியுள்ளன. (இ-12)

# திரவ எரிமலைக் குழம்பாக ஊற்றெடுக்கும் கிலாயு எரிமலை



அமெரிக்க மாநிலங்களில் ஒன்றான ஹவாயின் மிகப்பெரிய தீவில் கடந்த வியாழக்கிழமை வெடித்த கிலாயு எரிமலை திரவ எரிமலைக் குழம்பாக ஊற்றெடுக்க ஆரம்பித்துள்ளது.

எரிமலைக் குழம்பானது, ஏரியிலிருந்து கடலுக்குள் செல்வதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையத்தின் ஹவாய் எரிமலை அவதானிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

எரிமலைக்குழம்பு கடலில் கலந்தாலும் அருகிலுள்ள ஹவாய் சமூகங்களுக்கு ஆபத்து எதுவும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

உருகிய எரிமலை 1650 டிகிரி பரனைட்டில் மண்ணில் படிவதாகவும் அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தகவல் வெளியிட்டுள்ளது. (இ-12)

# மீட்புப் பணி ஹெலி விபத்து 4 பேர் உயிரிழப்பு

மெக்சிக்கோவின் வடக்கு பகுதியில் உள்ள மலைப் பகுதியில் மாயமான, மலை ஏறும் வீரரை மீட்கும் பணியில் நேற்றுக்காலை ஈடுபட்டிருந்த ஹெலிகொப்டர் விபத்திற்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்தில் ஹெலிகொப்டரில் பயணித்த 2 விமானிகள் மற்றும் உள்ளூர் மீட்புக் குழுவைச் சேர்ந்த இருவர் உயிரிழந்ததாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-12)

# ட்ரம்பின் வருமானவரி விபரங்களை வெளியிட்ட தொலைக்காட்சி நிறுவனம்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த 2005ஆம் ஆண்டு அரசுக்கு செலுத்திய வருமான வரி விபரங்களை இரண்டு பக்கங்கள் கொண்ட அறிக்கையாக அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையின் பிரகாரம், கடந்த 2005ஆம் ஆண்டு 150 மில்லியன் டொலர்களுக்கும் மேலான தனது வருமானத்தின் மீது கூடுதல் வருமான வரியாக 38 மில்லியன் டொலர்களையும் மத்திய வருமான வரியாக 5.3 மில்லியன் டொலர்களையும் ட்ரம்ப் செலுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரம்பின் வருமான வரி விபரங்களின் ஒருபகுதியாக அமைந்திருந்த குறித்த அறிக்கையில் அவரது வருமான விபரங்கள் எவையும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில், ட்ரம்பின் வருமானவரி விபரங்களை தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்டுள்ளமை சட்டவிரோதமானது என வெள்ளை மாளிகை அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறிருக்க, மேற்படி விபரங்கள் அடங்கிய அறிக்கை பெயர் குறிப்பிடப்படாத நபரிடமிருந்து தபால் மூலம் தமக்கு கிடைத்ததாக தொலைக்காட்சி நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-12)

# 50 வடகொரிய நாட்டவர்களை வெளியேற்றுகிறது மலேசியா

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் சகோதரர் கிம் ஜாங் நாமின் படுகொலை விவகாரம் தொடர்பில் மலேசியா மற்றும் வட கொரியா ஆகிய இரு நாடுகளின் உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில், விசா காலம் முடிந்து தங்கியிருக்கும் சுமார் 50 வட கொரியர்களை நாடு கடத்த மலேசிய அரசு முடிவு செய்துள்ளது.

ஆனால், போர்னியோ தீவில் உள்ள சராவக் மாநிலத்தில் பணியாற்றும் 50 வடகொரிய தொழிலாளர்களுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்படுவதாக துணை பிரதமர் மொஹமட் ஜாகித் ஹமிதி தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இத் தீர்மானத்தை எடுத்தமைக்கான காரணத்தை அவர் தெரிவிக்கவில்லை.

வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன்னின் சகோதரர் கிம் ஜாங் நாம், மலேசிய தலைநகர் கோலாலம்பூர் விமான நிலையத்தில் மர்மமான முறையில் உயிரிழந்த விவகாரம் தொடர்பில், இரு நாடுகளுக்கு இடையில் தொடர்ந்தும் பதற்றநிலை நீடித்து வருகின்றது. (இ-12)

# அமெரிக்காவில் பனிப்புயலால் அவசர காலநிலை அறிவிப்பு

(வோஷிங்டன்)

பெரிய அளவில் குளிர் காலப்புயல் மற்றும் அச்சுறுத்தும் விதமான பனிப் புயல் காரணமாக, அமெரிக்காவின் வட- கிழக்கு பகுதியில் உள்ள நியூ யோர்க் மற்றும் நியூஜெர்சி ஆகிய மாநிலங்களில் அவசர காலநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.



பென்சில்வேனியா மற்றும் கனெக்டிகட் மாகாணங்களில் ஒரு சில பகுதிகளில் பனிப்புயல் வீசுவதற்கான அபாயம் உள்ளதாக தேசிய வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன மற்றும் ஆயிரக்கணக்கான விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

சில இடங்களில் 60 சென்ரி மீற்றர் அளவு வரை பனி பதிவாகும் என வானிலை மைய அதிகாரிகள் கணித்துள்ளனர்.


மக்கள் வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலை காரணமாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை வோஷிங்டனில் சந்திக்கவிருந்த ஜெர்மன் சான்சலர் ஏங்கெலா மெர்கல் தனது பயணத்தை தாமதப்படுத்தியுள்ளார்.

அவர்கள் நாளை வெள்ளிக்கிழமை அன்று சந்திப்பார்கள் என்று கூறப்படுகிறது. (இ-12)

# ஆர்.கே.நகர் சட்டமன்ற தேர்தல்

# அ.தி.மு.க.சார்பில் வேட்பாளராக டி.டி.வி.தினகரன் அறிவிப்பு



ஆர்.கே. நகர் சட்டமன்ற தேர்தலுக்காக அ.தி.மு.க கட்சி சார்பில் அக்கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஆர்.கே. நகர் சட்டமன்ற தேர்தலுக்கு சசிகலா ஆதரவாளர்கள், ஓ.பி.எஸ். அணியினர் மற்றும் தீபா ஆதரவாளர்கள் என 3 அணியினரும் ஆர்வம் காட்டி வருகின்ற நிலையில், சசிகலா அணியின் சார்பில் டி.டி.வி.தினகரன் ஆர்.கே.நகர் தொகுதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதனை அ.தி.மு.க. கட்சியின் ஆட்சிமன்ற குழு கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக செங்கோட்டையன் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.


மறைந்த முதல்வர் ஜெயலலிதா கடந்த சட்டமன்ற தேர்தலில் ஆர்.கே. நகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்று முதலமைச்சராக பதவியேற்றார்.

அவரின் மரணத்தை தொடர்ந்து ஆர்.கே.நகர் தொகுதிக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி இடைத்தேர்தல் நடத்தப்படவுள்ளது.

ஜெயலலிதாவின் மறைவிற்கு பின்னர் அ.தி.மு.க. மூன்று அணிகளாக பிளவடைந்துள்ள நிலையில், இடைத் தேர்தலை சந்திக்க அரசியல் கட்சிகள் மத்தியில் கடும் போட்டி நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

# இந்திய விமானப்படை ஹெலி நிலைகுலைந்து விபத்து

## விமானிகள் உயிர் தப்பினர்



அலகாபாத் நகரில் இந்திய விமானப்படைக்கு சொந்தமான ஹெலிகொப்டர் பயிற்சியின் போது நிலை குலைந்து விபத்துக்குள்ளானது.

உத்தரப்பிரதேச மாநிலம் அலகாபாத் அருகே பாம்ராவுலி என்ற இடத்தில் இந்திய விமானப்படை தளம் உள்ளது. இங்கு உள்ள ஹெலிகொப்டர் மற்றும் விமானங்களில் வீரர்கள் தினமும் பயிற்சியில் ஈடுபடுவது வழக்கம். நேற்றுக்காலை அதே போல் பறந்து சென்று பயிற்சி மேற்கொண்ட இரு வீரர்கள் தங்களது ஹெலிகொப்டரை சரிசமமாக இல்லாத இடத்தில் தரையிறக்க முயன்றனர்.

இதன்போது தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கட்டுப்பாட்டை இழந்த ஹெலிகொப்டர் திடீரென வேகமாக தரையில் மோதி நிலைகுலைந்து சரிந்தது. அதிர்ஷ்டவசமாக இரு வீரர்களும் அவசர கதவின் வழியாக வெளியே குதித்து உயிர் தப்பினர்.

இந்த விபத்தில் ஹெலிகொப்டர் சேதமடைந்ததாகவும் இச்சம்பவம் தொடர்பாக துறை ரீதியான விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (இ-12)

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.03.2017-13.04.2017



கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளும் மிதுன இராசி அன்பர்களே!

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன் நீச்சம் பெற்றிருந்தாலும், உச்சம் பெற்ற சுக்ரனோடு இணைந்திருக்கிறார். மேலும் புதன் குருவால் பார்க்கப்படுகிறார். எனவே நீச பங்க ராஜயோக அடிப்படையில் சாதகமான பலன்களை அடையப்போகிறீர்கள். நிதி நெருக்கடி நிலை மாறும். அருளாளர்கள், சான்றோர்களின் ஆலோசனை, வெற்றிக்கு வித்திடும். ஒரு காரியத்தைத் தொடங்கும் பொழுது, அது முடிவடைவது போல் தெரியாவிட்டாலும் கடைசிநேரத்தில் அந்தக் காரியம் எப்படியாவது முடிந்துவிடும்.

குரு பார்வை விரயஸ்தானத்தில் பதிவதாலும், அஷ்டம ஸ்தானம் மற்றும் 10ஆம் இடத்தில் பதிவதாலும் துன்பங்களிலிருந்து விடுதலை கிடைக்கும். இழப்புகளை ஈடு கட்ட ஏதேனும் ஒரு புதிய வாய்ப்புகள் வர வேண்டுமானால் ஜாதகத்தில் 8,12 ஆகிய இடங்களை குரு பார்க்கவேண்டும். அந்த அடிப்படையில் கோச்சார ரீதியாக கன்னி இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான் வக்ர இயக்கத்தோடு மேற்கண்ட இடங்களைப் பார்க்கிறார். எனவே இதன் விளைவாக பழைய தொழிலில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும். தொழிலுக்கு மூலதனம் இல்லையே என்று கவலைப்பட்டவர்களின் கவலை இனித்தீரும். தொழிலை மேலும் வளப்படுத்த நினைத்தவர்களுக்கு இது நல்ல நேரமாக அமையப் போகிறது. திடீர் உதவிகள் கிடைத்து திக்குமுக்காடச் செய்யும். கடலில் தத்தளிக்கும் கப்பலுக்கு கலங்கரை விளக்கம் கிடைத்தது போல, ஒரு நல்ல வாய்ப்பு உங்களை நாடி வரப்போகிறது.

அதே நேரத்தில் சகாய ஸ்தானாதிபதி சூரியனும், தொழில் ஸ்தானத்தில் இருக்கிறார். எனவே தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகள் தரக்கூடிய பணிகளை யெல்லாம் விரைவில் செய்து முடிப்பதன் காரணமாக பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கப் பெறுவர்.

இம்மாதம் பங்குனி உத்தரப் பெருநாளில் கந்தப்பெருமானைக் கனிவோடு வழிபட்டால் எந்த நாளும் இனிய நாளாக அமையும்.

புதனின் பெயர்ச்சி

## கூட்டு முயற்சியால் ஆதாயம் கிடைக்கும்

ஒவ்வொரு இராசிக்கும் உரிய இராசிநாதன் பலம் பெறும் போதெல்லாம் பணியில் உள்ள தொய்வு அகலும். உடல் நலம் சீராகி உற்சாகத்துடன் செயற்பட முடியும். அதே நேரம் ராசிநாதன் வலிமையிழந்து சஞ்சரிக்கும் பொழுது, வாய்ப்புகள் வந்தாலும் அதை உபயோகப்படுத்திக்கொள்ள இயலாது. உங்கள் ராசிநாதன் புதன், மார்ச் 30 ஆம் திகதி இலாப ஸ்தானத்திற்கு வருகிறார். அதன் பிறகு ஏப்ரல் 7 ஆம் திகதி மீண்டும் மீனத்திற்கு வக்ர இயக்கமாகச் செல்கிறார். மேடத்தில் சஞ்சரிக்கும் எட்டு நாட்களும் அதிக நற்பலன்கள் கிடைக்கும். சொத்து களால் ஆதாயம், தொழில் ரீதியாக வளர்ச்சி, நட்பாலும் உடன்பிறப்பாலும் நல்ல காரியங்கள் போன்றவை நடைபெறும். தொழிலில் எதிர்பார்த்த இலாபம் வந்துசேரும்.




சனியின் வக்ர இயக்கம்

ஏப்ரல் 9 ஆம் திகதி விருச்சிக இராசியில் சனி வக்ரம் பெறுகிறார். 8,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி, 6-ம் இடத்தில் வக்ரம் பெறும் பொழுது, உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குப் பணிமாற்றம் பற்றிய தகவல்கள் வந்து சேரலாம். உயர்பதவிகள் கிடைப்பதற்குத் தடையாக இருந்தவர்கள் விலகுவர். பூர்வீகச் சொத்து தொடர்பான வழக்குகள் சாதகமான பலனை எட்டும். பெற்றோர் வழி ஆதாயம் உண்டு.

ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்

ஏப்ரல் 11 ஆம் திகதி ரிஷப இராசிக்குச் செவ் வாய் செல்கிறார். இந்த செவ்வாய் பெயர்ச்சி சுப விரயங்களை ஏற்படுத்தும். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சி கைகூடும். வேற்று மனிதர்களின் கூட்டு முயற்சியால் ஆதாயம் கிடைக்கும். வெளிநாடு சம்பந்தப்பட்ட முயற்சிகளில் ஈடுபட்டவர்களுக்கு அனுகூலம் கிட்டும்.

இம்மாதம் உங்கள் இராசிநாதன் புதனைப் பலப்படுத்த புதன் கிழமை தோறும்இலட்சுமிசமேத விஷ்ணுவை வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கு...

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன், பஞ்சம விரயாதிபதி சுக்ரனோடு இணைந்திருப்பதால் குடும்பச் சுமை கூடும். குடும்ப உறுப்பினர்களால் விரயங்கள் அதிகரிக்கும். இருப்பினும் வியாழக் கிழமை தோறும் குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வந்தால் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கலாம். தாய் வழி ஆதரவு திருப்தி தரும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். கடன் சுமை பாதிக்கு மேல் குறைய வழி பிறக்கும். சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். வேலைக்காக முயற்சித்த பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கும். உத்தியோக முன்னேற்றம் உண்டு. பங்குனி உத்திர நாளில் தங்க ரதம் ஏறிவரும் முருகப் பெருமானை வழிபட தடைகள் அகலும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



தன்னம்பிக்கையால் முன்னேறும் கடக இராசி அன்பர்களே!

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சந்திரன், குருவோடு இணைந்து குரு-சந்திர யோகத்தை உருவாக்குகிறார். அதுமட்டுமல்லாமல் புதனும், குருவும் பரிவர்த்தனை யோகத்தைப் பெற்றிருக் கின்றனர். உங்கள் இராசியைப் பொறுத்தவரை புதன், சகாய ஸ்தானத்திற்கும், விரய ஸ்தானத்திற்கும் அதிபதியானவர். எனவே நினைத்த காரியங்கள் நிறைவேறும். நிகழ் காலத் தேவைகள் பூர்த்தியாகும். சென்ற மாதத்தில் ஏற்பட்டதைப் போல, இந்த மாதத்தில் வீண் விரயங்கள் ஏற்படாது.

2இல் இராகு இருப்பதால் பற்றாக் குறையைச் சமாளிக்கப் பணம் பல வழியிலும் வந்துகொண்டேயிருக்கும். உற்றார் உறவினர்களைக் காட்டிலும் உடனிருக்கும் நண்பர்களின் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைக்கும்.

8ஆம் இடத்தில் கேது இருப்பது நல்லதல்ல. முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டைகள் இருந்து கொண்டுதான் இருக்கும். மறைமுகப் பகை வளர்ந்து கொண்டேயிருக்கும். இதன் விளைவாக ஒருசில காரியங்கள் முடிவடை வது போல் இருந்து, கடைசி நேரத்தில் நின்று போகலாம். கல்யாணம் முதல் கடை திறப்பு விழா மற்றும் வெளி நாட்டு யோகம் கூட இதில் அடங்கும்.

இப்படிப்பட்ட நிலை மாறவும், எதிரில் வரும் தடை அகலவும் நாக சாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்து கொள்வது நல்லது. வார வழிபாடாக வெள் ளிக்கிழமை தோறும் விநாயகரையும், துர்க்கையையும் வழிபட்டு வாருங்கள். பிரதோஷ வழிபாட்டின் மூலம் பிரச்சினைகள் தீர வழி பிறக்கும். இம்மாதம் வரும் பங்குனி உத்தர திருநாளில் முருகப் பெருமான் ஆலயத்திற்கு சென்று வழிபட்டால், நல்ல வாய்ப்புகள் நாளும் வந்து சேரும்.

குருபகவானின் பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதால் வீட்டில் மங்கள ஓசை கேட்கவில்லையே என்று கவலைப் பட்டவர்கள், இம்மாதம் சுப நிகழ்ச்சி நடைபெற எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

## மறைமுகப் பகை வளர்ந்து கொண்டேயிருக்கும்

புதனின் பெயர்ச்சிக் காலம்

மார்ச் 30 ஆம் திகதி மேட இராசிக்குப் புதன் செல்கிறார். அதன்பிறகு ஏப்ரல் 7 ஆம் திகதி வக்ரம் பெற்று மீன இராசிக்கே திரும்புகிறார். 3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் வக்ரம் பெறுவது ஒரு வழிக்கு நன்மை தான். தேவைக்கேற்ப பணம் வந்துகொண்டேயிருக்கும். வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய வாகனங் களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும். அந்தத் திட்டத்தை செயற்படுத்த வாய்ப்புகள் கூடிவரும். உத்தியோகம் சம்பந்தமாக வெளிநாடு செல்ல ஏற்பாடு செய்திருந்தவர்களுக்கு இப்பொழுது அழைப்புகள் வந்து சேரலாம். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

விருச்சிகச் சனியின் சஞ்சாரம்




உங்கள் இராசிக்கு 7,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. அவர் 5ஆம் இடத்தில் தற்சமயம் சஞ்சரித்து வருகிறார். அதன்பிறகு ஏப்ரல் 9 ஆம் திகதி விருச்சிகத்தில் வக்ரம் பெறுகிறார்.

அஷ்டமாதிபதி சனி வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது, நல்ல பலன்களையே வழங்குவார். அதே நேரத்தில் அவர் சப்தமாதிபதியாகவும் விளங்குவதால், குடும்பத்தில் கருத்து வேறு பாடுகள் ஏற்படலாம். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நேரமிது. உத்தியோகம் மற்றும் தொழில் செய்யும் இடங்களில் கூட சக ஊழியர்களிடம் அனுசரித்துச் செல்லுங்கள். வராத சம்பளப் பாக்கிகள் இப்பொழுது வந்து சேரலாம். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி செலவிடும் சூழ்நிலை உண்டு.

ரிஷபச் செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் ஏப்ரல் 11 ஆம் திகதி ரிஷப இராசிக்குச் செல்கிறார். யோகம் செய்யும் கிரகமான செவ்வாய் இலாப ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது, ஒரு தொழில் செய்வோர் மறு தொழில் செய்யும் யோகம் உருவாகும். பங்கு வர்த்தகத்தால் பலன் கிடைக்கும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். பூமி யோகம் உண்டு.

செவ்வாய்க்கிழமை தோறும் ஆறுமுகப் பெருமானை வழிபடுவதோடு, அவரது சந்நிதியில் எள்தீபம் ஏற்றினால் நிம்மதி கிடைக்கும்.

பெண்களுக்கு...

வரவும் செலவும் சமமாகும். தனாதிபதி சூரியனும், விரயாதிபதி புதனும் இணை ந்து சஞ்சரிக்கிறார்கள். அதே நேரத்தில் குருவின் பரிபூரண பார்வை அவற்றின் மீது பதிகிறது. எனவே விரயத்திற்கேற்ற தொகை வந்து கொண்டேயிருக்கும். வீடு மாற்றங்களும், ஊர் மாற்றங்களும் வந்து சேரலாம். தாய்வழி ஆதரவு கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. வருமானம் உயரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் அனுகூலத்தோடு மேன்மை காண்பர். செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமானை வழிபடுவதன் மூலம் செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும்.

(தொடரும்)

# மே மாதத்திற்கு முன்னர் இலங்கை முன்னேற்றத்தைக் காட்டவேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீண்டும் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பிக்க முன்னதாக, மனித உரிமைகள் தொடர்பாக உறுதியான முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய- இலங்கை கூட்டு ஆணையத்தின் கீழ் உள்ள நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள் தொடர்பான செயலணிக்கும்இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் நடத்தப்பட்ட இரண்டு நாட்கள் பேச்சுக்களின் போதே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் 13, 14ஆம் திகதிகளில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றிருந்தன. இந்தப் பேச்சுக்கள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஐரோப்பிய ஒன்றிய செயலணிக் குழுவினர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இதன்போது அவர்கள், மறுசீரமைப்புகள் தொடர்பான அரசியல் கடப்பாடுகளை முன்னோக்கி நகர்த்துவதில் உறுதியாக இருப்பதாக தெரிவித்தனர்.

மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பாக அனைத்துலக கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் இலங்கை உறுதியான முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளதை ஐரோப்பிய ஒன்றியம் கவனத்தில் கொண்டுள்ளது.

நல்லிணக்கம், ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் மேலும் முன்னேற்றங்கள் தேவை என்பதை இரண்டு தரப்புகளும் ஏற்றுக் கொண்டுள்ளன.

கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம், ஊடகம், சிவில் சமூகத்தை வலுப்படுத்தல், பெண்கள், சிறுவர்களின் உரிமைகள், சிறுபான்மையினரின் உரிமைகள், போர் நடந்த பகுதிகளில் காணிகளை துரிதமாக மீள ஒப்படைத்தல் போன்ற விவகாரங்கள் குறித்தும் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

அரசியலமைப்பு உருவாக்கம், புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன், மறுசீரமைப்பு செயற்பாடுகளுக்கு நிதியுதவி உள்ளிட்ட வழிகளில் தொடர்ந்து உதவத் தயார் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

சித்திரவதை, பெண்களுக்கு எதிரான வன்முறைகள், ஊழலுக்கு எதிரான போராட்டம் என்பன குறித்தும் ஐரோப்பிய ஒன்றியம் கரிசனைகளை வெளிப்படுத்தியுள்ளது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைக்காக இலங்கை சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் தற்போது ஐரோப்பிய நாடாளுமன்றத்திலும், பேரவையிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மே நடுப்பகுதி வரையில் இந்த நிறுவனங்கள் இது பற்றி கலந்துரையாடும்.

மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்ற விடயங்களில் அனைத்துலக கடப்பாடுகளை நிறை வேற்றுவதில் இலங்கை உறுதியான முன்னேற்றத்தைக் காட்ட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## நேபாளத்தில் இலங்கை இராணுவத்தளபதி



ஆறு நாட்கள் பயணமாக இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா நேற்று முன்தினம் நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவைச் சென்றடைந்தார்.

நேபாள இராணுவத் தளபதி ராஜேந்திர செட்ரியின் அழைப்பின் பேரிலேயே இலங்கை இராணுவத் தளபதியின் இந்தப் பயணம் அமைந்துள்ளது.

காத்மண்டு திரிபுவன் விமான நிலையத்தில்இலங்கை இராணுவத் தளபதியை மேஜர் ஜெனரல் பினோத் குமார் சிரெஸ்தா வரவேற்றார்.

இந்தப் பயணத்தின் போது, நேபாள ஜனாதிபதி பித்யா தேவி பண்டாரி, பிரதமர் புஷ்பா கமல் தால் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் கிருஷ்ணகாந்த் ஆகியோரையும் இராணுவத் தளபதி சந்திக்கவுள்ளார்.

அத்துடன், நேபாள இராணுவத்தின் மேற்கு டிவிசன் தலைமையகமான பொக்காராவுக்கும் அவர் செல்லவுள்ளார். (இ-7)

## 500 மில்லியன் நட்டஈடு கோரும் பந்துல

அரச ஊடகம், அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர் தனக்கு நட்டஈடு தர வேண்டும் என, பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கோரியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

மத்திய வங்கி பிணை முறி மோசடி விவகாரம் தொடர்பில், தான் வெளியிட்ட கருத்து தொடர்பில் தனக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் செய்தி வெளிட்டமைக்காக அரசாங்க ஊடகம் ஒன்றிடம் இருந்து 200 மில்லியன் ரூபா நட்டஈடு கோருவதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், தனக்கு எதிராக பொய்யான கருத்துக்களை வெளியிட்டமை குறித்து ரவி கருணா நாயக்கவுக்கு எதிராக 300 மில்லியன் ரூபா நட்டஈடு கோருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில், நேற்றையதினம் சட்டத்தரணி ஊடாக நோட்டிஸ் அனுப்பப்



பட்டுள்ளதாகவும் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஒருநாள் உணவைத் தவிர்த்து சிறைக்கைதிகள் மனிதாபிமானம்

(கொழும்பு)

சிறைக் கைதிகள் தங்களது ஒருநாள் உணவைத் தவிர்த்து அதற்கான செலவுகளை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையில், இருதய நோயுடைய சிறுவர்களுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவு ஒன்றை நிர்மாணிக்க நிதி வழங்கும் நோக்கில் இவ்வாறு நன்கொடை வழங்கியுள்ளனர்.

லிட்டில் ஹார்ட்ஸ் என்னும் சிறுவர் நோய் சிகிச்சை பிரிவிற்கான நிதி திரட்டும் நடவடிக்கைக்கு கைதிகள் நன்கொடை வழங்கியுள்ளனர்.

வெலிக்கடை சிறைச்சாலையின் கைதிகள் இவ்வாறு நிதியை வழங்கியுள்ளனர்.

நாள் ஒன்றுக்கு உணவுக்காக செலவிடப்படும் 85 ஆயிரம் ரூபா பணத்தை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வரும் ஹேமன் ஜயசிங்க என்ற கைதியினால், குறித்த காசோலை விசேட நிபுணத்துவ வைத்தியர் ஹரேந்திர சில்வாவிடம் அண்மையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### எதிரியின் ஆர்வம்

அண்மையில், என்னுடன் படித்த ஒரு நண்பனை நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்தித்தேன்.

பேசுவதென்னவோ உப்புப் பெறாத விடயங்களாக இருக்கும். ஆனாலும், இந்தக் குப்பைகளை கிளறுவதில் அலாதிப் பிரியம் இருக்கும்.

ஆனால் அன்று நேரம் ஆக ஆக அந்தப் பழைய நண்பன் பொறுமையைச் சோதித்தான். என் அப்போதைய மனநிலை வேலைப்பளு; அவசரம் எதையுமே உணராமல் அவன் மட்டுமே பேசிக்கொண்டு இருந்தான்.

பல வருடங்களுக்குப் பிறகு சந்திக்கின்றோம். நீ பேசாதே எனக்கு வேலை இருக்கிறது என்று எப்படிச் சொல்வது? என் தர்மசங்கடத்தை அவன் புரிந்து கொள்ளத் தயாரில்லை.

உரையாடலில் எதிரிக்கும் ஆர்வம் இருக்கிறதா? இல்லையா? என்பதில் ஒருவர் கொஞ்சமாவது ஆர்வம் காட்ட வேண்டாமா?

ஒரு தாய்கூடச் சிந்தனை வயப்பட்டிருக்கும் போது அல்லது வேறு ஒரு பிரச்சின்னயில் மூழ்கியிருக்கும் போது தன் மகனுடனோ கணவனுடனோ உரையாட விரும்புவதில்லை.

ஆனால் வேண்டாம் விரோதம் என்று "ஊம்" கொட்டிக் கொண்டு இருப்பார்கள் கடனே என்று.

உடன் பணிபுரிகிறவர்கள் சுவட வீட்டில் வாங்கிக் கட்டிக்கொண்டு வந்து மூட்அவுட் ஆகி உட்கார்ந்திருப்பார்கள். நாமோ அரட்டை அடிக்கிற மனநிலையில் இருப்போம். ஒன்றுக்கொன்று பொருந்தாது.

இந்த நேரத்தில் ஒதுங்காவிட்டால் எப்படி?

அதுசரி மற்றவர்களுக்கு உரையாடலில் ஆர்வமில்லை என்பதை எப்படி அறிவது? தலையை ஆர்வமில்லாமல் ஆட்டுவார்கள்.

"ஓகோ!" "ஊம்" "அப்படியா"? க்களில் செயற்கை தட்டும்.

அங்கேயும் இங்கேயும் தலை திரும்பியபடி இருக்கும்.

விடயத்தைச் சரிவரக் கேட்டுக் கொள்ளாததால் பதில் கேள்விகளை அபத்தமாயும் சுரத்தின்றியும் கேட்பார்கள். அல்லது எந்தக் கிளைக் கேள்வியுமே கேட்க மாட்டார்கள்.

அவர்கள் பேசும் வார்த்தைகளில் மகா சிக்கனம் இருக்கும்.

செய்து கொண்டிருக்கும் வேலையில் கவனம் செலுத்துவது போல் பாசாங்கு செய்வார்கள். (செய்தித்தாள் படிப்பது, பென்சில் சீவுவது போன்றவை)

இவற்றையெல்லாம் செய்து "நீ பேசாதே!" என்று மறைமுகமாகச் சொன்ன பிறகும் ஒருவர் பேசிக் கொண்டிருந்தால் அவருக்கும் மழைக்காலத் தவளைக்கும் என்னதான் வித்தியாசம்?

**லேனா தமிழ்வாணன்**

# கடத்தப்பட்ட கப்பலில் இலங்கை மாலுமிகள்

## முரண்பட்ட கருத்துக்களை வெளியிடும் கடற்படை

(கொழும்பு)

சோமாலிய கடற்கொள்ளையர்களால், கடத்தப்பட்ட எண்ணெய்க் கப்பலின் மாலுமிகள் தொடர்பாக, இலங்கை கடற்படை குழப்பமான- முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வெளியிட்டு வருகிறது.

டிஜிபோட்டிக்கு அப்பால் கடந்த 13 ஆம் திகதி ARIS 13 என்ற எண்ணெய்க் கப்பல், சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டது. இந்தக் கப்பல் சோமாலிய கடற்கரையில் நங்கூரமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான இந்தக் கப்பலில் 8 மாலுமிகள் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கை கடற்படைப் பேச்சாளர் லெப். கொமாண்டர்சமிந்த வலகுலுகே இதனை நேற்று முன்தினம் உறுதிப்படுத்தியிருந்தார்.

இந்த நிலையில், கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட எட்டு இலங்கையர்களையும் மீட்பதற்கு உதவுமாறு சோமாலிய அதிகாரிகளிடம் இலங்கை அரசாங்கம் கோரியுள்ளதாக, இலங்கை கடற் படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணரத்ன தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்ட கப்பலில் உள்ள மாலுமிகளின் பெயர்கள் உள்ளிட்ட விபரங்கள் இன்னமும் தெரியவில்லை. இன்னமும் கடத்தல் காரர்களுடன் யாரும் தொடர்பு கொள்ள முடியவில்லை. கடத்தல்காரர்களுடன் சோமாலிய அரசாங்கம் மூலமே, பேசுவது நல்லது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடத்தப்பட்ட எண்ணெய்க் கப்பலில் இலங்கையர்கள் இருக்கிறார்களா- இல்லையா என்பதை அறிய, இராஜதந்திர வழிமுறைகளின் ஊடாக அனைத்துலக உதவிகளை இலங்கை அரசாங்கம் கோரியுள்ளதாக மற்றொரு தகவல் கூறுகிறது.

இந்த நிலையில், கடத்தப்பட்ட கப்பலில் இலங்கை மாலுமிகள் எட்டுப் பேர் இருந்தனர் என்பதை முன்னதாக உறுதிப்படுத்திய இலங்கை கடற்படைப் பேச்சாளர் லெப். கொமாண்டர் சமிந்த வலகுலுகே, கப்பலில் இலங்கை மாலுமிகள் இருக்கின்றனரா -இல்லையா என்பதை இது வரையில் உறுதி செய்ய முடியவில்லை என்று தற்போது தகவல் வெளியிட்டுள்ளார்.



கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு தகவல் வெளியிட்டுள்ள அவர், "கடத்தப்பட்ட கப்பலில் இருந்து தொலைத்தொடர்பு மீள ஏற்படுத்தப்படும் வரையில், தகவல்களை உறுதிப்படுத்த முடியாது.

கடந்த ஜனவரி மாதம் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்திருந்த கொமரோஸ் தீவில் பதிவு செய்யப்பட்ட இந்த எண்ணெய்க்கப்பல், ஜனவரி 28ஆம் நாள் புறப்பட்டுச் சென்றிருந்தது. அப்போது அதில் 8 இலங்கை மாலுமிகள் இருந்தனர் என்று துறைமுக அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின்மூலம்தெரியவந்துள்ளது.

அதற்குப் பின்னர் இன்னொரு அனைத்துலக துறைமுகத்துக்கு கப்பல் சென்றுள்ளது. வழக்கமாக எண்ணெய்க் கப்பல்கள் வெவ்வேறு துறைமுகங்களுக்கு செல்லும் போது, மாலுமிகள் மாறக் கூடும்.

முன்னதாக Aris 13 கப்பல் இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருந்தது. எனினும், பின்னர் இந்தக் கப்பல் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டது.

கடைசியாக இந்தக் கப்பலில் இருந்து கிடைத்ததாக தகவல், இரண்டு அதிவேகப் படகுகள் தம்மைத் தொடர்கிறது என்பதேயாகும். அதற் குப் பின்னர்எந்த தகவலும்இல்லை.

அவை சோமாலிய கடற்கொள்ளையர்களின் படகுகள் என்று உறுதியாக கூற முடியாது. தற்கொலைப் படகுகளாக இருந்தால் கூட அதனைக் கூற வழியில்லை.

கப்பல் கடத்தப்பட்டிருந்தால் அனைத்துலக இராஜதந்திர வழிகளின் ஊடாகவே தலையீடு செய்ய முடியும்.

மேலதிக தகவல்களுக்காக நாம் காத்திருக்கிறோம், இலங்கை கடற்பரப்பில் இந்தச் சம்பவம் இடம் பெற்றிருந்தால் மாத்திரமே எம்மால் தலையீடு செய்யமுடியும்.

இப்போது இராஜதந்திர வழியில் மாத்திரமே தலையிட முடியும். சோமாலிய அரசாங்கம் தான் இதில் தலையிட வேண்டும். தேவைப்பட்டால் அவர்கள் அனைத்துலக உதவியை நாடலாம்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## இலங்கை மாலுமியர் குழுவை மீட்க சோமாலிய படையினர் அனுப்பிவைப்பு



சோமாலிய கடற் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கைமாலுமிகள்குழுவை மீட்க சோமாலிய அரசு படையினரை அனுப்பி வைத்துள்ளது.

இதுபற்றித் தெரிவித்த சோமாலிய அரசு அதிகாரியொருவர், "கடத்தப்பட்ட கப்பல் மற்றும் மாலுமியரை விடுவிப்பது நமது பொறுப்பும் கடமையுமாகும். இதற்காக நாம் தீவிர முயற்சி எடுத்து வருகிறோம்.

கடற்கொள்ளையர்கள் தாம் கடத்தும் கப்பல்களை ஆலுலா என்ற துறைமுக நகரை அண்டியே மறைத்து வைப்பார்கள். குறித்த அந்தப் பகுதியை நோக்கி தேவை யான படையினர் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள் ளனர். அவர்கள்கப்பலை யும் மாலுமிகளையும் மீட்டு வருவார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்" என்று தெரிவித்துள்ளார்.


இலங்கை மாலுமியர் குழுவுடன் பயணித்த 'ஏரிஸ் 13' என்ற இந்த எண்ணெய்த் தாங்கிக் கப்பலை சோமாலிய கடற்கொள்ளையர்கள் கடந்த 13 ஆம் திகதி கடத்திச் சென்றனர். சுமார் 1800 தொன் எடை யுடைய இந்தக் கப்பல் பனாமா கம்பெனி ஆமி ஷிப்பிங் என்ற நிறுவனத்துக்குச் சொந்தமானது.

2012ஆம் ஆண்டுக்குப் பின் சோமாலிய கடற் கொள்ளையர்கள் நடத்தப்பட்ட கப்பல் கடத்தல் சம்பவம் இதுவாகும். (இ-7)

## இலங்கையர்களை விடுவிப்பதற்கு கப்பம் கோரும் கடற்கொள்ளையர்

(கொழும்பு)

சோமாலிய கடற்கொள்ளையர்களால் 8 இலங்கையர்களுடன் கடத்தப் பட்ட கப்பலை விடுவிக்க கடற்கொள்ளையர்கள் கப்பம் கோரியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



கப்பலானது இலங்கைக்கு சொந்தமானதல்ல வெனவும் அதில் பணி யாற்றும் பணியாளர்கள் 8 பேரும் இலங்கையர்கள் என இலங்கைக் கடற்படைதெரி வித்திருந்தது.

இலங்கையின் தேசியக் கொடியுடன் சென்று கொண்டிருந்த எரிபொருள் தாங் கிக் கப்பலான அரிஸ் 13 என்ற கப்பல் சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப் பட்டதாக சர்வதேச செய்திகள் வெளியாகி யிருந்த நிலையிலேயே அக் கப்பலை விடுவிப்ப தற்கு சோமாலிய கடற் கொள்ளையர்கள் கப்பம் கோரி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் 94 எம்.பிக்கள் சித்தியடையவில்லை

### பேராசிரியர் சொய்சா தகவல்

இலங்கை நாடாளுமன்றத்தில், அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களில் 94 பேர் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் கூட சித்தியடையாதவர்கள் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

பேராதனை பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் எம்.ஒ.ஏ.டி சொய்சா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 25 உறுப்பினர்கள் மாத்திரமே பட்டதாரிகள் என்றும், 94 பேர் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் கூட சித்தியடையாதவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கௌரவத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும், அவர் கேட்டுக் கொண்டார்.

நாடாளுமன்றத்தில் குழப்பம் விளைவித்து, அநாகரிகமாக நடந்து கொள்வதாகவும், இதனால் பொதுமக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படுவதாகவும் அவர் விசனம் தெரிவித்தார். (இ-7)

# மறக்கப்பட முடியாதது மகிந்த காலத்து வரலாறு



பழைய சம்பவங்களை எமது மக்கள் மிக விரைவாக மறந்து விடுகிறார்கள். இவ்வாறு பழைய சம்பவங்களை மட்டுமல்ல மிக அண்மையில் நடந்த சம்பவங்களைக் கூட மக்கள் மறந்து விடுகிற ஒரு இயல்பான போக்கு இப்போது உருவாகியுள்ளது.

இதற்கு அரசியல்வாதிகளின் ஏமாற்று வித்தையும் ஒரு காரணம் என்றால் அது தவறாகாது. உதாரணமாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தற்போது நடைபெறும் சம்பவங்களை அவரது பதவிக் காலத்துடன் ஒப்பிட்டு இரண்டுக்கும் இடையிலான வித்தியாசத்தைக் கூட்டுவதில் முன்னிலையில் இருக்கிறார்.

பொதுத்துறை ஊழியர்கள் இப்போது அரசாங்கத்தின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகவும் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் அவர்களை துன்புறுத்துவதாகவும் அவர் கூறுகிறார். இதற்குக் காரணம், சட்டவிரோத குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பலரில் ஒரு சிலர் மட்டுமே விசாரணை செய்யப்பட்டு நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்படுகிறார்கள். செல்வாக்குள்ள ஆயிரக்கணக்கான பொதுத்துறை ஊழியர்களில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர்தான் அரசாங்க அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் இருக்கிறார்கள். பொதுத்துறை ஊழியர்கள் இம்சைப்படுத்தப்படுவதான பொதுவான குற்றச்சாட்டு ஒரு அப்பட்டமான பொய்யே தவிர வேறெதுவும் இல்லை என்பதே உண்மை.

ஒருவேளை, குற்றஞ்சாட்டப்பட்டவர்களைப் பற்றி அவர் குறிப்பிடுகிறாரோ தெரியவில்லை. ஏனென்றால், குற்றவாளிகளைக் காப்பாற்றுவது அவருடைய ஆட்சிக் காலத்தில் வழக்கமாக இருந்ததுதானே!

உதாரணமாக டாக்டர் பி.பீ.ஜயசுந்தரவை பொதுத் துறையிலுள்ள பதவிக்கு நியமிக்க வேண்டாமென உச்ச நீதிமன்றம் தீர்மானித்தும் மகிந்த ஜயசுந்தரவை நியமித்தார். மகிந்த தனது பதவிக் காலத்தின் போது பொதுத்துறை ஊழியர்களை நன்கு கவனித்திருந்தால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்காளர்கள் அவரை நிராகரித்திருக்க மாட்டார்களே. உண்மையில் அப்போதும் துன்புறுத்தல்கள் இடம்பெற்றன தான்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க நீதிக்குப் புறம்பாக திடீரென பதவியிலிருந்து அகற்றப்பட்டது ஞாபகமிருக்கலாம். பொதுத்துறை ஊழியர் ஒருவர் மரத்துடன் கட்டி வைக்கப்பட்டார். அவருக்கு தண்டனை அளித்த அரசியல்வாதிக்கு பின்னர் அமைச்சர் பதவி வழங்கப்பட்டதையும் மறுக்க முடியாது.

பொலிஸ் அதிகாரிகள் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் குறுக்கீடுகள் செய்யப்பட்டன. சட்டவிரோத செயல்களுக்கு கட்டுப்படாத பொலிஸார் அரசியல்வாதிகளால் துன்புறுத்தப்பட்டனர். யுத்த வீரர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்பது மகிந்த ராஜபக்ஷவின் அடுத்த குற்றச்சாட்டு. பொதுத்துறை ஊழியர்களைப் போல யுத்த வீரர்களிலும் ஒரு சிலர்தான் துன்புறுத்தப்படுகிறார்கள். ஆனால் பெரும்பாலான யுத்த வீரர்கள் ஒழுக்கமாகவே நடந்து கொள்கிறார்கள். அவர்கள் துன்புறுத்தப்படுவதில்லை. கொலை, பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள், ஆட்கடத்தல்கள் போன்ற சட்டவிரோத சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்களுக்காக அவர்களில் சிலர் தடுத்து வைக்கப்பட்டும், விசாரணைகளுக்கு முகம் கொடுத்து வருவதும் உண்மைதான். அவர்கள் குற்றவாளிகள் இல்லையா? என்பது விசாரணைகளின் பின்னரேயே தெரிய வரும்.

மனச்சாட்சிப்படி, ராஜபக்ஷவுக்கு இப்படி பேசுவதற்கு எந்த உரிமையும் இல்லை. உலகின் மிகச் சிறந்த இராணுவத் தளபதி என அவரே கூறிய ஜெனரல் சரத் பொன்சேகாவை பின்னர் அவரே தான் அவமானப்படுத்தினார். இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் துன்புறுத்தப்பட்டு சிறையிலடைக்கப்படுகிறார்கள் என்பதும் மகிந்தவின் மற்றுமொரு குற்றச்சாட்டு. கொலைக் குற்றத்துக்காக குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ள துமிந்த சில்வாவையா? அல்லது வயதில் அவ்வளவு இளையவர் என்றும் சொல்ல முடியாத ரோஹித அபேகுணவர்த்தனவையா அவர் குறிப்பிடுகிறார்? இல்லையென்றால் அவர் நாமல் ராஜபக்ஷவை தான் குறிப்பிட வேண்டும்.

நாடு தற்போது சர்வாதிகாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது எனக் கூறுகின்ற அவருடைய பத விக் காலத்தின் போது தான் அரச நிறுவனங்கள் இராணுவ மயப்படுத்தப்பட்டு சிரேஷ்ட நிர்வாக பதவிகள் இராணுவத்துக்கு வழங்கப்பட்டன. பாடசாலை அதிபர்கள் தன்னார்வ படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு பல்வேறு புதவிகளில் நியமிக்கப்பட்டனர். அரசியலமைப்பின் 18ஆவது பிரிவில் மாற்றம் செய்து தனது சகோதரர்களின் மூலம் ஒட்டுமொ த்த அரசியல், பொருளாதார கட்டமைப்பை குடும்ப கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர மகிந்த முயற்சித்ததையும் மறக்க முடியுமா?

ஜயதிலக டி சில்வா

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1015

Search for people, places and things Nagendram Home

### துசா




### ஆர்த்தி

புருஷன் என்பது கொங்கிறீட் சீமெந்து மாதிரி...
கட்டின உடனேயே அடிக்கவோ, குத்தவோ,
மிதிக்கவோகூடாது. நல்லா "செட்டாக" விட்டுட்டு
அப்புறமா என்ன வேணுமானாலும்
பண்ணலாம்...ஒன்னும் ஆகாது...!

பொண்ணாட்டிங்க மண் பாண்டம் மாதிரி
ஆரம்பத்திலையே நமக்கு வேணுங்கிற மாதிரி
மாத்திடனும் இல்லாட்டி செட் ஆயிடிச்சின்னா
அப்புறம் ஒன்னும் பண்ண முடியாது...!


### அமி




### சிறி




### வனிதர்




### சியான்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மகிந்த, கோத்தபாயவை கைது செய்ய வேண்டும்

## வெலிக்கடை சிறைமுன் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலைக்குள் நுழைந்த இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைக்கு நீதிகோரி கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் படுகொலை இடம்பெற்ற வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பாக நடத்தப்பட்டது.

கடந்த 2012ஆம் ஆண்டு கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலைக்குள் நுழைந்த ஆயுதம் தரித்த இராணுவத்தினர் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 27 பேர் வரை கொல்லப்பட்டதோடு பலர் காயமடைந்திருந்தனர். இது தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கு அமைய சம்பவத்தில் பலியான 16 கைதிகளுக்கு தலா 5 இலட்சம் ரூபாயும் காயமடைந்தவர்களுக்கு ஒரு தொகை நட்டஈடும் வழங்க நல்லாட்சி அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எனினும் இதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு நேற்று முன்தினம் வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது.

வெலிக்கடை படுகொலையில் உயிரிழந்த கைதிகளின் உறவினர்கள் உட்பட 50க்கும் மேற்பட்டவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு தங்களது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

அத்தோடு மகிந்த கோத்தபாயவை கைது செய்ய வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர் (இ-7)

# ஜனாதிபதியை நீதிமன்றம் சவாலுக்குட்படுத்த முடியாது

## சுதந்திரக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

மாவட்ட நீதிமன்றத்தின் முன்னிலையில், ஜனாதிபதியை சவாலுக்கு உட்படுத்த முடியாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியானது, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவி, முன்னாள் ஜனாதிபதிக்கு உரித்துடையது என அறிவிக்குமாறு தீர்ப்பை வழங்கக்கோரி, தற்போதைய ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவை பிரதிவாதியாக குறிப்பிடாமல் மறைமுகமாக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளமை ஏனென்றும், அவ்வாறு ஜனாதிபதிக்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்து அவரை சவாலுக்கு உட்படுத்த முடியாது என்றும் சுதந்திரக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

கெஸ்பேவ நகர சபையின் முன்னாள்நகரசபை முதல்வர் அருண பிரியசாந்த மற்றும் நகர சபையின் உறுப்பினரொருவர் தாக்கல் செய்திருந்த வழக்குக்கு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது எதிர்ப்பை கடந்த 13ஆம் திகதியன்று முன்வைத்தது.

அந்த எதிர்ப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க மற்றும் முன்னாள் செயலாளர் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகிய பிரதிவாதிகள் சார்பில், ஆஜரான சட்டத்தரணி புலஸ்தி ரூபசிங்ஹவே மேற்படி எதிர்ப்பை முன்வைத்தார்.

இந்த வழக்கின் பிரதிவாதியாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரும், முறைப்பாட்டாளர் சார்பில் பெயரிடப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டிய சட்டத்தரணி, பிரதிவாதியான சுதந்திரக் கட்சி, தேர்தல்கள் ஆணையாளருக்காக மாவட்ட நீதிமன்றத்தில் சலுகையை கோரியிருப்பது, அரசியலமைப்புக்கு முரண்பாடான செயற்பாடாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்குமாறு கோரி, சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுவின் முன்னாள் உறுப்பினர்கள் இருவர் தாக்கல் செய்திருந்த வழக்கில், பிரதிவாதிகளாக சுதந்திரக்கட்சியின் செயலாளர் மற்றும் முன்னாள் செயலாளர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, முறைப்பாட்டாளர் பட்டியல் திருத்தப்பட்டுள்ளது என்று சட்டத்தரணி நிமல் வீரக்கொடி, நீதிமன்றத்தின் கவனத்துக்குக்கொண்டு வந்தார். இருதரப்பு வாதப் பிரதிவாதங்களை கருத்தில் கொண்ட கொழும்பு பிரதான நீதவான் சுஜீவ நிஷாங்க, இந்த வழக்கை மார்ச் மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (இ-7)

# மகிந்தவும் அவரது குழுவினரும் சின்னம்மை நோயால் பாதிப்பு!

## டாக்டர் ராஜித தகவல்



(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு தொடர்பில் சரியான புரிந்து கொள்ளல் இல்லாமல் போலியான தேசப்பற்றை வெளிக் காட்டி வரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவருடைய குழுவினரும் உடல் முழுவதும் சின்னம்மை போன்ற நோயினால் பாதிக்கப்பட்டவர்களென சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அரசியலமைப்பை தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், இது நாட்டைப் பிளவுபடுத்தும் முயற்சி என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியிருந்தார்.

அவருடைய கருத்துப் பற்றி அமைச்சர் ராஜித சேனாரட்னவிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

ஐம்பதுகளிலிருந்து சமஷ்டி கோரிக்கையை முன்வைத்து வரும் வடபகுதி அரசியல் கட்சிகளை பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வு என்ற நிலைப்பாட்டுக்குக் கொண்டுவர முடிந்தமை பாரிய வெற்றியாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பில் நாம் பயப்படத் தேவையில்லை. மகிந்த ராஜபக்ஷவின் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் யாவரும் ஒரே பக்கத்தில் இருப்பதால் இலகுவில் இதில் வெற்றிபெற முடியும்.

அரசியலமைப்பு தயாரிப்பின் ஊடாக எவ்வாறு நாடு பிளவுபடும்? வடக்கில் அன்றிருந்த அரசியல் கட்சிகள் பெயரில் கூட "பெடரல்" கட்சி எனக் கொண்டிருந்தன.

1950களிலிருந்து அவர்கள் இந்நாட்டில் சமஷ்டி முறையொன்றையே கோரி வருகின்றனர். இப்படி கோரி வந்த அரசியல் கட்சியினர் முதல் தடவையாக பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரங்களைப் பகிர்வதற்கு முன்வந்துள்ளனர்.

அவர்கள் அவ்வாறான மாற்றத்துக்கு வந்திருப்பது அல்லது அவ்வாறான மாற்றமொன்றை நோக்கி அவர்களை கொண்டுவந்திருப்பதே எமக்கு கிடைத்த வெற்றியாகும்.

பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரங்களைப் பகிர்வது எப்படி நாட்டைப் பிளவுபடுத்துவதாக அமையும்? மகிந்த ராஜபக்ஷவிடம் அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஒரு ஆய்வுகூட இல்லை.

இவ்வாறு ஆய்வுகளை மேற்கொண்டு அதனூடாக கருத்து வெளியிடும் நபரும் அல்ல அவர். அவருடன் உள்ள கூட்டத்தில் எவருக்கும் அதிகாரப்பகிர்வு தொடர்பில் தெளிவு இல்லை.

மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் நீதிமன்றத்தின் ஊடாக, நாளை அவர்களுக்கு எதிராக வரக்கூடிய சவால்களை எவ்வாறு [illegible] கொள்வது பற்றியே சிந்திக்கின்றனர்.

தமக்கு எதிரான மோசடிகள், கொலைக்குற்றச்சாட்டுக்கள் உள்ளிட்டவற்றிலிருந்து எவ்வாறு தப்பிக்கொள்வது என்பதே அவர்களின் முக்கிய யோசனையாகும்.

புதிய அரசியலமைப்பின் முக்கிய விடயங்களில் பௌத்த மதத்துக்கான இடம் இல்லாமல் போகாது.

அது மாத்திரமன்றி பிரிவினை தொடர்பில் மாகாண சபைகள் ஏதாவது கதைத்தால் அவற்றைக் கலைப்பதற்கான அதிகாரம் மத்திய அரசாங்கத்துக்கு வழங்கப்படவுள்ளது.

இவை குறித்து எதுவும் தெரியாமல் அவர்கள் சகலவற்றையும் எதிர்த்து வருகின்றனர்.

இந்த செயற்பாடுகளை யாராவது துரோகம் எனக் கூறுவார்களாயின், அப்படிக் கூறுபவர்களே துரோகிகளாவர்.

போலியான தேசப் பற்றாளர்கள் உடல் முழுவதும் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள். இது சாதாரண நோய் அல்ல. உடம்பு முழுவதும் பரவும் சின்னமுத்து போன்ற நோயைக் கொண்டவர்கள்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினரும் இவ்வாறான நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இரண்டு வாரங்களில் விமான நிலையம் தயார்

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் திருத்த வேலைகள் மற்றும் விமான ஓடுபாதைகளைச் சீரமைக்கும் பணிகள் இன்னும் இரு வாரங்களில் பூர்த்தியாகும் எனத் தெரியவருகிறது.

இது பற்றித் தெரிவித்த போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் அதிகாரியொருவர், இன்னும் இரண்டு வாரங்களில் விமான நிலையத்தை முழுமையாகத் திறந்துவிட ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும், எனினும், இதனால் பயணிகளுக்கு எந்தவித நன்மையும் உடனடியாகக் கிடைத்துவிடாது என்றும் அவர் தெரிவித்தார்.

விமான நிலையத் திருத்தப் பணிகள் நிறைவுற்றாலும் சர்வதேச விமான சேவைகள் உடனடியாகத் தமது பயணத் திட்டத்தில் மாற்றங்களைச் செய்வதில் சிக்கல்கள் இருப்பதால், சர்வதேச விமானச்சேவைகள் தற்போது நடைமுறையில் இருப்பது போலவே மாலை 6 மணி முதல் காலை 8.30 மணி வரை மட்டுமே நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# நாட்டிலுள்ள 18 நிறுவனங்களை தனியார் மயப்படுத்த முஸ்தீபு

## பந்துல குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு 18 நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதற்கு அல்லது வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கான கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனங்களை விற்பனை செய்வதன் மூலம் 5.8 பில்லியன் அமெரிக்க டொலரினை ஈட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன குற்றம்சாட்டினார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள ஸ்ரீ வஜிரஷ்ரம பௌத்த நிலையத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதன் பிரகாரம் ஹில்டன் ஹோட்டல் 250 மில்லியன் அமெரிக்க டொலர், ஹைட்டி 100 மில்லியன் அமெரிக்க டொலர், வோட்டஸ் ஏஜ் 100 மில்லியன் அமெரிக்க டொலர், கிரேண்ட் ஓரியன்டல் ஹோட்டல் 75 மில்லியன் அமெரிக்க டொலர், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஓய்வு விடுதி 40 மில்லியன் அமெரிக்க டொலர், லிற்றோ காஸ், லங்கா ஹொஸ்பிடல் உட்பட 18 நிறுவனங்களை விற்பனை செய்வதற்கு கணிப்பீடு செய்துள்ளனர் என குற்றஞ்சாட்டியுள்ளார். (இ-7)

# பதவிப் பேராசையே தமிழ் சமூகத்தை அழிக்கிறது

## ஆனந்தசங்கரி அறிக்கை



(கொழும்பு)

தமிழர்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிகார போட்டியும் பதவி பேராசையும் பொதுவாக நாட்டையும், குறிப்பாக தமிழ் சமூகத்தையும் அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றுள்ளது. தற்போது தமிழ் மக்கள் படுகின்ற துன்பதுயரங்களும் மனச்சங்கடங்களும் இன்று பெருமளவில் காணப்படுவதுபோல கடந்த காலங்களில் காணப்படவில்லை. எமது தலைவர்கள் மத்தியில் காணப்படுகின்ற ஒற்றுமையின்மை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. எமது மக்களை ஒரே கொடியின் கீழ் பொது கொள்கையுடன் ஒன்றிணைக்க தவறுவோமேயானால் சுதந்திர இனமாக நாம் தப்பிப்பிழைப்பது முடியாமல் போய்விடும். எம் மத்தியில் பல தலைவர்களும் அத்துடன் பல தமிழ் கட்சிகளின் தலைவர்களும் ஒவ்வொருவரும் எமது மக்களை வெவ்வேறு திசையில் இழுத்துச் செல்வதால் நிலைமை மிகவும் மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. இன்று எமக்கு வேண்டியதெல்லாம் ஒற்றுமையும் பொதுத் தலைமையும் முக்கியமாக உணர்வுகளை தூண்டும் விடயங்களில் இணக்கப்பாடு அவசியமாகிறது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரிவிடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினையை மிக முக்கியமான புனிதமானதொன்றாக ஏற்று சொந்த நலனை கருத்திற் கொள்ளாமல் அதற்கமைய செயற்படுவதே ஆகும். அரசியல் ஒரு தீய செயற்பாடு என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம் ஆனால் பலர் இன்று செய்வதை போல அரசியலை ஒரு தீய செயலாக செய்ய வேண்டிய அவசியமில்லை. சிலர் இன்று ஒன்றையும் மறுநாள் வேறொன்றையும் அதே போல திரும்பத் திரும்ப செய்து கொண்டிருக்கின்றனர். எமக்குப்பல பிரச்சினைகள் உண்டு. ஆனால் ஒவ்வொரு பிரச்சினையும் நாட்டில் ஏற்பட்டுள்ள வறுமையால் உருவாக்கப்படுகின்றது என்பது தான் உண்மை. வறுமையை மட்டும் முறியடித்து விடுவோமேயானால் ஏனைய பிரச்சினைகள் பல தாமாக வே குறைந்து விடும். பல சந்தர்ப்பங்களில் குறைந்த வருமானம்பெறுபவர்களுக்கு இலவசமாகவோ அல்லது குறைந்த விலைக்கோ உணவு பண்டங்களை வழங்குமாறு அரசிடம் கோரி வந்துள்ளேன். துரதிஷ்டவசமாக இன்று வரை எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் இந்த ஆலோசனையை முன்னெடுக்காமல் பிரயோசனமற்ற சில விடயங்களிலும் அல்லது பிரச்சினைக்குரிய பல விடயங்களிலும் தமது பாராளுமன்ற ஆசனங்களை பாதுகாப்பதற்காகவும் திரும்பத் திரும்ப அதனையே பேசிவருகின்றனர்.

பொது மக்களுக்கு சொந்தமான காணிகளை விடுவிப்பதும், காணாமல் போனவர்கள், விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற உத்தரவாதத்துடன் உறவினர்களால் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்கள் ஆகியோரின் தற்போதைய இருப்பிடம் அல்லது அவர்களை பற்றிய விபரங்கள் ஆகிய விடயங்களுக்கு இது வரை தீர்வு காணப்படவில்லை. பொது மக்கள் தமது காணிக்கு எவ்வளவு மதிப்பளிககிறார்கள் என்பதை ஓர் கவிதை மூலம் சேர் வோல்டர் ஸ்கொட் பின்வருமாறு வெளிப்படுத்துகிறார். "இது என்னுடையதும் என்னுடைய தாய்நாடும்என்று தனக்குள்ளே தன்னும் ஒரு போதும் கூறாத உணர்வற்ற ஒருவன் உயிருடன் இருக்கின்றானா?" அந்த கவிதையில் இடம் என்று குறிப்பிட்டது நாட்டை பற்றி மட்டும் அல்லாது தான் பிறந்த சொந்த இருப்பிடம் பற்றியதே. மக்களுடைய காணிகளை பற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்கும்போது அரசுகூட அவ்வாறு சிந்திக்க வேண்டும்உணர்வைதூண்டும் மற்றைய விடயம் காணாமல் போனவர்கள்பற்றியதே. எனது அபிப்பிராயத்தின்படி ஒரு பொருளை இழந்தவனுக்கே அப்பொருளின் அருமை தெரியும். அதேபோல் ஒரு விதவைக்குத்தான் தனது கணவனின் அருமையும் அதே போல் வாழ்வை இழந்தவனுக்கு தனது மனைவியின் அருமையும் தெரியும். பெற்றோர்-பிள்ளைகள் ஆகியோரின்உறவும்அத்தகையதே.

நான் மிகவும் பணிவாக அரசை எச்சரிப்பது யாதெனில் காணிகளையும் உறவுகளையும் இழந்தவர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள் என்பதே. அரசுக்கு உள்ள ஒரேயொரு வழி காலம் கடத்தாமல்உடனடியாக காணாமல் போனவர்களின் விபரங்களை உண்மையாக திரட்டுவதும், இழப்புக்களை அடைந்தவர்களுக்கு எத்தகைய சிறந்த வழியில் உதவ வேண்டும் என்பதையும் அறிந்து கொள்வதே. அத்துடன் காணிகளை பொறுத்தவரையில் அவ்வாறான காணிகளை கையகப்படுத்தி வைத்திருக்க வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லையென்பதால் அனைவரினது காணிகளை விடுவிக்க நடவடிக்கையெடுக்க வேண்டும். மேலும் கூறுவதானால் அரசு இராணுவ முகாம்களாக செயற்பட்ட இடங்களையும்ஆயுதப்போராட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு எங்கெங்கு இராணுவ முகாம்கள் அமைந்திருந்தனவோ அதனை தவிர்த்து எஞ்சிய அத்தனையையும்மூடி விட வேண்டும். காணிகளில் அமைந்திருந்த கட்டடங்களில்பொருத்தமான முறையில் பல்கலைகழக வளாகங்களுக்கோ தொழில் நுட்பகல்லூரிகளுக்கோ அரச காரியாலயங்களுக்கோ பொருத்தமான வைக்கு கையளிக்கலாம்.

ஜனாதிபதி அவர்களே, இந்த காணிப்பிரச்சினையை மிகச் சிறந்த முறையில் தீர்க்கப்பட வேண்டுமாக இருந்தால் பொறுப்புள்ள பிரமுகர்களைக் கொண்டு நாடு முழுவதும் சுற்றி வந்து பொருத்தமான காணிகளை பொருத்தமான தேவைக்கு சிபாரிசு செய்யலாம். அதேபோல்காணாமல் போனவர்களுக்கு ஓர் ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து இறுதி யுத்தக் களத்தில் யார் யாருக்கு என்னென்ன இடம்பெற்றது என்பதை விசாரணை செய்து அறிய வேண்டும். அப்படியானால் பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வருவதோடு காணாமல்போனோர், ஏனையோர் பற்றிய நல்லதும் கெட்டதும் தெரியவரும்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா:21<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் :பட்டதாரி/வங்கியாளர்<br>தொ.இ: B/7081 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில் :BSc, SLAS/அரசதொழில்<br>தொ.இ: G/4636 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம : 5'1"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/7082 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 94செவ் 8 ல<br>உயரம்: 5'தகைமை/தொழில்:BA/முன்பள்ளிஆசிரியர்<br>தொ.இ: G/4650 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/7086 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 38 உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4665 |
| பிறப்பு : 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 65செவ் 1 ல்<br>உயரம் : 5'7"<br>தகைமை/தொழில்:BA/கணக்காளர்<br>தொ.இ: B/7093 | பிறப்பு : 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா : 27சூரிசெவ் 10 ல்<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்:BCS, ICT/ஆசிரியர்<br>தொ.இ: G/4674 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.


# உள்ளூராட்சித் தேர்தல் தாமதம் எனக்கு எந்தத் தொடர்புமில்லை

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தாமதமாவதற்கும் தமக்கும்எவ்வித தொடர்பும்இல்லையென தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கண்டி சில்வெஸ்டார் கல்லூரியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றிய அவர் தேர்தலை நடத்துவதில் தனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லையெனவும் தெரிவித்தார்.

"தேர்தல் தாமதமாவதாக பொதுமக்கள் என்னையே திட்டித்தீர்க்கின்றனர். பேஸ்புக்கிலும், பத்திரிகைகளிலும் என்னை வைத்து கேலிச்சித்திரம் வரைகின்றனர். எனினும் அவைகள் வரவேற் கத்தக்கவை. பொது மக்களின் வெறுப்பு ஏதோ ஒரு வகையில் வெளிவர வேண்டியது அவசியம். எனினும் என்னை திட்டுவதில் பயனில்லை. என்றாலும் திட்டுவாங்குவதற்கு நான்தயார்.

இதனால் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் பாதிப்பு ஏற்படவில்லை. பொது மக்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பொதுமக்களுக்குரியது. சட்டத்தை உருவாக்குவதற்கு மக்கள் நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளித்துள்ளனர்.

ஆகவே தேர்தல் புதிய முறையிலா அல்லது பழைய முறையிலா நடைபெற வேண்டுமென நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும். தேர்தல் நடைபெற்றே ஆகவேண்டும். தேர்தலை ஒத்திவைக்க எங்களுக்கும் விருப்பமில்லை.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சாசனத்தில் நாம் கையெழுத்திட்டுள்ளோம். ஆளும் அதிகாரம் தேர்தல் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டுமென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தேர்தல் நடைபெற வேண்டும்.

தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே காணப்படுகின்றது. தேர்தல் முறை, எல்லை நிர்ணயம் உள்ளிட்ட பல விடயங்களில் பொதுமக்களுக்கு குழப்பம் காணப்படுகின்றது.

இது கிரிக்கெட் கதை போன்றுதான் மைதானம் இருந்தாலும் சட்டத்தை உருவாக்காமல் போட்டியை நடத்த முடியாது. விக்கெட் இருந்தாலும், நடுவர்கள் இருந்தாலும் மைதானம் இன்றி போட்டியை நடத்துவது சாத்தியமாகாது." என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பதவியை இழப்பாரா கீதா



கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர் கீதா குமாரசிங்க தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கும் அபாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்.

கீதா குமாரசிங்க இன்னும் சுவிட்ஸர்லாந்தின் பிரஜையே என்பதைச் சுட்டிக் காட்டி இதனால்அவர்இலங்கை பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடியாது என்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

ஒரு நாட்டின் பிரஜை மற்றொரு நாட்டின் அரசியலில் முக்கிய பதவிகளை வகிக்க முடியாது என்பது உலகின் பெரும்பாலான நாடுகளின் சட்டமாகும். இலங்கையும் இதற்கு விதி விலக்கல்ல! இதன்படி, பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெறும் பட்சத்தில் கீதா குமாரசிங்க சுவிட்ஸர்லாந்தின் பிரஜாவுரிமையை திருப்பிக் கொடுத்திருக்கவேண்டும். எனினும் இதுவரை அவர் அதைத் திருப்பியளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)





# சிறுவர் அரங்கம்

## உயிரைக் காப்பாற்றிய வைத்தியம்

……மான் குட்டி சுந்தர் பாடசாலைக்கு செல்ல ஆரம்பித்து நான்கைந்து மாதங்கள் ஓடி விட்டன. அங்கெல்லாம் மனிதர்களை போல் பனிரெண்டு வருடங்கள் அடிப்படை கல்வி கற்க வேண்டியதில்லை. காரணம், மனிதனை போல் ஐம்பது ஆறுபது ஆண்டுகளுக்கு மேல் வாழ்வது என்பது யானை, மற்றும் ஒரு சில மிருகங்கள்தான்.

மற்றவைகளெல்லாம், பத்து பன்னிரெண்டு வருடங்கள் வாழ்நாளையே கொண்டிருக்கும்.

அதனால் ஒரு வருடப் படிப்பு முடிந்தாலே அது பனிரெண்டு வகுப்பு முடித்தற்க்கு சமம். மான் குட்டி சுந்தர் ஒரு வருட படிப்பு முடிந்தவுடன், கரடியாரை சந்தித்தது.


கரடியார் மான் குட்டி சுந்தரை பாராட்டி நீ நன்றாக படித்து முடித்து விட்டாய், நல்ல அறிவாளியாகவும் ஆகி விட்டாய். நீ ஏன் மருத்துவம் படிக்க கூடாது என்று கேட்டது.எனக்கும் ஆசைதான், அம்மா ஒத்துக்கொள்ள வேண்டுமே என்று சொன்னது. நீ கவலை படாதே, நான் உன் அம்மாவிடம் பேசுகிறேன் என்று கரடியார் சொன்னது.

சொன்னது போலவே மான் குட்டி சுந்தரை தன் சொந்த பாதுகாப்பில் காட்டுக்குள் தொலை தூரத்தில் உள்ள மருத்துவர் நரியாரிடம் மருத்துவம் கற்க அனுப்பியது. மான் குட்டி சுந்தரும் அங்கு ஒரு வருடம் நல்ல முறையில் வைத்தியம் கற்று இங்கு வந்து சேர்ந்தது. கரடியார் அதை பாராட்டி இங்குள்ள மிருகங்களுக்கு நீதான் இனி வைத்தியர் என்று சொல்லி ஒரு வைத்திய சாலையையும் நிறுவி கொடுத்தது.

இப்பொழுது மான் குட்டி சுந்தர் வைத்தியர் ஆகி விட்டார். நாமும் அதனை வைத்தியர் சுந்தர் என்று அழைப்போம்.

ஒரு நாள் மான் குட்டி வைத்தியர் சுந்தர் காட்டுக்குள் மூலிகைகளை பறித்துக்கொண்டிருந்த பொழுது ஒரு மிருகத்தின் கூக்குரல் கேட்டது. அந்த இடத்துக்கு விரைந்து சென்று பார்த்தது. அங்கு புலி ஒன்று வரிக்குதிரைய பிடித்து





கொல்வதற்காக தயாராக இருந்தது.அருகில் வரிக்குதிரையின் குட்டி அம்மாவை காப்பாற்ற முடியாமல் கதறிக் கொண்டிருந்தது.

இதைப் பார்த்த வைத்தியர் மான் குட்டி சுந்தர், நேராக புலியிடம் சென்று நீங்கள் செய்வது நியாம் இல்லை, ஒரு குட்டியை வைத்திருக்கும் தாயை கொல்லலாமா? என்று கேட்டது.

நீ யாரடா என்னை கேட்பது? என்று மிரட்டியது புலி. ஐயா நான் இந்த காட்டின் வைத்தியர் என்று சொன்னது. உடனே புலி வைத்தியரா? என்று மேலும் கீழும் பார்த்தது. உங்களுக்கு சந்தேகம் என்றால் நம் கரடியாரிடம் கேளுங்கள் என்று சொன்னது மான் குட்டி சுந்தர். அதெல்லாம் வேண்டாம், நான் இந்த வரிக்குதிரையை என் குட்டிகளுக்கு கொண்டு போகலாம் என்று இருந்தேன்.

தொடரும்…..

03.2017
16

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கிமு 597 - பாபிலோனியர்கள் ஜெருசலேமைக் கைப்பற்றினர்.
- 1190 - சிலுவைப் படையினர் (Crusaders) யோர்க் நகரின் யூதர்களைப் படுகொலை செய்ய ஆரம்பித்தனர். பல யூதர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.
- 1521 - மகலன் பிலிப்பீன்சை அடைந்தான்.
- 1792 - சுவீடன் மன்னன் மூன்றாம் குஸ்டாவ் சுடப்பட்டான். இவன் மார்ச் 29 இல் இறந்தான்.
- 1926 - முதலாவது திரவ-எரிபொருளினால் உந்தும் ஏவுகணையை மசாசுசெட்சில் ராபர்ட் கொடார்ட் என்பவர் செலுத்தினார்.
- 1939 - பிராக் அரண்மனையில் இருந்து ஹிட்லர் பெஹேமியா, மொராவியாவை ஜேர்மனியின் ஒரு பகுதியாக அறிவித்தார்.
- 1942 - முதலாவது வி-2 ஏவுகணை ஏவப்பட்டது (ஏவப்பட்ட உடனேயே வெடித்துச் சிதறியது).
- 1945 - இரண்டாம் உலகப் போர்: இவோ ஜீமா சண்டை முடிவுக்கு வந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியாவின் 20-நிமிடக் குண்டுவீச்சில் ஜெர்மனியின் வூர்ஸ்பேர்க் நகரின் 90 விழுக்காடு அழிந்தது. 5,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1962 - மேற்கு பசிபிக் பெருங்கடலில் அமெரிக்க விமானம் 107 பயணிகளுடன் காணாமல் போனது.
- 1963 - பாலியில் ஆகூங்க் மலை நெருப்பு கக்கி 11,000 பேர் வரை இறந்தனர்.
- 1966 - ஜெமினி 8, நாசாவின்-12வது மனிதரைக் கொண்டுசென்ற விண்கலம், ஏவப்பட்டது.
- 1968 - வியட்நாம் போர்: மை லாய் என்ற இடத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 350 முதல் 500 வரையிலான வியட்நாமியர்கள் அமெரிக்கப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1969 - வெனிசுவேலாவில் உள்ளூர் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 155 பேர் கொல்லப்பட்டனர்.
- 1985 - அசோசியேட்டட் பிரஸ் ஊடகவியலாளர் டெரி ஆன்டர்சன் பெய்ரூட் நகரில் கடத்தப்பட்டார். இவர் பின்னர் டிசம்பர் 4, 1991 இல் விடுதலை ஆனார்.
- 1988 - ஈராக்கில் குருதிய நகரான ஹலப்ஜாவில் நச்சு வாயுத் தாக்குதலில் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர்.
- 2006 - மனித உரிமைகளுக்கான ஐநா அமைப்பை உருவாக்குவதற்கு ஐநாவின் பொதுச்சபை ஆதரவாக வாக்களித்தது.

பிறப்புகள்

- 1751 - ஜார்ஜ் மாடிசன், ஐக்கிய அமெரிக்காவின் 4வது குடியரசுத் தலைவர் (இ. 1836)
- 1789 - கியோர்க் ஓம், ஜெர்மனிய இயற்பியலாளர். (இ. 1854)
- 1839 - ரெனே சளி-புரூடோம், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1907)
- 1918 - பிரெடெரிக் ரெயின்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1998)
- 1929 - இரா. திருமுருகன், தமிழறிஞர்
- 1953 - ரிச்சர்ட் ஸ்டால்மன், கட்டற்ற மென்பொருள் இயக்கம், க்னூ திட்டம் போன்றவற்றின் தோற்றுவிப்பாளர்.
- 1954 - அருண் விஜயராணி, ஈழத்து எழுத்தாளர். (இ. 2015)

இறப்புக்கள்

- 1914 - சார்ல்ஸ் கோபட், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1843)
- 1935 - ஜோன் மாக்லியட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1876)
- 1940 - செல்மா லாகர்லோஃப், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (பி. 1858)
- 1945 - எம். ஜே. லெகொக் அடிகளார், அருட்தந்தை. (பி. 1880)
- 1989 - அழ. வள்ளியப்பா குழந்தை இலக்கிய கவிஞர். (பி. 1922)
- 1998 - டெரெக் பார்ட்டன், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1918)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 40 | 40 | 40 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 90 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 120 | 120 | 100 | 120 | 120 |
| தக்காளி | 50 | 60 | 40 | 30 | 40 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 100 | 70 | 60 | 60 | 80 | 70 |
| கோவா | 20 | 50 | 20 | 30 | 30 | 40 | 40 |
| கரட் | 80 | 60 | 40 | 60 | 60 | 100 | 40 |
| பூசணி | 60 | 60 | 35 | 50 | 50 | 60 | 50 |
| புடோல் | 80 | 60 | 40 | 80 | 100 | 80 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 100 | 100 | 80 | 120 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 | 100 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 200 | 80 | 60 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 50 | 100 | 100 | 160 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 100 | 50 | 50 | 100 | 50 |
| பயற்றங்காய் | 140 | 100 | 80 | 100 | 80 | 120 | 100 |
| லீக்ஸ் | 40 | 100 | 60 | 80 | 60 | 80 | 50 |
| பீற்றூட் | 60 | 100 | 40 | 40 | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 140 | 100 | 90 | 80 | 120 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 600 | 700 | 400 | 300 | 600 | 600 | 400 |
| போஞ்சி | 120 | 200 | 60 | 120 | 120 | 160 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 40 | 30 | 30 | 30 | 20 |
| கீரை - 1பிடி | 20 | 40 | 20 | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 60 | 50 | 100 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 20-50 | 60 | 65 | 40-60 | 60 |
| இராசவள்ளி | 200 | 300 | 160 | 20 | 200 | 200 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 50 | 40 | 50 | 60 | 120 | 60 |
| முள்ளங்கி | 60 | 50 | 30 | 50 | 50 | 80 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 15 | 30 | 40 | 20 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 60 | 50 | 60 | 80 | 80 | 60 |

எல்லா மனிதர்களையும் நம்பிவிடுவது ஆபத்து.
ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து.

-[illegible]

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பதவியால் எதிர்ப்பு இனத்தால் ஒற்றுமை

மகிந்த தரப்பும் மைத்திரி – ரணில் தரப்பும் பதவிப் போட்டிகளில் எதிர்ப்பு நிலை கொண்டுள்ளனரே தவிர, இனத்தால் அவர்கள் மிகவும் ஒற்றுமையாக உள்ளனர் என்பதை தமிழ் அரசியல்வாதிகள் நன்கு உணர வேண்டும்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

ஜனாதிபதித் தேர்தலில் நான் தோற்றிருந்தால் என் அத்தியாயம் முடிந்து போயிருக்கும் என்ற பொருள்பட கூறியிருந்தார்.

அதே மைத்திரிபால சிறிசேன சர்வதேச போர்க்குற்ற விசாரணையில் இருந்து மகிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்றுவதில் மிகவும் தீவிரமாக இருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அதாவது மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்தால் கூட தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இத்துணை பிரயத்தனம் செய்திருக்க மாட்டார் என்று கூறுமளவில் மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்றுவதில் கடுமையாகப் பாடுபட்டுள்ளார்.

தமிழ் மக்களின் வாக்குகளையும் பெற்று ஜனாதிபதி பதவியைத் தனதாக்கிக் கொண்ட மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ஷ மீது கொண்ட பகைமையையும் மறந்து, அவரை சர்வதேச போர்க்குற்ற விசாரணையில் இருந்து காப்பாற்றினார்.

கூடவே நாட்டின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் எதிரியாக இருந்த போதிலும் ஜெனிவாக் கூட்டத்தொடரில் மகிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்றுவதே தன் இனத்துக்குத் தான் செய்யும் பேருதவி என்று நினைத்தார். அதற்காக அவர் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் வாதிட்டார்.

அவரின் கருத்துக்களை ஐ.நா மனித உரிமைகள் பேரவை அங்கீகரிப்பதாக அமைந்து போக, மின்சாரக் கதிரையில் இருந்து மகிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்றினேன் என்று மங்கள சமரவீர பிரமாதமாகக் கூறினார்.

இந்தச் சம்பவத்தை இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகள் ஒரு கணம் நிதானமாக உற்று நோக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் நான் தோற்றிருந்தால் இன்று என் அத்தியாயம் முடிந்து போயிருக்கும் என்று கூறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்ஷவின் முதல் எதிரியாக இருக்கக்கூடிய மங்கள சமரவீர போன்றவர்கள் அரசியல் பழிகளைத் தீர்ப்பதைத் தவிர்த்து, மகிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

இதற்கு முழுக்காரணம் விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போர் செய்து வெற்றியைப் பெற்றுத்தந்த மகிந்த ராஜபக்ஷவைத் தண்டிப்பதானது சிங்கள இனத்துக்குத் தாம் செய்யும் துரோகத்தனம் எனவும்,

மாறாக மகிந்த ராஜபக்ஷ தண்டிக்கப்பட்டால் அது தமிழ் மக்களுக்கு உற்சாகத்தை – ஊக்கத்தைக் கொடுத்துவிடும் என்பதாகக் கருதப்பட்டதாலுமே மகிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்றுவதில் நல்லாட்சி தீவிரமாக இருந்தது.

அதேநேரம் எங்கள் தமிழ் அரசியல் தலைமையோ விடுதலைப் புலிகளைக் குறைகூறுவதிலும் முஸ்லிம் மக்களை வெளியேற்றியது மகாதவறு என்று கூறி தங்களை நியாயவாதிகளாக, நடுநிலையாளர்களாகக் காட்டுவதிலுமே கருத்தாய் இருக்கின்றனர்.

இதனால்தான் தமிழினம் இன்றுவரை அடிமைப்பட்ட இனமாகவும் சிங்கள இனம் ஆளும் இனமாகவும் இருக்கிறது.

# கலை இலக்கியப் போட்டிக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி படிப்பகத்தின் 50ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு வல்வை நெடியகாடு இளைஞர் கலா மன்றம் நடத்தும் பொன்விழா கலை இலக்கியப் போட்டிகளுக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. கவிதை, சிறுகதை, கட்டுரை ஆகியன திறந்த போட்டிகளாக இடம் பெறவுள்ளன.

கவிதைப்போட்டி –வாசிப்பே அறிவுக்கு வலுவூட்டும் என்ற தலைப்பில் 350 சொற்களுக்கு குறையாத கவிதையை எழுதி உறுதிப்படுத்தி அனுப்பி வைத்தல் வேண்டும்.

சிறுகதைப்போட்டி– சமுதாய உணர்வு மற்றும் பாலியல் சித்திரவதைகள், வாள் வெட்டுச்சம்பவங்கள், போதைவஸ்து பாவனை போன்ற சமகாலப் பிரச்சினைகளை மையப்படுத்தியதாகவும் அவற்றுக்கான தீர்வுகளை வழங்கக் கூடியதாகவும் இருக்கும் வகையில் சிறுகதையை ஆக்குதல் வேண்டும். அத்துடன் கதைக்குப் பொருத்தமான தலைப்பினையும் இடுதல் வேண்டும். சிறுகதை 450 சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

கட்டுரைப்போட்டி– அறிவுசார் சமூகத்தை உருவாக்குவதில் வாசிப்பின் முக்கியத்துவம் எனும் தலைப்பில் 500 சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும். இத்தலைப்பு தொடர்பாக் ஆய்வு ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் அமையக்கூடிய வகையில் கட்டுரையினை எழுதி அனுப்புதல் வேண்டும். கட்டுரைகள் தாளின் ஒரு பக்கத்தில் எழுதுதல் வேண்டும். திறந்த போட்டிக்கான நிபந்தனைகளாக ஆக்கங்கள் அரசியல் கலப்புள்ளவையாகவோ எவரையும் தனிப்பட்ட முறையிலோ அல்லது மதம், சமூகம் போன்ற பிரிவினரின் மனங்களைப் புண்படுத்தும் வகையில் இருத்தல் கூடாது.

எழுதப்படும் ஆக்கங்கள் ஏற்கனவே அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் வெளிவராதவையாக இருத்தல் வேண்டும். இன்னொருவரின் தழுவலாகவோ/ மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டவையாகவோ இருத்தல் கூடாது.

திறந்த போட்டியாளர்கள் தமது சுயவிபரக் கோவையை தனியான தாளில் எழுதி ஆக்கத்துடன் அதனை இணைத்து தமது சொந்தப் படைப்பு என உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும். இப்போட்டிகளுக்கு வயதெல்லை இல்லை. போட்டியாளர் ஒரு போட்டியில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆக்கங்களை அனுப்ப முடியாது. நடுவர்களின் தீர்ப்பு இறுதியானது. போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கான முடிவுகள் தனித்தனியாக தபால்மூலம் அனுப்பி வைக்கப்படும்.

போட்டிக்குரிய முடிவுத்திகதி 05.04.2017. ஆக்கங்களை தலைவர்/செயலாளர், கணபதி படிப்பகம், நெடியகாடு, வல்வெட்டித்துறை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். திறந்த போட்டிகளில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று ஆக்கங்களுக்கு பணப்பரிசுகளும் சான்றிதழ்களும் கணபதி படிப்பகத்தின் பொன்விழா நிறைவில் வழங்கப்படும். முதலாம் பரிசு 10 ஆயிரம் ரூபா, இரண்டாம் பரிசு 8 ஆயிரம் ரூபா, மூன்றாம் பரிசு 5 ஆயிரம் ரூபா என போட்டி ஒருங்கிணைப்பாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## ஆன்மீக அருளுரை

யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை ஆன்மீக அருளுரை நடத்தப்பட்டு வருகிறது.

இதில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை, "நம்பிக்கையும் பொறுமையும் வேண்டும்", எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை நிகழ்த்தப்படும் (இ-3)

# பேச்சுப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பன்னிரு மாத விளக்கு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைவாக பாடசாலை மாணவர்கள் சிறுவர் கழகம் மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி அண்மையில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

இப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் விபரம் 12வயது முதல் 15 வயது வரை 1ஆம் இடம் குலேந்திரன் மோகிதன்– யா/மத்திய கல்லூரி, 2ஆம் இடம்– தணிஸ் அன்ருஸ்– யா/புனித பத்திரிசியார் கல்லூரி, 3ஆம் இடம் ஆன்தர்சனா செல்வேந்திரன்– யா/மரியன்னை பேராலய மறைப் பாடசாலை.

16 வயது முதல் 18வயது வரை 1ஆம் இடம்–ரஜிதா அன்ரன்– யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயும், 2ஆம் இடம் ஜெ.ஜெயப்பிர தாப்– யா/புனித பத்திரிசியார் கல்லூரி, 3ஆம் இடம்– தேவராசா கவிதா– யா/நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயம். (இ-3)

# வினாவிடைத் தொகுப்பு வழங்கல்

இலங்கை கல்வி அபிவிருத்தி ஆலோசனை அமையத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி வே. தேவசேனாதிபதியின் அனுசரணையில் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான வினாவிடைத் தொகுப்பு வழங்கலும் கருத்தரங்கும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

முதலாம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை யாழ். வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் இரசாயனவியல், உயிரியல் பாடங்களுக்கான கருத்தரங்கும் இரண்டாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் 4.30 மணி வரை யாழ். மத்திய கல்லூரியில் வர்த்தக பாடங்களுக்கான கருத்தரங்கும் இடம் பெறவுள்ளன. (இ-3)

# நூல் நிலையத் திறப்புவிழா

(கரணவாய்)

செலான் வங்கியால் பாடசாலை மாணவர்களுக்கான 126 ஆவது பஹசர நூல் நிலையத் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக செலான் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் சுரேஷ் சுப்ரம், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், ராசா ஜெயரத்தினம் (ஜனா சிவில் வேக்ஸ் உரிமையாளர்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-60)

# சாஸ்திரங்கள்

✦ ஒரு மீனவன் கடலில் மீன்பிடித்து முடித்துவிட்டு வலை நிறைய மீன்களோடு அவன் கரையேறுவது போன்ற ஒரு ஓவியத்தை உங்கள் வீட்டு சுவரிலோ அல்லது தொழிலகங்களின் சுவரிலோ வரைந்து வைத்தால் செல்வம் ஏராளமாய் சேரும்.


-மனையடி சாஸ்திரம்

✦ தேங்காய் எண்ணெய் கணபதிக்குப் பிரியமானது. எனவே தேங்காய் எண்ணெய்விட்டு விளக்கேற்றுவதால் தடைகள் நீங்கும். தொடங்கும் செயல்கள் நன்மை பயக்கும். நெய் விளக்கு மகாலட்சுமிக்கும் நல்லெண்ணெய் விளக்கு ஸ்ரீமன் நாராயணனுக்கும் பிரியமானது.

-ஸ்ரீகாரணம்

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## தேடுவது உனக்கு கிடைக்கும்



✦ வெண்ணெய் எடுக்க சூ! உதயத்திற்கு முன்பாக கடைய வேண்டும். பகலில் கடைந்தால் நன்றாகச் சேராது. அதுபோல் சிறுவயதிலேயே ஆன்மிக நெறியில் நின்று மனதைக் கடவுளிடம் செலுத்தினால் தான் இறைக்காட்சி கிடைக்கும்.

✦ மனிதனின் மனம் கடுகுப் பொட்டலம போன்றது. அது கிழிந்து, நாலாப் பக்கங்களிலும் ஓடிவிட்டால் அதை ஒன்று சேர்ப்பது சிரமம். அதுபோல் மனம் பல வழிகளில் சென்று, உலக விடயங்களோடு ஈடுபட்டிருக்கும் போது அதைக் குவித்து ஒருமுகப்படுத்துவதும் சுலபமல்ல.

✦ கடவுளைத் தேடுபவன் அவரை அடைகிறான், செல்வத்தைத் தேடுபவன் அவற்றை அடைகிறான். நீ எதைத் தேடுகிறாயோ அதையே அடைவாய்.

✦ "நான்" என்னும் அகங்காரம் அழியும்போது கடவுள் தோன்றுகிறார். ஒருவனது அகங்காரம் அவனது உடல் இருக்கும் வரை அவனைவிட்டு முற்றிலும் நீங்குவதில்லை.

✦ ஒளியை உணர்பவன் இருளையும் உணர்கிறான். பாவம் தெரிந்தவனுக்கு புண்ணியமும் தெரியும் குணத்தை அறிந்தவன், குற்றத்தைப் பற்றியும் அறிந்திருப்பான்.

# சத்திய தரிசனம்



## கட்டுப்பாடற்ற சுதந்திரம் கூடாது

❖ பெண்கள் ஆண்களைப் போல் படிக்கலாம். திறமைக்கேற்ப சம்பாதிக்கலாம். ஆனால், பெண்களுக்கு கட்டுப்பாடற்ற சுதந்திரம் கிடைப்பது நல்லதல்ல. அது அவர்களுக்கு கெடுதலையே உண்டாக்கும்.

❖ சமுதாயத்தில் பொதுவாழ்வில் பெண்கள் ஈடுபடும்போது ஆத்ம தர்மம் என்ற குறிக்கோளை மறக்கக் கூடாது. படிப்பு என்பது விவேகத்தையும், நன்மைகளை பகுத்தறியும் அறிவையும் கொடுப்பதாக அமைய வேண்டும். பழங்காலத்தில் நன்குபடித்த பெண்கள் இருந்திருக்கின்றனர். அப்பெண்களைப் போல, தற்கால பெண்களும் தமக்குரிய தர்மநெறிமுறைகளை மீறாமல் ஒழுக்கத்தைக் கண்ணாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

❖ நல்ல ஒழுக்கம் என்ற அடிப்படையை நம்பியே எதிர்கால சமுதாயம் இருக்கிறது என்பதை பெண்கள் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. அனுசூயா, சாவித்திரி, நளாயினி போன்ற பெண் மணிகள் அறிவில் சிறந்தவர்களாகவும், கற்புநெறி தவறாதவர்களாகவும் வாழ்ந்து நமக்கு வழிகாட்டி இருக்கின்றனர்.

❖ பெண்கள் நவீனகால நுட்பமான அறிவியல் அறிவினைப் பெற்றாலும், நம் நாட்டின் அடிப்படையான ஆன்மீக சிந்தனைகளைப் பாதுகாக்கும் பெட்டகங்களாகவும் இருக்க வேண்டும். எப்போதும் அகத்தூய்மையையும், உள்ளுணர்வையும், கண்ணோட்டத்தையும் பாதுகாக்கவேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

# இமையாணன் கழக வீரர்களுக்கிடையிலான சொக்கர் லீக் உதைப்பந்தாட்ட சுற்றுத்தொடர் சம்பியனானது பிளாக்ஸ் கொக்ஸ்



இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக வீரர்களுக் கிடையில் இடம்பெற்ற உதைபந் தாட்ட தொடரின் இறுதிப் போட்டி கழக மைதானத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

12-03-2017 அன்று நடத்தப்பட்ட சொக்கர் லீக் போட்டியின் இறுதியாட்டத்தில் பிளாக்ஸ் கொக்ஸ் அணியினை எதிர்த்து அயன் ஸ்ரார் அணியினர் மோதி னர்.

முதல்பாதியாட்டத்தில் மிகவும் விறுவிப்பாக ஆடிய பிளாக்ஸ் கொக்ஸ் அணியின் வீரரான சுலக்சன் முதல் கோலினைப் போட்டு தனது அணியைப் பலப்படுத்தினார்.

இரண்டாவது பாதியாட்டத்தில் அயன் ஸ்ரார் சிறப்பாக ஆடிய போதும் கோல் போடும் சந்தர்ப் பத்தினை பெறப்படாத நிலையில் ஆட்டத்தின் இறுதி நேர முடிவில் 1:0 என்ற அடிப்படையில் பிளாக்ஸ் கொக்ஸ் அணி வெற்றியை தம தாக்கியது.

## உடுத்துறை செந்தமிழ் அரையிறுதிக்கு தெரிவு



வடமராட்சி கிழக்கு யுத் அணிக ளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற முதலாவது சுற்றில் மருதங்கேணி கணேசானந்தா அணியினை வெற்றி கொண்ட உடுத்துறை செந்தமிழ் விளை யாட்டுக் கழகம் இரண்டாவது சுற்றில் பாரதி விளையாட்டுக் கழகத் தினை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

அரையிறுதியில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகத் தினை எதிர்த்து செம்பியன் பற்று பிலிப் நேரிஷ் அணி மோதவுள்ளது.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## எல்லாளன் வெற்றி

தந்தை செல்வா விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுப் போட்டியில் 12.03.2017 அன்று நடந்த அரையிறுதிப் போட்டியில் வோரியஸ் அணியுடன் எல்லாளன் அணி மோதியது. இதன் படி முதலில் துடுப்பெடுத்தாடிய வோரியஸ் அணி 10 ஓவர்கள் முடிவில் 47 ஓட்டங்கள் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய எல்லாளன் விதுர்சனின் அதிரடி யால் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 5 ஓவர்கள் வெற்றி இல க்கை அடைந்தது. இறுதிப்போட்டியில் கோல்ட்ஸ்ரார் அணியுடன் மோத வுள்ளது. (கு)



தென்மராட்சி வலயப் பாடசாலையின் 16 வயதுப்பிரிவு அணி யினருக்கான கால்பந்தாட்ட போட்டியில் முதலிடத்தினை பெற்ற வரணி மத்திய கல்லூரி அணியினரை படத்தில் காணலாம். (கு)

## வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் கரப்பந்தாட்டத்தில் மீண்டும் சம்பியன்




வடமராட்சி வலயப் பாடசாலை களுக்கிடையிலான கரப்பந் தாட்டச் சுற்றுப்போட்டிகள் அண்மையில் நெல்லியடி மத்திய கல்லூரி மைதா னத்தில் இடம்பெற்றன.

இதில் 20 வயதுப் பிரிவினருக் கான இறுதியாட்டத்தில் தொண்டை மானாறு வீ.ம.வியும் உடுப்பிட்டி அ.மி.கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இவ்வாட்டத்தில் முதல் செற்றை உடுப்பிட்டி அ.மி. கல்லூரி பெற்றது. இதனைத் தொடர்ந்து தன்னைச் சுதாகரித்துக்கொண்ட தொண்டை மானாறு அணி அடுத்த இரு செற் களையும் 25:21, 25:23 என்று வெற்றி கொண்டு 2:1 என்ற செட்கணக் கில் சம்பியனாகியது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை கரவெட்டி விக் னேஸ்வராக்கல்லூரி பெற்றது. (க-60)

## வடமராட்சி பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான கடற்கரை கரப்பந்து உடுப்பிட்டி சம்பியன்



வடமராட்சி வலயப் பாடசாலை களுக்கு இடையிலான கடற்கரை கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி இவ்வருடத்திற் கான சம்பியனாகியது

இப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை வல்வை உதய சூரியன் உல்லாசக் கடற் கரையில் இடம் பெற்றது.

இவ்விறுதியாட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் பருத்தித் துறை சென்தோமஸ் பெண்கள் பாட சாலையும் மோதின. 3 செற்களைக் கொண்ட இவ்வாட்டத்தில் 22:20, 21:16 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 என்ற நேர் செற்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. இப் பிரிவில் மூன்றாமிடத்தை தொண் டைமானாறு வீரகத்தி மகா வித்தி யாலயம் பெற்றது. (க-60)

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்



காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில்

# மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம்



(கரணவாய்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் மருதங்கேணிப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று தொடக்கம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்துக்கு எதிர்புறத்தே அதாவது தாளையடி - மருதங்கேணி வீதிக்கு கிழக்குப் பக்கமாக உள்ள வேப்பமரத்தின் கீழே இக்கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தாளையடிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் முதலில் கவனயீர்ப்புப் போராட்டத்தை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பித்தார்.

இதனைத் தொடர்ந்து காணாமல்போனோரின் உறவினர்கள் வருகை தந்து இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

முற்பகல் 10 மணியளவில் இருந்து மாலை 5 மணியுடன் நிறைவுற்ற இக்கவனயீர்ப்புப் போராட்டம் இன்று காலையில் மீண்டும் ஆரம்பமாகி மாலை நிறைவடைய உள்ளது.

இப்போராட்டம் காலவரையறையற்று நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-60)

கேப்பாப்பிலவு நில மீட்பு

# போராட்டத்துக்கு எதிராக இராணுவம் வழக்குத் தாக்கல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு இராணுவ படைத் தலைமையகம் முன்பாக கேப்பாப்பிலவு மக்கள் தமது பூர்வீக நிலங்களை விடுவிக்கக் கோரி கடந்த முதலாம் திகதி ஆரம்பித்த போராட்டம் நேற்று பதினைந்தாவது நாளாகவும் தொடர்ந்தது.

மக்கள் தம்முடைய பாடசாலை, கோவில்கள், பொதுநோக்கு மண்டபம் மற்றும் தமது பொருளாதார வளமும் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளதோடு தமது காணிக்குள் செல்லாது போராட்டத்தை கைவிடப் போவதில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் இராணுவம் தமது அமைதிக்கு பாதகமாக மக்கள் போராட்டம் இடம்பெறுவதாக தெரிவித்து முள்ளியவளை பொலிஸ் நிலையத்தினூடாக வழக்கு ஒன்றை பதிவுசெய்து போராட்டத்தை நிறுத்த முயற்சித்துள்ளனர்

எனினும் இந்த வழக்கு நேற்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி எஸ்.எம்.எஸ். சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது.

முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் மக்கள் சார்பில் பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகளை குறுக்கு விசாரணை செய்ததோடு உண்மைத்தன்மையையும் நீதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

அத்தோடு மக்களையும் சாட்சியாக கொண்டுவருமாறு கோரிய தற்கமைய வழக்கு இன்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (செ-281)

# இந்து ஆலயங்கள் மீது இனவெறித் தாக்குதல்

## வியாழேந்திரன் எம்.பி சாடல்

இந்து ஆலயங்கள் மீதான இனவெறித் தாக்குதல் கடந்த அரசாங்கத்தைப் போன்று, நல்லாட்சி அரசாங்கத்திலும் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்து ஆலயங்கள் மீது திட்டமிட்டு தாக்கப்படுகின்ற செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதேசத்திற்குட்பட்ட கிண்ணியடி கிராமத்தில் நேற்றுமுன் தினம் இரவு ஒரே நேரத்தில் மூன்று ஆலயங்களின் உண்டியல்கள் சேதமாக்கப்பட்டு, பணம் களவாடப்பட்டு உண்டியல் தூக்கி வீசி எறியப்பட்டுள்ளன.

கிண்ணியடிப் பகுதியிலுள்ள மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் மற்றும் மகா விஷ்ணு ஆலயம், நாகதம்பிரான் ஆலயம் ஆகியவற்றின் உண்டியல்கள் உடைக்கப்பட்டதோடு, ஆலய குருக்களின் ஆடைகள் கிழித்தெறியப்பட்டு, ஆலயத்தின் புனிதப் பொருட்கள் இனந்தெரியாதவர்களால் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து குறித்த ஆலயங்களை நேரில்சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன், மூன்று ஆலயங்கள் ஒரே நேரத்தில் சேதப்படுத்தியமை இந்து மதத்தை இழிவுபடுத்தும் செயல் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். (செ-11)

# ஆலயங்களில் மிருக பலி; தடையுத்தரவு நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு ஆலயங்களில் மிருகங்களை வெட்டி வேள்வி நடத்துவதற்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு நேற்றைய தினம் நீடிக்கப்பட்டுள்ளது

ஆலயங்களில் மிருகங்களைப் பலிகொடுத்து நடத்தப்படும் வேள்விகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி அகில இலங்கை சைவ மகாசபை தாக்கல் செய்திருந்த மனு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிபதி மா.இளஞ்செழியன் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

யாழ் குடாநாட்டின் ஆலயங்கள் சிலவற்றில் மிருகபலி கொடுத்து நடத்தப்படும் வேள்வியை உடனடியாகத் தடுத்து நிறுத்தும் வகையில் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரி அகில இலங்கை சைவமகா சபையினால் சட்டத்தரணி மணிவண்ணன் ஊடாக யாழ் மேல் நீதிமன்றத்தில் தடையீட்டு எழுத்தாணை மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பிலான சட்டத்தரணியின் கோரிக்கையைப் பரிசீலனை செய்த நீதிபதி இளஞ்செழியன் அதற்கான இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்து கடந்த வருடம் தீர்ப்பளித்திருந்தார்

குறித்த வழக்கு நேற்றைய தினம் மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மீண்டும் இடைக்கால தடை உத்தரவை நீடித்ததுடன் கோவில்கள் இறைச்சிக் கடைச்சட்டத்தின் கீழ் இயங்குகின்றனவா? இறைச்சிக்கடைச் சட்டத்தின் கீழேயே இந்த வேள்விகளுக்கான ஆடு, கோழி என்பவற்றை வெட்டுவதற்கான அனுமதி வழங்கப்படுவதனால் ஆலயங்களுக்கு அத்தகைய அனுமதி வழங்க முடியாது. இறைச்சிக் கடை நடத்துவதற்கான அனுமதியைத்தான் கோருகிறீர்கள்.

கோவில்களில் மிருகங்களை வைத்து பூஜைகள் மேற்கொள்ள முடியும். ஆனால் வேள்வி நடத்த முடியாது. நீதிமன்ற உத்தரவை மீறி இக்குற்றத்தைப் புரியும் கோவில் தர்மகர்த்தாக்கள் மற்றும் பூசகர்கள் இறைச்சிக் கடைச் சட்டத்தின் கீழ் மற்றும் மிருகங்களைக் கொடுமைப்படுத்தும் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள்.

அத்துடன்ஆலயங்கள் சீல் வைக்கப்படும் எனவும் நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். (செ-9)

# இலங்கைக்கு காலநீடிப்பு வழங்கக்கூடாது - வைகோ

(சென்னை)

இலங்கைக்கு தொடர்ந்தும் காலநீடிப்பு வழங்கக் கூடாது என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளருக்கு, வைகோ கடிதம் அனுப்பியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் 34ஆவது அமர்வு தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வருகிறது.


இந்த நிலையில் மனித உரிமைகள் ஆணையாளருக்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ மின்னஞ்சல் மூலம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட ஓர் அரசியல் கட்சியாகும். ஈழத் தமிழர்கள் சார்பிலும் உலகத் தமிழர்கள் சார்பிலும் நீதி கேட்டு இக்கோரிக்கை மனுவினை அனுப்புகிறேன்.

2015 மார்ச் 2 முதல் 27 வரை ஜெனிவாவில் நடைபெற்ற 28வது ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மான எண் 30/1 இன்படி இலங்கை அரசு அப்பொழுது ஒப்புக்கொண்டபடி எதனையும் நிறைவேற்றாமல் நிராகரித்த நிலையில், இதுகுறித்து இலங்கை அரசுக்கு எந்தவித நீட்டிப்பும் தரக்கூடாது என வேண்டுகிறோம்.

2015 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுவதுமாகச் செயற்படுத்துவதாக இலங்கை அரசு வாக்குறுதி அளிக்கும் விதத்தில் தானும் முன்மொழிந்தது. போதுமான கால அவகாசமும், நீட்டிப்பும் கொடுக்கப்பட்டும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட எந்தச் செயலையும் இலங்கை அரசு முன்னெடுக்கவில்லை.

இனப்படுகொலைக்கு ஆளான ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்பும், நீதியும் ஐ.நாவின் மனித உரிமைக் கவுன்சில் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்ற, இலங்கைப் பிரச்சினையை ஐ.நாவின்



பொதுச் சபைக்கு எடுத்துச் செல்லவும், பொதுச் சபை அதனை பாதுகாப்பு கவுன்சிலுக்கு கொண்டு செல்லவும் உரிய பரிந்துரையைச் செய்ய வேண்டும்.

அதன்மூலம் அகில உலக குற்றவியல் நீதிமன்றத்தில் இப்பிரச்சினை எடுத்துச் செல்லப்பட வேண்டும். மனிதகுலத்திற்கு எதிராக வட கொரியா நடத்திய கொலைக் குற்றத்துக்கு பொறுப்பேற்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியதைப் போல இலங்கைப் பிரச்சினையில் "அனைத்துலக குற்றவியல் தீர்ப்பாயம்" அமைக்கப்பட வேண்டும்.

இலங்கை அரசுக்கு இதற்கு மேலும் கால நீட்டிப்பு கொடுத்தால் தமிழர்களின் பாதுகாப்பு ஆபத்துக்கு ஆளாவதோடு அதிகளவில் மனித உரிமைகள் நசுக்கப்படும் அபாயமும் உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

இந்து சமுத்திரத்துக்கு அச்சுறுத்தலாக

# கடல்சார் பயங்கரவாதம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

இந்து சமுத்திரத்தில் வலுவடைந்துவரும் அச்சுறுத்தலாக கடல்சார் பயங்கரவாதம் காணப்படுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய பெண்டேஷன் என்ற சுயாதீன ஆய்வு மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயங்கரவாத தடுப்பு மாநாட்டில் பங்கேற்று உரையாற்றும் போதே பிரதமர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், கடல்சார் உட்கட்டமைப்புக்களை பயங்கரவாதக் குழுக்கள் இலக்கு வைக்கலாம் எனவும் கூறியுள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் பிராந்திய நாடுகளுக்கு இடையில் நெருங்கிய ஒத்துழைப்பின் அவசியத்தையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் செல்வாக்குள்ள அமைப்புக்கள் அல்லது தனிநபர்கள் பிராந்தியத்தில் அதிக சக்தியுடன் இயங்குவதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடல்வழி பயங்கரவாத செயற்பாடுகளில் இருந்து இந்து சமுத்திரத்தை பாதுகாக்க வேண்டுமாயின், ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் எனவும் இவ்வாறான பயங்கரவாத செயற்பாடுகள் பொருளாதார வளர்ச்சிக்கு பாதிப்பாக அமையும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பயங்கரவாதத்திற்கு நிதி வழங்குவதை தடைசெய்வதுடன், அதனை சமாளிப்பதற்கு வலுவானதும் செயற்றிறன்மிக்கதுமான பொறிமுறையொன்று அவசியம் எனவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு பிராந்திய நாடுகளுக்கு இடையில் மிக நெருங்கிய ஒத்துழைப்பு அவசியம் எனவும் தனிமனிதப் பயங்கரவாதி, மற்றைய ஒருவரின் விடுதலையாளராக நடத்த முடியாது எனவும் அவர் கூறியுள்ளார். (செ-11)

# மகிந்த இன்று வாக்குமூலம்

பாரிய ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று வாக்குமூலம் அளிப்பதற்காக அழைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கடந்த ஜனாதிபதி தேர்தல் காலப் பகுதியில் விளம்பரங்களை காட்சிப்படுத்தியமை, தேர்தல் காலத்தில் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படுத்தப்பட்டதாக கூறப்படும் நஷ்டம் குறித்த விசாரணைகளுக்காக வாக்குமூலம் அளிக்கவே அவரை அழைத்துள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும் நாட்டு மக்களின் வரிப்பணத்தை தேர்தல் விளம்பரத்திற்காக பயன்படுத்தியமை தொடர்பில், இன்று காலை 10.00 மணிக்கு ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு மகிந்தவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# 4-வது முறையாக அர்ஜுனிடம் விசாரணை

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் நேற்றைய தினமும் முன்னிலையாகியுள்ளார்.

திறைசேரி பிணை முறிபத்திர மோசடி தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காக அவர் நேற்றைய தினம் ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி அர்ஜுன் மகேந்திரன், ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் 4ஆவது முறையாகவும் முன்னி லையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

யாழ்ப்பாண பொதுநூலகம்



## கனடா வர்த்தக...

யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்டிருந்த கனடா இலங்கை வர்த்தக அமைப்பின் கனடா பிரதிநிதிகள் குழு வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயை சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன் பல்வேறு தரப்புக்களுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தது. குடா நாட்டின் வர்த்தக முதலீடுகள் குறித்து ஆராய்வதற்கு 40 பேர் கொண்ட குழு நேற்றைய தினம யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தது.

இந்த விஜயத்தில் யாழ்.குடாநாட்டில் முதலீடுகளை மேற்கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை துரித படுத்துவதே குறித்த குழுவின் பிரதான நோக்கமாக இருந்தது. இந்த முதலீட்டாளர்கள் குழு நேற்று பிற்பகல் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தது. இந்த சந்திப்பில் வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள், போருக்கு பின்னரான முதலீடுகளில் வெளிநாட்டவர்களின் ஆர்வம் போன்ற விடயங்கள் கலந்துரை யாடப்பட்டன.

இந்த விடயங்களுக்கான தீர்வுகள் குறித்தும் ஆளுநர் கரு த்துக்களை முன்வைத்துள்ளதாக அறிய முடிகின்றது. எனினும் போருக்கு பின்னர் வடக்கில் முதலிடுபவர்களின் எண்ணிக்கை சற்று அதிகரித்து வருவதாகவும் ஆளுநரால் கூறப்பட்டுள்ளது.

இது போன்ற முதலீடுகளை அதிகரிப்பதே தமது விஜயத்தின் நோக்கம் எனவும், வடக்கில் பாரிய முதலீடுகளை மேற்கொண்டு அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பில் கவனம் செலுத்தப்படும் எனவும் குறித்த குழு ஆளுநரிடம் கூறியுள்ளது. மேலும் மேற்படி குழுவினர் பல்வேறு அரசியல் தரப்புக்கள், யாழ்ப்பாண முதலீட்டாளர்களுடனும் சந்திப்பை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## நாடு கடத்தப்பட்ட...

இவர்கள் மலேசியாவில் இருந்து அவுஸ்ரே லியாவுக்கு சட்ட விரோதமாக சென்றதாக கூறப்படுகிறது.

நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த 25 இலங்கை அகதிகளும், குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட 25 அகதிகளில், நான்கு பெண்களும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## முற்றுப்புள்ளி...

2009-க்குப் பிறகு இலங்கையில் தமிழர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள். உடலியல் ரீதியாக மட்டுமல்லாமல் உளவியல் அடிப்படையிலும் அந்த மக்கள் எப்படியெல்லாம் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை முற்றுப்புள்ளியா? என்கிற ஈழப் போர் குறித்தான சமீபத்திய திரைப்படம் பதிவு செய்துள்ளது.

இந்தப் படத்தின் இயக்குநர் ஷெரின் சேவியர். இவர், மனிதநேய செயற்பாடுகளுக்காக பிரான்ஸின் உயரிய செவாலியே விருதைப் பெற்ற முதல் இலங்கைப் பெண்மணியும் ஆவார்.

இந்நிலையில் அண்மையில் ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டி வருமாறு,

**கேள்வி:**-ஈழப் போர் தொடர்பான பல புத்தகங்கள், திரைப்படங்கள் வந்தபடி இருக்கின்றன. முற்றுப்புள்ளியா? திரைப்படம் எடுக்கப்பட, தனிப்பட்ட காரணம் ஏதேனும் உள்ளதா?

**பதில்:**-நான் 1987இல் இலங்கையிலிருந்து திருச்சிக்கு வந்தவள். போராளிகளுக்கு வக்கீலாக என் அப்பா செயல்பட்டு வந்ததால், நாங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருந்தோம். இலங்கைக்கு இடையிடையே சென்று வந்தபடி இருந்தேன்.

2007-ல் போர் தீவிர நிலையை அடைந்த காலகட்டத்தில் அங்குதான் இருந்தேன். நான் தமிழ்ப் பெண் என்றாலும், ஒரு சர்வதேச மனித உரிமை ஆர்வலராக அவர்கள் என்னை அங்கே அனுமதித்திருந்தார்கள். சர்வதேச நீதிமன்றங்கள் குற்றங்களாக வரையறுத்திருந்த அத்தனை விஷயங்களும் அங்கே அரங்கேறின.

மனித உரிமை ஆர்வலராக இருந்தும் எங்கள் கைகள் கட்டப்பட்டிருந்தன. சிலசமயம் எங்கள் மீதும் தாக்குதல் நடந்தது. இதை எப்படியேனும் ஆவணப்படுத்த வேண்டும் என்ற முயற்சிதான். முற்றுப்புள்ளியா?

**கேள்வி:**-போரினால், தனிப்பட்ட முறையில் உங்களுக்கு என்ன மாதிரியான பாதிப்புகள் ஏற்பட்டன?

**பதில்:**-மனிதநேய செயற்பாட்டாளர் என்பதால், சர்வதேச அளவில் பல நாடுகளில் நான களப்பணியில் ஈடுபட்டிருக்கிறேன். ஆனால், நான் பிறந்த மண்ணில் என்னால் செயல்பட முடியவில்லை. 2008-ம் ஆண்டு செப்டம்பர் 16ஆம் திகதி மையப்பகுதியான வன்னியிலிருந்து மனிதநேய ஆர்வலர்கள் அத்தனை பேரும் இராணுவத்தினரால் கூண்டோடு வெளியேற்றப்பட்டோம். தவறு நடக்கப் போகிறது என்று தெரிந்திருந்தது. ஆனால், எங்களால் அங்கே ஒன்றும் செய்யமுடியவில்லை.

**கேள்வி:**-போர் பற்றிய படைப்புகள் கமர்ஷியல் ஆகிவிட்டதாக நினைக்கிறீர்களா?

**பதில்:**-போர் பற்றி மீண்டும் மீண்டும் நினைவுபடுத்த இத்தகைய ஆவணங்கள் தேவை. அவற்றை சாதாரணம் என ஒட்டு மொத்தமாகப் புறம்தள்ள முடியாது. அதைப் பற்றி வெளிவரும் புத்தகங்கள், திரைப்படங்கள் என அனைத்துமே ஏதோ ஒரு விதத்தில் அங்கிருக்கும் மக்களுக்கு உதவியபடிதான் இருக்கின்றன.

ஆனால், சிலசமயம் கலை என்கிற போக்கில் அது மிகைப்படுத்தப்படுகிறது. வன்னியில் இருந்த அனைத்துப் பெண்களுமே பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்று ஒரு செய்தி வெளியானதைப் பார்த்தேன். பெண்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது. சொல்ல முடியாத வகையில், உடல் ரீதியான துன்புறுத்தல்களை சிலருக்கு இராணுவம் கொடுத்தது.

ஆனால், அனைத்துப் பெண்களுமே பாதிக்கப்பட்டார்கள் என்பது போன்ற செய்திகள் மிகவும் அக்கறையற்றதாக இருந்தன. இது, அந்த மக்களை உளவியல்ரீதியாக அனைத்து வகையிலுமே பாதித்தது. இதுபோன்ற தவறுகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

**கேள்வி:**-போர் நிறுத்த ஒப்பந்தம் செய்ததுதான் எல்லா பிரச்சினைக்கும் காரணம் எனத் திரைப்படத்தில் கூறியிருந்தீர்களே?

**பதில்:**-அங்கே இருக்கும் மக்கள் அப்படித்தான் நினைத்தார்கள். அதுவரை வலுவாக அவர்களைப் பாதுகாத்து வந்த அமைப்பும் அதன் பிறகுதான் பிரச்சினைகளை அதிகம் சந்திக்கத் தொடங்கியதாக எண்ணுகிறார்கள்.

**கேள்வி:**-படத்தில் வரும் ஆதிரை பாத்திரம் பற்றி?

**பதில்:**-போர் முடிவதற்குச் சில காலம் முன்புதான் ஆதிரையைச் சந்தித்தேன். ஆனால், ஆதிரைக்கு இருக்கும் மன வலிமையில் இரண்டு சதவிகிதம்கூட நம்மில் பலருக்கு இல்லை. தற்போது ஆசிரியையாக ஒரு பள்ளியில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார். மூன்று பிள்ளைகளைத் தனியாளாகத்தான் வளர்த்துக்கொண்டிருக்கிறார். போர்க் காலத்தில் காணாமல்போன தன் கணவர் மீண்டும் வருவார் என்கிற நம்பிக்கை இன்றும் அவரிடம் இருக்கிறது.

யாழ்ப்பாண சர்வதேச திரை விழாவில், இந்தப் படத்தை அவருக்குக் காண்பித்தேன். 'நீங்கள் என் கதாபாத்திரத்தை சாகாவரம் பெற்றதாக்கி விட்டீர்கள். நானே இறந்தாலும் என் கதாபாத்திரம் வழியாக என் கணவர் வருவார் என்கிற நம்பிக்கையுடன் நான் இருக்க முடியும்' என்று படத்தைப் பார்த்து முடித்த போது கூறினார்.

ஆதிரை, அங்கே வசிக்கும் பெரும்பாலான மக்களைப் பிரதிபலிப்பவர்.

**கேள்வி:**-அங்கே தற்போதைய சூழல் என்ன?

**பதில்:**-ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பிறகு அங்கே சூழல் கொஞ்சம் மாறி இருக்கிறது. ஆனால், தொடக்கத்தில் நுழைந்த இராணுவம் இன்றளவும் எண்ணிக்கையில் குறையவில்லை.

மூச்சுவிடுகிறோம். ஆனால், விடிவு எப்போது என்பதுதான் இன்னும் தெரியவில்லை என ஷெரின் சேவியர் குறிப்பிட்டார். (செ-11)

## சந்தேகத்தின்...

வருவதாவது,

பாடசாலையில் நடைபெற்ற வாய்த் தகாராறு ஒன்றின் நிமித்தம் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இரு மாணவ குழுக்களிடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த மோதலின் காரணமாக இடையிடையே இரு குழுவினரும் மோதலில் ஈடுபட்டு வந்துள்ளனர். குறித்த இரு மாணவ குழுக்களும் பொலிஸாரால் இனங்காணப்படாத நிலையில் நேற்றைய தினம் குழு ஒன்று வாள்வெட்டில் ஈடுபட இருப்பதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

இதனையடுத்து குறித்த பாடசாலை சூழலில் யாழ்.பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸாரால் சிவில் உடையில் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது குறித்த பகுதியில் மாணவர் குழு ஒன்று சந்தேகத்திற்கிடமான முறையில் நின்றுள்ளது. இதனை அடுத்து அவர்களிடம் மேற்கொண்ட, விசாரணைகளை அடுத்து எட்டுப்பேர் கைது செய்யப்பட்டனர். அதில் 3 பேர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். ஏனையோர் யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கைதான மாணவர்கள் மேற்படி வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்காலம் என சந்தேகப்படும் நிலையில், இவர்கள் மீதான விசாரணைகள் முடிவுற்ற பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பொலிஸார் தெரிவித்திருந்தனர். (செ-4,9)

## கலப்பு நீதிமன்ற...

வருவதற்கு இடமளிக்கமாட்டோம். அவர்கள் பலவந்த மாக வருவதற்கும் இடமளிக்க மாட்டோம்.

உள்ளக விசாரணை மூலம் நீதி வழங்கும் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு எமது நாட்டின் நீதிபதிகளுக்கு திறமை உள்ளது. சர்வதேச நீதிபதிகள் என்ற பேச்சுக்கே இடமில்லை.

அத்துடன் மனித உரிமை செயற்பாடுகளை முன்னேற்றும் விடயத்தில் நாங்கள் நினைத்ததையே செய்வோம் . அதை எங்களுக்கு தேவையான நேரத்திலேயே செய்வோம்.

யாரும் எங்களுக்கு கால அட்டவணை கொடுக்க முடியாது, ஆனால் நாங்கள் சர்வதேச தரத்தின்படி இந்த செயற்பாடுகளை மேற்கொண்டு சர்வதேசத்திற்கு அறிவிப்போம். அதற்கு இரண்டு வருடம் மூன்று வருடம் என அவகாசம் வழங்க முடியாது.

இவ்வாறு எம்மை கட்டுப்படுத்தவும் எவருக்கும் உரிமையில்லை.

நாம் கொழும்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கண்காணிப்பு அலுவலகம் அமைப்பதற்கும் இடமளிக்கமாட்டோம். அவ்வாறானதொரு தீர்மானத்திற்கு இணக்கம் வெளியிடமாட்டோம். நாம் கூறுவதையே இன்று சர்வதேசம் நம்புகிறது. மாறாக புலிகள் ஆதரவு மற்றும் ஈழ ஆதரவு அமைப்புக்கள் கூறுவதை சர்வதேசம் ஒரு போதும் நம்பப்போவதில்லை என பிரதியமைச்சர் அஜித் பீ பெரேரா மேலும் தெரிவித்தார். (செ-11)

## பேருந்தில் கடத்த...

கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பிரிவில் கிளிநொச்சி பொலிஸ் நிலையப் போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாரின் விசேட வீதிப் பரிசோதனையின் போது யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு இ.போ.ச பேருந்தில் கடத்தப்பட்ட கேரளக் கஞ்சா பொதி கனை கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் இரு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளார். இச்சம்பவம் நேற்று புதன்கிழமை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு அரச பேருந்தில் கஞ்சா கடத்திச் செல்வதாக கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு முன்பதாக ஏ9, வீதியில் விசேட வீதிப்பரிசோதனையில் ஈடுபட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் பேருந்தை தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது பயணப் பையினுள் மறைத்து வைத்திருந்த இரு கிலோ கேரளக் கஞ்சா பொதிகளை கைப்பற்றியுள்ளதுடன் அதனை பயணப் பொதியில் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரு நபர்களையும் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடை பெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த உள்ளதாகவும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-15)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
af
பிரெஞ்சு வகுப்புக்கள்
யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்
பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
(இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது)


பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்.
(யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை)
International Diploma A 1 பரீட்சைக்கட்டணம்
AF இல் படிப்போருக்கு 4000/- ஏனையோருக்கு 10300/- யாழில் எங்கு படித்தாலும் இப்பரீட்சையை எமது AF இல் மட்டுமே எழுத முடியும்.
ஆரம்பம் சில தினங்களில், உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
021 222 8093 61, கச்சேரி- நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ் நிலையம் → புகையிரதக் கடவை → AF (வெள்ளை மாடிக் கட்டடம்)
(8323)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(சி-7779)

A/L - DAY CLASS
புவியியல் - N.BABU
* அலகு ரீதியிலான மீட்டல்
* அலகு ரீதியிலான பரீட்சைகள்
* புதிய அனுமதிகள் வழங்கப்படும்
♦ திங்கள், புதன், வெள்ளி – 6 am
♦ சனி, ஞாயிறு – 11 am
DMI - ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்
(C-7817)

V2 TRAVELS
தை மாதம் தங்கம் வென்ற அதிஸ்டசாலி

சிங்கப்பூர் 1 பவுண்
அதிஸ்ட எண்.-N/13JAN17/1371/152
சி.தேவராசா
கரணவாய், கரவெட்டி
இவர் 13-01-2017 அன்று எமக்கூடாக 1கிலோ பொதி ஜெர்மனிக்கு அனுப்பினார்
நீங்களும் தங்கம் மற்றும் மோட்டார் சைக்கிள் வெல்ல
வாய்ப்புக்களுக்கு: 0768226240
(சி-7796)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.